உ

அன்பளிப்பு

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திருவேகம்பரந்தாதி.

3913.5
(8181)

திருவாவடுதுறையாதீனத்துச்

சிவஞானசுவாமிகள்

அருளிச்செய்தது.

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

இராமநாதபுரம்

இராமசுவாமிப்பிள்ளை

செய்தவுரையுடன்

சென்னப்பட்டணம்:

கலாநிதியச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பிரபவஞு பங்குனிமீ 1868

ஆக்கியோன்பெயர்.

கங்கையு மலரின் மங்கையும் பரசுங்
காமநோக் கம்மைவண் டங்கை
கொங்கைகண் ணெழுங்கத் தழுவலு முழுதுங்
குழைந்தருள் கம்பரஞ் சோதி
சங்கையின் முமமைத் தமிழ்ப்புல வோர்க
டமக்கொரு காட்டதா வமைத்தான்
செங்கைகள் கூபபித் தவர்புகழ் துறைசைச
சிவஞான முனிவரன் மாதோ.

☞ இவ்வந்தாதியிலே காப்பும் முதலிறுதிகளில் ஆறுசெய்யுட்களும் இறந்துபோயின.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திருவேகம்பரந்தாதி

மூலமும் உரையும்.

கருமங்கையாரமருமத்தரேத்துசெங்காந்தளைநி
கருமங்கையாரமருமத்தாவாழகச்சிபோலவெப்பாங்
கருமங்கையாரமருமத்தர்வாய்மைகதிர்ப்பசசெனற
கருமங்கையாரமருமத்தமுங்கடநதெயதலென்றே.

இதனது பதப்பொருள். கரு மங்கை ஆர் அ மருமத்தர் ஏத்து - பெருமையாகிய இலக்குமி தங்கிய அந்தமார்பினையுடைய விஷ்ணுமூர்த்தி துதிக்கின்ற—செங்காந்தளை நிகரும் அங்கையார் அமரும் அத்தர் வாழ் கச்சி போல - செங்காந்தண்மலர் போலும் அகங்கையினையுடைய உமாதேவியார் பொருந்திய பாதித்திருமேனியையுடைய திருவேகம்பநாதர் வாழுங் காஞ்சிநகரம்போல,— எப்பாங்கரும் அம் கையார் அமரும் அத்தர் - எவ்விடத்துமுள்ள நல்லொழுக்கத்தினையுடையார் விரும்புந் தலைவர்—வாய்மை கதிர்ப்பச் சென்ற கரும் மையார் - (இந்நாள் வருவேமெனத் தாங்கூறிய) மெய்மை விளங்கச் சென்ற கருமத்தின்கண் உவர்ப்புறார்;—

அமரும் அத்தமும் கடந்து எய்தல் என்று - (ஆதலால் அந்த ப்) போனாயுங் காட்டையும் நீந்தி (இத்தேயத்தை) அணுக ல் எந்நாளோ என்றவாறு. பாங்கியே யான் அறியேனென ப து எஞ்சி நின்றது. முதலடியில் அம்மருமத்தமொன்பது அம ருமத்தமென மகரவொற்றுத் தொக்கு நின்றது. செங்காநத ள் ஆகுபெயர். இரண்டாமடியில் அகங்கையென்பது அங்கை யென நின்றது. நல்லொழுக்கமுடையராலே காஞ்சிநகரம் போல விரும்பப்படுந் தலைவரென்க. ஏ ஈற்றசை. [போாவ யிற் சென்ற தலைவனிடத் தலைவி வருந்தல்.] (௪)

என்பங்கம்பங்கம்படச்சூழெனிலெங்குஞ்செல்சரணுக்
கென்பங்கம்பங்கம்பதித்தபிரான்கச்சியெய்துவம்வா
வென்பங்கம்பங்கம்பிகையுறச்சேர்த்தவனெம்பெருமா
னென்பங்கம்பங்கம்பியாவண்ண மேத்துவ மேழைநெஞ்சே.

(இ - ள்.) என் பங்கம பங்கம் படச் சூழ் எனில் - என து பாவம் பினமடையும்வண்ணம் பிரதக்ஷிணஞ் செய் யென்றால்,—எங்கும் செல் சரணுக்குப பங்கு என் - எவ்வி டத்தும் ஓடித் திரியும் பாதங்களுக்கு முடம் யாது!—அம்பு அம் கம் பதித்த பிரான் கச்சி எய்துவம் - (ஆதலால்) கங் கையை அழகிய முடியிலே தரித்த திருவேகம்பநாதருடைய காஞ்சிபுரத்தை (நாம்) அடைவேம்,—வா - (நீ) வருவாயா க,—என்பு அங்கம் பங்கு அம்பிகை உறச் சேர்த்தவன் - (அ டைந்து) எலும்புகளையணிந்த திருமேனியிலே வாமபாகத்தி ல் உமாதேவியார் தங்கும்வண்ணம் வைத்தவனென்றும்,— எம்பெருமான் என்பம் - எமது பெருமானென்றும் ஓதி—க ம்பம் கம்பியா வண்ணம் ஏத்துவம் - (அந்நகரத்துள்ள) திரு வேகம்பமாகிய ஆலயத்திலே (புகுந்து) சலியாத திடப்பே

ம,—ஏழை நெஞ்சே - பேதைமனமே. எ-று. மனமே பிரத கூஷிணஞ்செய்யென்றால் பாதங்களுக்கு முடம் யாது ஆதலா ல் காஞ்சிபுரத்தை நாம் அடைவேம், அடைந்து வைத்தவரொ ன்றும் பெருமானென்றும் துதிப்பேம் வருவாயாகவெனக் கூட்டுக. இறுதியடியில் என்பம் முற்றெச்சம். (உ)

சேகரநதோயமுடித்தோயிருள்சிந்தையார்க்கப்பரி
சேகரந்தோயமலாகச்சியேகம்பசேரலாநஞ்
சேகரந்தோயனலாவென்றுசிந்தைசெயயாதமலச்
சேகரநதோயமனுள்வருங்காலையென்செயகுவரோ.

(இ - ள்.) சேகரம் தோயம் முடித்தோய் - திருமுடிக்க ண்ணே கங்கையைத் தரித்தவரோ,—இருள சிந்தையார்க்கு அ ப்பரிசே கரந்தோய் - இருண்ட மனத்தை யுடையவர்களுக்கு அப்படியே ஒளிந்தவரோ,—அமலா - மலமுத்தரோ,—கச்சி ஏக ம்ப - காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்குந் திருவேகம்பநா தரோ,—சேரலர் நஞ்சே - அடையாதவர்களுக்கு விஷமா யுள்ளவரோ,—கரம் தோய் அனலா - கையிலே பொருந்திய அக்கினியையுடையவரோ,—என்று சிந்தை செய்யாத மலச் சேகர் - என்று சிந்தியாத ஆணவவயிரமுடையவர்கள்— அந்தோ யமன் ஆள் வரும் காலை என் செய்குவர் - ஐயோ! யமதூதர் வந்து நெருங்கிய காலத்தே யாது செய்வார்கள். எ-று. (ந)

குவலையமாமைவிழியார்மயக்கிற்கொட்கும்புலையேன்
குவலையமாமையுருவெனக்காலன்குறுகிலென்செய்
குவலையமாமைதருங்கச்சியேகம்பகோளரவா
குவலையமாமைமிடறுடையணியுரக்கொண்டகொள்கையனே.

(இ - ள்.) குவலையம் ஆம் மை விழியார் மயக்கில் கொட்கும் புலையேன் - கருங்குவளை மலர்போலும் மையணிந்த கண்களையுடைய பெண்களது மையலிற்பட்டுழலும் புன்மையேன்,—கு அலைய மா மை உரு எனக் காலன் குறுகில் என செய்குவல் - பூமி அலையும்படி பெரிய மேகத்தின்வடிவம் போல இயமன் அணுகில் யாது செய்வேன்!—ஐய - ஐயனே,—மாமை தரும் கச்சி ஏகம்ப - அழகினைப் பொருந்திய காஞ்சீபுரத்தில் வாழுந் திருவேகம்பநாதரே,—கோள் அர வாகு வலயம் ஆமையின் ஓடு அணியாக் கொண்ட கொள்கையனே - வலிய பாம்பைத் தோளணியாகவும் ஆமையினோட்டை மார்பணியாகவும் பூண்டருளிய கோட்பாட்டினையுடையவரே. எ-று. மூன்றாமடியில் அராவென்பது அரவென நின்றது.(சு)

கைக்கடக்கும்பக்களிறுமைவாயிலுங்கைவசஞ்செய்
கைக்கடக்கும்பக்கமேகவொட்டாதெமர்காள்பொன்னுல
கைக்கடக்கும்பக்கபூஞ்சினைமாவுறைகம்பன்வெண்ண
கைக்கடக்கும்பக்கதிர்முலைபாகனைக்கண்ணுமினே.

(இ - ள்.) கைக் கடக் கும்பக் களிறு ஆம் ஐ வாயில் - துதிக்கையையும் மதத்தையும் மத்தகத்தையுமுடைய யானைகளாகிய ஐம்பொறிகளையும்—உம் கைவசம் செய்கைக்கு - உங்கள் வசமாக்கற்பொருட்டு—பக்கம் ஏக ஒட்டாது அடக்கும் - பக்கத்திலே செல்லவொட்டாமல் (அவைகளை) அடக்குங்கள்;—எமர்காள் - நம்மவர்களே,—பொன் உலகைக் கடக்கும் பக்க பூம் சினை மா உறை கம்பன் - சுவர்க்கலோகத்தைக் கீழ்ப்படுத்து மேற்செல்லும் வகுப்பினவாய பொலிவுபெற்ற கவடுகளையுடைய மாமரத்தடியில் எழுந்தருளியிருக்குந் திருவேகம்பநாதரும்—வெள் நகைக் கடக் குமப

க் கதிர் முலை பாகனைக் கண்ணுமின் - வெள்ளிய தந்தங்களையும் குடமாகிய கும்பம்போலும் ஒளிபொருந்திய தனங்களையுமுடைய உமாதேவியாரை வாமபாகத்தேயுடையவருமாகிய சிவபிரானைத் தியானியுங்கள். எ-று. கதிர்முலை அன்மொழித்தொகை. (௫)

மின்னலங்காரம்புபெய்யாதுறமிக்கிராசிகடம்
மின்னலங்காரகனிற்பினுமென்மின்னனாகுமினகு
மின்னலங்காரம்பெறநடஞ்செயவியன்கச்சியைச்சேர்
மினனலங்காரப்பணியான்கம்பந்தொழுவீரனபரோ.

(இ - ள்.) மின்னல் அம் கார அமபு பெயயாது உற - மின்னலையுடைய அழகிய மேகம் ஜலத்தை வருஷியாவண்ணம்—இராசிகள் தம்மின் நல் அங்காரகன மிக்கு நிற்பினும் என் - (கடக மகர மீனங்கள் அல்லாத நிரச்சல) ராசிகளில் நலல செவவாய் காலநீட்டித்து நின்றாலும் யாது (இடையூறு நிகழும்!)—மின் அனார் குமின் குமின அலங்காரம் பெற நடம் செய் வியன் கச்சியைச் சேர்மின் - மின்போலும் பெண்கள் குமின் குமினென்னும் ஒலிக்குறிப்போடு அழகு வாய்ப்ப நிருத்தஞ்செய்கின்ற பெருமையாகிய காஞ்சிபுரத்தை அடையுங்கள்,—அன்பரோ அலங்கு ஆரப் பணியான் கம்பம் தொழுவீர் - தொண்டர்களே அசைகின்ற சர்ப்பாபரணத்தையுடைய சிவபெருமானது திருவேகம்பத்தை வணங்குங்கள். எ-று. இரண்டாமடியில் நல்லங்காரகனென்பது நலங்காரகனென லகரவொற்றுத் தொக்கது. அன்னாரென்பது அனாரென இடைக்குறைந்து நின்றது. ஏனையடிகளில் னகரவொற்றுக்கள் விரிந்து நின்றன. (௬)

அன்பரவைக்களஞ்செல்லேன்கம்பம்பணியாதபுலே
யன்பரவைக்களநதீமழுவோயென்றரற்றித்துழா
யன்பரவைககளநதன்புசெய்யேன்மெய்யறிவுகுறி
யன்பரவைக்களங்கத்தேனெவ்வாறருள்கூடுவதே.

(இ - ள.) அன்பர் அவைக்களம் செல்லேன் - (யான்) அடியாாகளுடைய சபையிலே போகின்றிலேன்;—கம்பம் பணியாத புலேயன் - திருவேகம்பத்தை வணங்காத புன்மையேன்;—பரவைக் களம் தீ மழுவோய் என்று அரற்றித் துழாயன் பரவு ஐக்கு அளந்து அன்பு செய்யேன் - கடலினின்றும் தோன்றிய விடம் நெருப்பாய்ச் சுடுகின்றது மழுப்படையை யுடையவரோ என்று ஓலிட்டுத் துளசிமாலையையணிந்த விஷ்ணுமூர்த்தி துதிக்கப்பெற்ற கடவுளாகிய திருவேகம்பநாதருக்கு அளவிடடாதல் பத்திசெய்கின்றிலேன்;—மெய் அறிவு குறியன் - உண்மைஞானத்தைக் கருதுகின்றிலேன்;—பரவைக் களங்கத்தேன் - (இங்ஙனம்) பெருங்குற்றத்தையுடைய அடியேன்—எவ்வாறு அருள் கூடுவது - எவ்வண்ணம் திருவருள் பெறுவது. எ-று. (எ)

தேங்கடியாரரவார்சடையார்திருக்கம்பந்தொழு
தேங்கடியாரரவந்திகழுகாஞ்சியிற்சென்றுசிவந்
தேங்கடியாரரவோசைசெவிமடுத்தேமினிமுந்
தேங்கடியாரரந்தைப்படுங்கும்பியிற்செல்வழிக்கே.

(இ - ள.) தேம் கடி ஆர் அரவு ஆர் சடையார் திருக்கம்பம் தொழுதேம் - தேனையும் மணத்தையுமுடைய ஆத்திமாலையும் பாம்பும் பொருந்திய சடையையுடைய சிவபெருமானது திருவேகம்பத்தை வணங்கினேம்;—கடி ஆர் அரவம் திகழ

காஞ்சியில் சென்று - கலியாணத்தினது பேரொலி விளங்குங் காஞ்சீபுரத்திற் போய்,—சிவம் தேங்கு அடியார் அர ஓசை செவி மடுத்தேம் - சிவானந்தவெள்ளநததும்பும் உள்ளமுடைய அன்பர்களது அரகரவென்னும் முழக்கத்தை இரண்டு காதுகளாலும் உண்ணப்பெற்றேம்,—இனி மூந்தேம்- (ஆதலால்) இனி யாங்கள் முற்படமாட்டேம்,—கடியா அரநதைப்படும் கும்பியில் செல் வழிக்கு - கொடிய பாவிகள துன்பப்படும் நரகத்துக்குச் செல்லும் மார்க்கத்தில். எ-று. வழிக்கென்பது வேற்றுமைமயக்கம். மார்க்கத்தில் யாங்கள் முற்படமாட்டேமெனக் கூட்டுக. (அ)

கேதனக்கேதனமன்வரிலச்சங்கெடுத்தருள்சங்
கேதனக்கேதனவல்லார்மதிகெடக்கட்டியகைக்
கேதனக்கேதனமாமுமைபாற்கிளர்வோன்கச்சிநி
கேதனக்கேதனவாஞன்கம்பந்தொழக்கேடிலையே.

(இ - ள்.) கேதன் - ஒளியையுடையவரும்—அக்கேதநமன் வரில் அச்சம் கெடுத்தருள் சங்கேதன - அததுனபத்தைச செய்கின்ற இயமன வரும்வழி (அடியாருக்குப்) பயததைப போக்கியருளும் நியமத்தையுடையவரும்—அக்குத் தன வல்லார் மதி கெட அரைக்குக் கட்டி - சங்குமணியை முலைகளாகிய சூதாடுகருவியையுடைய பெண்கள் மனம் அழியும்படி அரையின்கண்ணே அணிந்தவரும்—தனக்கே தனம் ஆம் உமையால் கிளர்வோன் - தமக்கேயுரிய பொருளாகிய உமாதேவியாரிடத்தே மனவெழுச்சியுடையவரும்—கச்சி நிகேதனக் கேதன ஆனன் - காஞ்சிநகரத்துத் திருக்கோயில்ல் எழுந்தருளியிருக்கும் இடபக்கொடியையுடையவருமாகிய சிவபிரானது—கம்பம் தொழக் கேடு இலை - திருவேகம்பத்தை வண

ங்கத் திங்கில்லையாம். எ-று. கேது ஒளி. கட்டி என்பது பெயர். அரைக்கு வேற்றுமை மயக்கம். ஏ இரண்டும் அசைகள்.

கேட்டையறுமயமாங்கம்பங்கிட்டவொட்டாதமதன்
கேட்டையறுமயன்மீறச்செய்திங்கைக்கெடுத்தியெனக்
கேட்டையறுமயங்கேலெனவாண்டனன்கேழரியாங்
கேட்டையறுமயனுமறிவாரவன்கீர்த்திகளே.

(இ - ள்.) அறுமயம் ஆம் கம்பம் கிட்ட ஒட்டாத கேட்டை - நோயில்லாததாகிய திருவேகம்பத்தை அணுகவொட்டாத பொல்லாங்கையும்—மதன் தையல் கேள் நாம் மயல் மீறச் செய திங்கை - மன்மதன் பெண்களுறவால் (விளையும்) அச்சநதரும் மயக்கத்தை விருத்திசெய்தலாலாகும் கேட்டையும்—கெடுத்தி எனக் கேட்டு - (நீர்) போக்கியருள்வீராக என்று அடியேன் விண்ணப்பஞ்செய்யத் திருச்செவிசாத்தி,—ஐயன - திருவேகம்பநாதர்—ஆ மயங்கேல் என ஆண்டனன்- ஆ மயக்கமுறுதேயென்று சொல்லி அடிமைக்கொண்டருளினர்;—கேழ் அரியாம் கேட்டையனும் அயனும் அவன் கீர்த்திகள் அறிவாா - (கரிய) நிறத்தையுடைய விட்டுணுவாம் இந்திரனும் பிரமதேவனும் அப்பெருங்கருணைப்பெருமான் பெரும்புகழ்களை அறியவல்லவர். எ-று. ஆ அருளின்கட்குறிப்பு(௧௦)

திகழுமலத்தகத்தாளாடொழக்கம்பஞ்சேர்ந்துறைசோ
திகழுமலத்தகப்பட்டுழல்குண்டனைச்சேர்த்திடுமூர்த்
திகழுமலத்தகத்தெங்கோன்றன்கோன்சிவஞானமளித்
திகழுமலத்தகட்டாள்வாயென்பார்க்கருள்செய்திடுமே.

(இ - ள்.) திகழும் அலத்தகத் தாளாள் தொழக் கம்பம்

பாதங்களையுடைய உமாதேவியார் வணங்கத் திருவேகம்பத்திலே பொருந்தி எழுந்தருளியிருக்கின்ற சோதியாகியும்— கழு மலத்து அகப்பட்டு உழல் குண்டரைச் சேர்த்திடு மூர்த்தி - கழுமரத்திலே மும்மலங்களாற்பந்திக்கப்பட்டுச் சுழலுஞ்சமணரை ஏற்றுவித்த மூர்த்தியும்—கழுமலத்து அகத்து எங்கோன் தன்கோன் - சீர்காழியின்கண் (அவதரித்த) எங்கள் தலைவருமாகிய ஆளுடையபிள்ளையாருடைய இறைவராகியுமுள்ள சிவபெருமான்—அத்த சிவஞானம் அளித்தி கழுமல் கட்டு ஆள்வாய் என்பார்க்கு அருள் செய்திடும் - பிதாவே சிவஞானத்தைத் தந்தருளும் துன்பத்தைக் களைந்து அடிமைக்கொண்டருளும் என்று விண்ணப்பஞ் செய்பவர்களுக்கு (அங்ஙனமே) கருணைசெய்வர், எ-று. (கக)

செய்யவையம்புயம்வைத்தாளும்வேந்தர்திருவுங்கைப்பச
செய்யவையம்புயம்ன்போலுநோக்கியர்தீமையறச்
செய்யவையம்புயமார்கச்சியேகம்பஞ்சென்றுபத்தி
செய்யவையம்புயனேர்களத்தாயெங்கள்சிறபரனே.

(இ - ள்.) செய்ய வையம் புயம் வைத்து ஆளும் வேந்தர் திருவும் கைப்ப - செவ்விதாகிய உலகத்தைத் (தமது) புயத்திற்பொறுத்து ஆளுகின்ற அரசர்களுடைய செல்வமும் உவர்க்கவும்,—செய்ய லவ அம்பு யமன்போலும் நோக்கியர் தீமை அற - சிவந்த கூர்மையாகிய பாணமும் இயமனும்போலும் கண்களையுடைய பெண்களாலாகிய தீங்கு கெடவும்,—செய் அவை அம்புயம் ஆர் கச்சி ஏகம்பம் சென்று பத்தி செய்ய - கழனிகடோறும் தொகுதி தொகுதியாகத் தாமரைகள் நிறைந்த காஞ்சிபுரத்துள்ள (உமது) திருவேகம்பத்திற்போய் அன்புசெய்யவும்,—வை... கருணைசெய்தருளும்,—அம் பு

யல் நேர் களத்தாய் - நீருண்ட மேகம் போலும் கரிய கண்டத்தையுடையவரோ—எங்கள் சிற்பரனே - எமது ஞானரூபியாகிய பரம்பொருளே. எ-று. (கஉ)

பரவாதவந்தனையன்போல்வளர்த்துப்படித்துளறும்
பரவாதவந்தனையந்தோவிடேனினிப்பார்வெறுந்தா
பரவாதவந்தனைசெய்யடியார்தம்பணிசெயென்றம்
பரவாதவந்தனையீந்தனையேபழங்கம்பத்தனே.

(இ - ள்.) பரவாது அவம் தனையன்போல் வளர்த்துப படித்து உளறும் பர வாத - (குருலிங்கசங்கமங்களை) வழிபாடுசெய்யாது பயன்படாத உலகவியல்களைப் புதல்வனைப்போல விருத்திசெய்து (அவற்றிற்குரிய நூல்களைக்) கற்றுப் பிதற்றுகின்ற மிக்க தருக்கத்தையுடையாய்,—அந்தோ வந்தனை இனி விடேன் பார் வெறும் தாபர ஆத - ஐயோ வர்தகப்பட்டாய் இனி விடேம் காண்பாயாக பயனற்ற மரம்போலும் அறிவில்லாதவனே—வந்தனை செய் அடியார்தம் பணி செய் என்று - (நம்மை) வழிபடுந்தொண்டர்களது தொண்டைச் செய்வாயாக என்று சொல்லியருளி,—தவந்தனை ஈந்தனையே - சிவபுண்ணியத்தைக் கொடுத்தருளினீரன்றே,—அம்பரவா பழங் கம்பத்தனே - ஞானாகாசமாயுள்ளவரே பழமையாகிய திருவேகம்பவாணரே. எ-று. (கந)

பத்திக்கணங்கணமாநின்றுபோற்றும்பழவடியார
பத்திக்கணங்கணவேகம்பத்தாய்பத்துமுற்றுகருப
பத்திக்கணங்கணங்கெய்தலென்றன்னைபண்பாகியென்று
பத்திக்கணங்கணபாதவிர்த்தாண்டருள்பாலிப்பையே.

(இ - ள்.) பத்திக் கணம் கணமா நின்று போற்றும் - வரிசையுற்றுக் கூட்டங்கூட்டமாக நின்று துதிக்கும்—பழ அடியார் பத்திக்கண் அங்கு அணவு ஏகம்பத்தாய் - பழைய அடியார்களுடைய அன்பினிடத்து அங்கே கலந்தருளும் திருவேகம்பநாதரே,—பத்தும் முறறு கருப்பத்திக்கு அணங்கு அணங்கு எய்தல என்று அனனை பண்பாகி - பத்துமாதமும நிறையப்பெற்ற கருப்பவதிபொருட்டுப் பெண்ணே துனபமடையாதேயெனச் சொல்லியருளித் தாயுமானவரே,—கணபா - கணங்களைக் காப்பவரே,—என் ஆபத்து இக்கணம் தவிரத்து ஆண்டு அருள் பாலிப்பை - அடியேனது துக்கத்தை இப்போதே போக்கி அடிமைக்கொண்டு கருணைசெயதருளு ம். எ-று. அன்னை பண்பாகியெனபது பெயா. (கஉ)

பாலிக்குமரிக்குந்தாணிழலவெபபம்பணிமொழியாற
பாலிக்குமரிக்குமாறுசெய்வாாபடிந்தாடிடாதன
பாலிக்குமரிக்குடிகளுக்குமெய்தரும்பாககியங்கொள
பாலிக்குமரிக்குவாழ்வானகச்சிப்பதிக்கம்பனே.

(இ - ள்.) தாள் நிழல் பாலிக்கும் வெப்பம் அரிக்கும்-(அடைநதவர்களுக்குத் தமது) திருவடிநீழலைக கொடுததருளுவர் பிறவி வெம்மையைக் கெடுத்தருளுவர்,—பணி மொழியால் பால் இக்கு மரிக்குமாறு செய்வார் தன்பால் படிந்து ஆடிட - மெல்லிய வசனத்தாற் பாலினசுவையும் கரும்பின்சுவையும் கெடும்வண்ணம் செய்யும் பெண்கள் தன்னிடத்தே அமைந்து மூழ்கும்பொருட்டு—இக் குமரிக் குடிகளுக்கும் எய்த அரும் பாக்கியம் கொள் - இந்தக்குமரியாற்றுக்கும் பெறுதற்கரிய செல்வம் பெற்ற—பாலிக் குமரிக்கு வாழ்வான கச்சிப்பதிக் கம்பனே - பாலிநதியாகிய கன்னிக்கு இடமா

கிய காஞ்சிபுரத்து வீற்றிருக்கும் திருவேகம்பநாதரோ எ-று. திருவேகம்பநாதரோ திருவடிநீழலைக் கொடுத்தருளுவர் பிறவி வெம்மையைக் கெடுத்தருளுவரெனக் கூட்டுக. எய்த அருமென்பது எயதருமென அகரந்தொக்கது. ஏனையறிபிரமேநதிராதியரைப பிரித்து நிற்றலால இறுதி ஏகாரம் பிரிநிலை. (கரு)

பதிகம்பரம்பரர்க்காவதுகாஞ்சிபணிபணியென்
பதிகம்பரம்பரசாயுதமாம்பத்திசெய்பவரேற
பதிகம்பரம்பரவுந்தொடைமூவர்பகர்ந்தருளும்
பதிகம்பரம்பரமானநதமேயுருப்பார்ப்பவர்ககே.

(இ - ள்.) கம்பர் அம்பரர்க்குப் பதி ஆவது காஞ்சி - திருவேகம்பரும் ஞானகாசரூபியுமாகிய சிவபெருமானுக்கு நகரமாவது காஞ்சிபுரமாகும்,—பணி பணி என்ப - ஆபரணமாவது பாம்பாகும் என்று சொல்லுவர்,—அம்பரம் திக் ஆடையாவது திக்காகும்,—ஆயுதம் பரசாம் - படைக்கலமாவது மழுவாகும்,—பத்தி செய்பவர் ஏற்பது இகம் பரம் - அன்புசெய்வோர் ஏற்றுக்கொள்வது இம்மை மறுமைப்பயனாகும்,—பரவும் தொடை மூவர் பகர்நதருளும் பதிகம் - துதிக்கப்படும் மாலையாவது (திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருநாவுக்கரசுநாயனார் சுந்தரமூர்த்திநாயனார் என்னும்) மூவர் முதலிகள் திருவாய்மலர்ந்தருளிய தேவாரப்பதிகமாகும்,—பார்ப்பவர்க்கு உருப் பரம் பரமானந்தமே - (பதிஞானத்தால்) நோக்குவோர்க்குத் திருமேனியாவது மேம்பட்ட பரமசுக வடிவமாகும். எ-று. (கசு)

பவனனகன்றலைவன்காஞ்சிவாழ்பழங்கம்பமெனும்
பவனனகன்றலைஞாலமெலாந்தொழப்பட்டகடம்

பவனனகன்றலைவற்றநெஞ்சோர்வினைப்பஞ்சினுக்கின்
பவனனகன்றலைமாலையனென்றென்றுபாடுதுமே.

(இ - ள்.) பவன் - விசுவகாரணர்—அனகன் - மலரகிதர்—தலைவன் - (எப்பொருட்கும்) இறைவர்—காஞ்சி வாழ் பழம் கம்பம் எனும் பவனன் - காஞ்சிபுரத்தில் இருக்கின்ற பழைய திருவேகம்பமென்னும் ஆலயத்தையுடையவர்—தலை அகல் ஞாலம் எலாம் தொழப்பட்ட கடம்பவனன் - இடமகன்ற உலகமுழுதும் வழிபடப் பெற்ற கதம்பவனத்தில வீற்றிருப்பவர்—அகன்று அலைவு அற்ற நெஞ்சோர் வினைப் பஞ்சினுக்கு அனல் நக இன்பன - பிரிந்து (விடயங்களிற்) சுழலுதலில்லாத மனத்தையுடைய பரிபக்குவரது கன்மபாசமாகிய பஞ்சிற்கு அக்கினிமலைபோன்றும் ஆனந்தவடிவாயுள்ளவர்—தலை மாலையன் - சிரமாலைகளையுடையவர்—என்று என்று பாடுதும் - என்று பலமுறை (சிவபிரானைப்) பாடுவாம். எ-று. (கஎ)

பாடலம்போதுநிறைசிவகங்கைபடிந்துநித்தம்
பாடலம்போதுதொறுமீசன்கம்பன்பரனெனும்வாய்
பாடலம்போதுகுழல்விழிநாலெண்பகுப்பும்வளர்ப்
பாடலம்போததுமென்னேமெவ்வாறருள்பற்றுதுமே.

(இ - ள்.) பாடலம் போது நிறை சிவகங்கை நித்தம் படிந்து - பாதிரிமலர் நிறைந்த சிவகங்கையிலே நாடோறும் ஸ்நானஞ்செய்து—போது தொறும் ஈசன் கம்பன் பரன் எனும் வாய்பாடு பாடலம் - காலந்தோறும் ஈசன் கம்பன் பரன் என்று (ஆன்றோர்) திருவாக்கின் ஆட்சிப்பட்டு வரும் திருநாமங்களை உச்சரிக்கமாட்டேம்,—அல் அம்பு ஓது குழல் விழி நால் எண் பகுப்பும் வளர்ப்பாள் தலம் போததும் எ

ன்னேம் - இருளும் பாணமும் (முறையே) கூறுகின்ற கூந்தலும் கண்களுமாகப் பெற்று முப்பத்திரண்டு பிரிவினவாய தருமங்களை விருத்தி செய்கின்ற காமாக்ஷியம்மை யுடைய காஞ்சிநகரத்திற்குச் செல்லுவேமென்று சொலலமாட்டேம்,—எவவாறு அருள் பற்றுதும் - (இங்ஙனமாயின்) எங்ஙனம் திருவருள் கூடுவாம். எ-று. சிவபுண்ணியங்களைச் செய்வேமெனச் சிரத்தையோடு வாக்காற் சொல்லுதலும் செய்தலோடொக்குமென்பார் தலம்போதுதுமென்னேமென்றார்.

மேதகரக்கருந்தேவரும்யாவரும்வேட்கும்பரி
மேதகரக்கருமன்பருள்வாய்வெண்டரளம்பொன்கோ
மேதகரக்கருந்துன்றியகாஞ்சியின்மிக்ககமப
மேதகரக்கருங்கூந்தலுநீயும்விரும்பினையே.

(இ - ள்.) மேதகு அரக்கரும் தேவரும் யாவரும் வேட்கும் பரிமேத - மேன்மை பெற்ற அசுரரும் தேவரும் மானுடருமாகிய எல்லாரும் செய்கின்ற அசுவமேத வேள்விக்குத தலைவரே,—கரக்க அரும் அன்பு அருள்வாய் - ஒளித்தலில்லாத மெயயன்பை (அடியேனுக்குத்) தந்தருளும்,—வெண்தரளம் பொன் கோமேதக ரக்கரும் துன்றிய காஞ்சியின்- வெள்ளிய முத்தையும் பொன்னையும் கோமேதகரத்தினத்தையும் பேணும் வாணிகரும் (ஏனைச்செல்வரும்) நெருங்கிய காஞ்சி நகரத்தில்—மிக்க கம்பமே - மேம்பட்ட திருவேகம்பத்தின்கண்ணே,—தகரக் கருங் கூந்தலும் நீயும் விரும்பினை-மயிர்ச்சாந்தினை அணிந்த கரிய அளகத்தையுடைய உமாதேவியாரும் நீரும் காதலோடு வாழ்ந்திருக்கின்றீர். எ-று. இரண்டாமடியில் கரக்க அருமென்பது கரக்கருமென அகரந்தொக்கது. கருங்கூந்தல் அன்மொழித்தொகை. (கக)

விரும்பாவலருடம்பாய்மங்கைமார்கொங்கைமெல்லிதழ்க்க.
விரும்பாவலருடங்கும்படிகேண்மனமேயச்சந்த
விரும்பாவலருடனார்த்தழைவேய்ந்தவமெய்யறிவா
விரும்பாவலருடங்கேத்துகம்பாவென்றுவேண்டுவையே.

(இ - ள்.) விரும்பா அலர் உடம்பு ஆய் - (ஒருவரும) இச்சியாத பழிமொழிக்கே உடலாகி—மங்கைமார் கொங்கை மெல இதழ்க் கவிரும் பாவல் - பெண்களுடைய தனங்களையும் மென்மைபொருந்திய அதரமாகிய முருக்கம்பூவையும விரும்பாதே,—மனமே அருள் தங்கும்படி கேள - நெஞ்சமே திருவருள் பதியும்வண்ணம் (என் சொல்லைக்) கேட்பாயாக,—அச்சம் தவிரும் - (சனன) பயம் கெடும்,—பா அலருடன ஆர்த் தழை வேய்ந்தவ - அழகிய மலர்களோடு திருவாத்தித்தளிரும் சூடியவரே,—மெய் அறிவு அவிரும் பாவலர் உடங்கு ஏத்து கம்பா என்று வேண்டுவை - மெய்ஞ்ஞானம் விளங்குகின்ற கவிவாணர்கள் ஒருங்கு துதிக்குந் திருவேகம்பநாதரே என்று (துதித்து) வேண்டுவாயாக. எ - று.

வையம்பணிசிலைவேதற்குன்பாலினிவாழியென்றன்
வையம்பணிசிலைதென்காஞ்சிகாற்றனன்மாலென்பறம்
வையம்பணிசிலைவாழிடமீாக்குவட்காரைவெலலும
வையம்பணிசிலையேறுகக்கொண்டுவளர்கம்பனே.

(இ - ள்.) வேதற்கு உன்பால் இனிச் சில் பணியை வையம் வாழி என்றான் - பிரமதேவனுக்கு நின்பக்கல இனிச் சிறிதும் தொழிலை இடமாட்டேம் (நீ பேரின்பப் பெருவாழ்வு பெற்று) வாழக்கடவாய் என்று சொல்லியருளினார்,—வையம் பணி சிலை தென் காஞ்சி காற்று அனல் மால் என்பு அறம் - பூமியையும் பாம்பையும் மகாமேருமலையையும் அழ

ஙிய திருக்கச்சிநகரத்தையும் வாயுதேவனையும் அக்கினிதே ஙையும் விஷ்ணுமூர்த்தியையும் எலும்புகளையும், தருமதே தையையும் (முறையே)—வையம் பணி சிலை வாழ் இடம ர்க்கு வட்கானா வெல்லும் வை அம்பு அணி சிலை ஏருக கொண்டு வளா கமபன் - தேரும் ஆபரணமும் வில்லும் வ றறிருக்குந் தலமும் (அம்பின். இறகும் பகைவரை வெற கொள்ளத்தக்க (அஸ்திர) நுதியும் பாணமும் மாலையும் முழு கததையுடைய இடபமுமாகக் கொண்டு வாழாநின்ற திருவே கம்பாநாதா. எ-று. திருவேகம்பநாதர் சொல்லியருளினரெ னக் கூட்டுக. முதலடியில் சில்லென்பது சிறிதெனனும் பொ ருள் படவநதது. இறுதியடியில் அணி - மாலை. (உக)

கம்பரந்தாதிநிலம்வலென்றுதிகளங்கண்முகங்
சம்பரந்தாதியைகஞ்சமன்னாள்பங்கனேமுத்தியே [சொற்
கம்பரநதாதிருப்பூங்கொன்றையோடென்புங்கட்டியென்
சம்பரநதாதியுங்[illegible]கொண்டவாகச்சிகாவலனே

(இ - ள்.) கம் பரந்து ஆதி - ஆகாயத்திலே நிரநதரமா தலையுடையவரோ,—நிலம் வல் என்று ஆதி - பிருதிவியிலே கடினமாதலையுடையவரோ,—களம் கண் முகம் கம்பு அரம் தாது இயை கஞ்சம் அன்னாள் பங்கனே - கழுத்தும் கண் ணும் முகமும் (முறையே) சங்கையும் அரத்தையும் மகரந்த ம் பொருந்திய தாமரைமலரையும் போலாகப்பெற்ற உமா தேவியாரை (வாம) பாகத்தில் வைத்தருளியவரோ,—ஏகம் பரம் முத்தி தா - ஒன்றாகிய பரமுத்தியைத் தந்தருளும்,— திருப் பூம் கொன்றையோடு என்பும் கட்டி - அழகிய பொ லிவுபெற்ற கொன்றைமாலையுடன் (இழிந்த) எலும்புமாலை யையும் அணிந்தவரோ,—ஆன் சொல் கம்பர் அந்தாதியும் கை

க்கொண்டவா - (ஆன்றோருடைய பாமாலையுடன்) எளியேனு டைய பாமாலையாகிய இத்திருவேகம்பரந்தாதியையும் அங் கீகரித்தருளியவரோ,—கச்சி காவலனே - காஞ்சிபுரத்தைக் காப்பவரோ. எ.று. பரமுத்தியைத் தந்தருளுமென்பதை இ றுதிபிறக்கூறிக்கொள்க. (உஉ)

வலங்கொடியானத்தன்பாளர்கள்சூழ்செந்தின்மாநகர்ச்சே
வலங்கொடியானத்தனுங்காமக்கோட்டிமணாளனைநா [க
வலங்கொடியானத்தன்போலானென்றேத்தல்செயவாமினிக்
வலங்கொடியானத்தன்மன்வாதனையைமருவலமே.

(இ - ள்.) தியானத்து வலங்கொள் அனபாளர்கள் சூ ழ் - (திருவடிச்) சிந்தனையோடு பிரதக்ஷிணஞ் செய்கின்ற மெய்யடியார் சூழ்கின்ற—மா செந்தில் நகர்ச் சேவல் அம கொடியான் அத்தன் ஆம் காமக்கோட்டி மணாளனை - பெரிய திருச்செந்தூராகிய திருப்பதியில் வாழுகின்ற சேவலை (வ ரைந்த) அழகிய கொடியையுடைய முருகக்கடவுளது பிதா வாகிய காமாக்ஷியம்மைக்குத் தலைவராகிய திருவேகம்ப நாதரை,—நாவலம் கொடியான் நத்தன் போலான் என்று ஏ த்தல் செய்வாம் - நாக்கின்கணுள்ள கொடிபோலும் சர சுவதியையுடைய பிரமதேவரும் சங்கையுடைய விஷ்ணு மூர்த்தியுமாய பசுக்கள்போலாத பரமபதியென்று துதிக்க ப்பெற்றேம்,—இனிக் கவலம் - இனி வருந்தேம்,—கொடியா ன் அத் தன்மன் வாதனையை மருவலம் - குரூரனாகிய அவ் வியமன் செய்யுந் துன்பத்தை (மனமே யாம்) எய்தமாட் டேம். எ - று. மூன்றுமடியில் வலம் ஏழுனுருபு. (உங)

வலமாயக்கண்டகரளவென்றேத்திடின்வல்வினைய
வலமாயக்கண்டகத்தேகுடிகொண்டிறைக்கனைய

வலமாயக்கண்டகத்தான்பானுவாநின்றுவாழ்வித்திடும்
வலமாயக்கண்டகரூரெரித்தேகம்பம்வாழ்முதலே.

(இ - ள்.) வலமாய் அக் கரள கண்ட என்று ஏத்திடின் - (நாம் சிவாலயத்தைப்) பிரதக்ஷிணஞ்செய்து அந்நஞ்சையடக்கிய கழுத்தையுடையவரோ என்று துதிக்கின்,—அவலம் வல் வினை மாயக் கண்டு மநக் களைய வலமா - துன்பத்தைத்தருகின்ற வலிய கன்மத்தைக் கெடச்செய்து மலதிரோதங்களை நீக்க வல்லமையாகும்படி—அகத்தே குடி கொண்டு - (எமது) நெஞ்சத்தில் வதிந்தருளி,—யக் கண் தசத்தான் பானுவா நின்று வாழ்வித்திடும் - ஆன்மாக் கண்போலாகத் தாம் ஆதித்தனாக நின்று (எம்மைத் தந் திருவடிக்கீழ் இருத்தி) வாழச்செய்வர்,—வலம் மாயக் கண்டகா ஊர் எரித்து ஏகம்பம் வாழ் முதல் - வெற்றியையும் வஞ்சகத்தையுமுடைய அசுரரது முப்புரத்தையும் தகித்துத் திருவேகம்பத்தின் வீற்றிருக்கின்ற முதற்கடவுள். எ - று. (உச)

முதலையையாவிகர்ந்திபங்காத்தவன்மொய்மலர்த்தாள்
முதலையையாவிக்வானஞ்சுமாடிமுழுமலர்விம்
முதலையையாவிக்கமழ்கஞ்சனுடவுமுற்படுமம்
முதலையையாவிகலலையென்னுண்டமுறைகம்பனே.

(இ - ள்.) முதலையை ஆவி கரந்து இபம் காத்தவன் முதலையை உயிர் கவர்ந்து யானையைக் காத்தவராகிய விஷ்ணுமூர்த்தி—மொய் மலர்த் தாள் முதலை (நாடவும்) - இதழ்கள் செறிந்த தாமரைமலர் போலும் பாதங்களாகிய அடியைத் தேடவும்,—ஐ ஆ இக ஆன் அஞ்சும் ஆடி முழு மலர் விம்மு தலையை - அழகிதாக(இப்) பூமியினுள்ள பசுக்களது பஞ்சகவ்வியத்தினும் மூழ்கிச் சிதையாத அலர்கள் நிறையப்பெ

ற்ற முடியை—ஆவி கமழ் கஞ்சன் நாடவும் - மணங்கமழ்கின்ற செந்தாமரைமலரிலிருக்கும் பிரமதேவர் தேடவும்,—முற்படும் அம் முதலை - கடந்து செல்லும் அந்தத்தலைமைப்பாட்டையுடையீர்,—(அங்ஙனமாகவும்)—ஐயா - ஐயரே,—கம்பனே - திருவேகம்பநாதரே,—விகலனை ஆண்ட முறை என் - அறிவுக்குறைபாடுடைய அடியேனை அடிமைக்கொண்ட நெறி யாது. எ-று. (உரு)

பன்னந்தனவனமாக்கேங்கம்பன்பழையோனெனும்பே
பன்னந்தனவனப்பிற்கழிவேம்பசுந்தாமரையின்
பன்னர்தனவனம்போற்பற்றறேமெபபடிகொல்வெள்ளி
பன்னந்தனவனம்போதனெய்தாப்பதஞ்சார்வதுவே.

இ-ள்.) பல் நந்தன வனம் ஆக்கேம் - பலவாகிய பூந்தோட்டங்களை வையேம்,—கம்பன் பழையோன் எனும் பேர் பன்னம் - திருவேகம்பநாதர் அநாதியேயுள்ளவர் என்னுந் திருநாமங்களை உச்சரியேம்,—தன வனப்பிற்கு அழிவேம் - (பெண்களுடைய) முலைகளின் அழகுக்கு அறிவு பறிபோவேம்,—பசும் தாமரையின் பன்னம் தன வனம்போல் பற்று அறேம் - பசிய தாமரையிலையிலே தங்கிய அறபமாகிய ஜலம்போலப் பற்று ஒழியேம்,—வெள் இபன் நந்தன் அவ அனம் போதன் எய்தாப் பதம் சார்வது - (இங்ஙனமாகிய நாம்) வெள்ளையானையையுடைய இந்திரனும் சங்கையுடைய விஷ்ணுமூர்த்தியும் அவ்வன்னவாகனத்தையுடைய பிரமதேவரும் அடையாத பரமுத்தியை அடைவது—எப்படிகொல-எவ்வண்ணம்! எ-று. மூன்றுமடியில் தன்னவென்பது தனவென இடைக்குறைந்து நின்றது. கொல் அசை. (உசு)

சாறுவதீர்த்தநறுநீரிலேகம்பர்தாமுலவுஞ்
சாறுவதீர்த்தனென்றேத்திடுமேதியைத்தண்கருப்பஞ்
சாறுவதீர்த்தலைக்குங்காஞ்சிகாசிகமலைதண்கஞ்
சாறுவதீர்த்தவொப்பின்பெயர்நீங்கிடச்சார்மனமே.

(இ-ள்.) சாறுவதீர்த்த நறு நீரில் ஏகம்பர் தாம் உலவும் சாறு உவ - சுறுவதீர்த்தத்தின் மணம் பொருந்திய சலத்திலே திருவேகம்பநாதர் பவனிவரும் தெப்போற்சவத்தை (த்தரிசித்து) மகிழ்வாயாக,—தீர்த்தன் என்று ஏத்திடு - சுததனொன்று (அவனைத்) துதிப்பாயாக,—மேதியைத் தண் கருப்பம் சாறு அது ஈர்த்து அலைக்கும் - எருமைகளைக் குளிர்ந்த கருப்பஞ்சாறு இழுத்து அலைக்கின்ற—காஞ்சி காசி கமலை தண் கஞ்சாறு - காஞ்சிபுரம் வாராணசி திருவாரூர் தண்ணிய கஞ்சாறு (என்னுந்தலங்களை)—உவ தீர்த்த ஒப்பின் பெயர் நீங்கிடச் சார் மனமே - உகார வகாரங்களாகிய இரண்டெழுத்துக்களை நீத்த உவமை என்னும் மையாகிய ஆணவமலங்கெடச் சார்ந்து வசிப்பாயாக நெஞ்சமே. எ-று.(உஎ)

மனவகங்கைக்கனத்தானனற்போற்றிமறக்கவெய்யா
மனவகங்கைக்கனற்காரற்குமைக்குமகவைத்தொழ
மனவகங்கைக்கனக்கோனன்பர்தாடொழுவைத்திகம்ப
மனவகங்கைக்கனத்தார்முத்தஞ்சேர்கச்சிவாணவனே.

(இ-ள்.) மன அகம் கைக் கனத்து ஆனனற் போற்றி - மனத்தினிடத்தே கையாகிய பாரத்தையுடைய முகத்தினராகிய விநாயகக்கடவுளை வழிபட்டு,—மறக்க எய்யாமல் - மீட்டு இளையாமல்—நவ கங்கைக்கு அனற்கு ஆரற்கு உமைக்கு மகவைத் தொழ - புதுமையாகிய கங்காதேவி

க்கும் அக்கினிதேவனுக்கும் கார்த்திகைப்பெண்கள் அறுவ ர்க்கும் உமாதேவியார்க்கும் குமாரராகிய முருகக்கடவுளை வணங்கவும்,—மனவ - சந்துமணியையுடையவரே,—கம் லகக கனக் கோன் - தலைமாலையாலாகிய அலங்காரத்தை யுடைய சீர்மை பொருந்திய இறைவரே,—அன்பர் தாள் தொழ - அடியார்களுடைய திருவடிகளை வணங்கவும்,— வைத்தி - (திருநோக்கஞ்)செய்தருளும்,—கம்ப மனவ - தி ருவேகம்பத்திறகுத் தலைவரே,—கங்கைக் கனத்து ஆர் மு த்தம் சேர் கச்சி வானவனே - வரம்பை மேகத்திலே பொ ருந்திய முத்துக்கள் சேர்கின்ற காஞ்சிபுரத்தில் எழுந்தருளி யிருக்குங்கடவுளே. எ-று. (உஅ)

வானங்கனைகடலாய்ப்பரந்தான்வன்கரிகரக்க
வானங்கனைகடவாநடஞ்செய்கச்சிவாணனபொன்னேர்
வானங்கனைகடமாவுரியான்கம்பமாவடிவாழ்
வானங்கனைகடனீதெனக்காட்டிவந்தாண்டனனே.

(இ - ள்.) வானம் கனை கடலாய்ப் பரந்தான் - ஆகாய மாயும் ஒலிக்கின்ற சமுத்திரமாயும் வியாபித்தவரும்,—வன் கரிகரக் கவான் அங்கனைகள் தவா நடம் செய் கச்சிவாணன்- வலிய யானையினது துதிக்கைபோலும் தொடையையுடைய பெண்கள் நீங்காது நிருத்தம்புரிகின்ற காஞ்சிபுரத்து வாழ்கி னறவரும்—பொன் நேர்வான் - பொன்போல்பவரும்—அம் கல னை கடம் மா உரியான் - அழகிய மலையும் மையத்தக்க மதம் பொருந்திய யானைத்தோலையுடையவரும்,—கமப மா அடி வாழ்வான் - திருவேகம்பமாகிய மாமரத்தடியில் வீறறி ருப்பவருமாகிய சிவபெருமான்—அங்கு ஆனை கடன ஈது எனக் காட்டி வந்து ஆண்டனன் - அங்கே மாதாவின் முறை

மை இஃதென்று அறிவித்து வந்து (அடியேனை) அடிமைக் கொண்டருளினர். எ-று. (௨௯)

ஆண்டவனாரணன்கம்பனென்றேத்தவயன்சுரர்பல்
லாண்டவனாரணனோடடியேனுமணைந்திடிற்பே
ராண்டவனாரணந்திசன்கணங்களிவ்வாலயத்து
ளாண்டவனாரணவுற்றானென்றுதுள்ளழைத்தருளே

(இ - ள்.) ஆண் தவன் ஆரணன் கம்பன் என்று ஏத்த - ஆடவருள் நாயகரோ வேதார்த்தமாயுள்ளவரோ திருவேகம்ப நாதரோ என்று துதிக்கும்பொருட்டு—அயன சுரர் பல்லாண்டவன் நாரணனோடு - பிரமனும் தேவர்களும் பல்லாண்டையுடைய விட்டுணுவுமாகிய இவர்களோடு—அடியேனும் அணைந்திடில் - அடியேனும் (உமது சந்நிதானத்தை) அடையப்பெறுதல்,—பேர் ஆண்டவன் நார் அண் நந்திசன் கணங்கள் - சீர்த்திபெற்றவராகிய அன்புசெறிந்த திருநந்திதேவரும் (அவராணைவழி ஒழுகும்) சிவகணர்களும்,—இவ் ஆலயத்துள் ஆண்டு அவன் ஆர் அணவுற்றான் என்று - இத்திருக்கோயிலின்கண்ணே அவ்விடத்தே அவன் யாவன் அணுகினானென்று சுட்டிப் புறக்கணித்துக் கூறுவண்ணம்—உள் அழைத்தருள் - அத்திருவேகம்பத்துள்ளே (அடியேனைக்) கூவியருளும். எ-று. (௩௦)

உள்ளலைவாளைதலைப்படுமோடையுடுத்தகச்சி
யுள்ளலைவாளைநன்னீலஞ்செங்காசுமிழ்கம்பத்தனே
யுள்ளலைவாளையரிக்கண்ணிகாமனுக்குமம்புக்
குள்ளலைவாளையதார்க்கொன்றையீந்தவனுயவண்ணமே.

(இ - ள்.) உள்ளலை வாளை தலைப்படும் ஓடை உடுத்த கச்சியுள் - உள்ளலாகிய மீன்களை வாளைமீன்கள் அகப்படு

த்துகின்ற வாவிகள் சூழப்பெற்ற காஞ்சி நகரத்துள்ள—அலை வாளை நல் நீலம் செங்காசு உமிழ் கம்பத்தனே - இருளையும் ஒளியையும் நல்ல மரகதமணியும் செம்மணியும் உமிழப் பெற்ற திருவேகம்பவாணரோ,—உள்ளலை - (நீர் திருவுளத்தே) கருதவில்லை,—வாள ஐ அரிக் கண்ணி காமன் உருக்கும் அம்புக்கு உள் அலைவாள் - வாள் போன்ற அழகிய வரி பரந்த கண்களையுடைய இப்பெண் மன்மதன் ஏவும் பஞ்சபாணத்தகப்பட்டுச் சுழல்வாள் (என்பதை அறிந்தும்)—ஐய - ஐயரோ—கொனலறத் தார் ஈந்து அவள் உயவண்ணம் - கொன்றைமாலை தந்தருளி அப்பெண் பிழைக்கும் முறைமையை. எ-று. திருவேகம்பவாணரோ ஐயரோ அறிந்தும் பிழைக்குமுறைமையைக் கருதவில்லையெனக் கூட்டுக. [நறறுயிரங்கல்.] (௩௧)

வண்ணஞ்சிவந்தவரேகமபாக்கார்மொழிவார்மறையின்
வண்ணஞ்சிவந்தவமாஞர்பிரானமுடிவாழ்மதிக்க
வண்ணஞ்சிவநதவமேயிரவாடிநனமாமைகெடும்
வண்ணஞ்சிவந்தவநங்கனுக்கேகங்கிவருநதுவதே.

(இ- ள்.) வண்ணம் சிவநதவர் ஏகம்பாக்கு ஆர் மொழிவார் - சிவந்த திருமேனியையுடையாராகிய (அந்த) திருவேகம்பநாதருக்கு யாவர் (சென்று) சொல்வார்!—மறையின் வண்ணம் தவம் சிவம் ஆஞர் பிரான் முடி வாழ் மதிக்க - வேதத்திற் (கூறப்படும்) திருவைநதெழுத்தை (உச்சரித்தலாகிய) சிவபுண்ணிய முதிர்ச்சியிஞலே (ஒருவாற்ருற) சிவமான அடியாரகளுடைய இறைவரது சென்னிக்கண்ணே வசிக்கும பிறையின்பொருட்டு—அவண் அஞ்சி வந்து அவமே ஈர வாடி - அங்கே (கண்ணுற்றுப்) பயநது போந்து

வீணாக (மதி) பிளக்கப்பட்டு மெலிந்தும்,—நன் மாமை கெடும் வண்ணம் சிவந்த அநங்கனுக்கு ஏங்கி வருந்துவது - நல்ல அழகு அழியும்படி கோபங்கொண்ட மன்மதனொருட்டு அழுதும் என் புதல்வி துன்பம் அடைவதை. எ-று. துன்பம் அடைவதை அத்திருவேகம்பநாதருக்கு யாவர் சொல்வாரெனக் கூட்டுக. இரண்டாமடியில் வண்ணம் அக்கரம். [நற்றாயிரங்கல.] (கஉ)

வருந்தலைவாமனனேமதன்சாபம்வணக்கியெய்ய
வருந்தலைவாமனனேயயனேமற்றைவானவர்யா
வருந்தலைவாமனனேகம்பனென்னுமெம்மானகரந்தை
வருந்தலைவாமனனேகனுதற்கணைவாழ்த்துதியே.

(இ - ள்.) மனனே வா வருந்தலை - நெஞ்சமே வருத்தமாயாக வருத்தமுறுதே,—மதன் சாபம் வணக்கி எய்ய வரும் தலை - மன்மதன் வில்லை வளைத்து (ப் பாணங்களை) த்தொடுக்க வாதவிடத்து—வாமனனே அயனே மற்றைவானவர் யாவரும் - விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவரும் ஏனைத்தேவர்களுமாகிய எல்லோரும்—தலைவா மனனே கம்பன் என்னும் எம்மான் - இறைவரோ நிலைபெற்றவரோ திருவேகம்பநாதரோ என்று துதிக்கப்பெற்ற எங்கள்பெருமானும்—கரம் தைவரும தலை வாமன - திருக்கரத்திற் பரிசிக்கப்பெற்ற (பிரம, கபாலத்தையுடைய அழகரும்—அனேகன் - சர்வான்மாககளுமானவருமாகிய சிவபிரானது—நுதற் கணை வாழ்த்துதி - நெற்றிக்கண்ணைத் துதிப்பாயாக. எ-று. துதிக்கின் அம்மன்மதன் அதனுலனொன்பது எஞ்சி நின்றது. காமம் அங்குரிக்கும் போழ்தே களைதல்வேண்டுமென்பது கருத்து. (கங)

துதிகானனந்தலையேகம்பவாழ்வையந்தோமிக்கிரந்
துதிகானனந்தலைமூன்றுளானைத்தொழுந்தேவெனவாழ்த்
துதிகானனந்தலைநீத்தடந்தீத்தண்மைசூளையருந்
துதிகானனந்தலையாம்பதியென்றெண்ணிச்சூழ்மனனே.

(இ - ள்.) நம் தலை ஏகம்ப வாழ்வை அந்தோ மிக்கு இரந்து கானம் துதி - நமது முதற்பொருளாகிய திருவேகம்பப் பெருவாழ்வை ஐயோ பெரிதும் யாசித்துப் பண்ணுடனே துதிப்பாயாக,—திக் ஆனனம் மூன்று தலை ஆளைத் தொழும் தேவு என வாழ்த்துதி - நான்கு முகங்களையும் மூன்று சிரசுகளையுமுடைய பிரமதேவரும் விஷ்ணுமூர்த்தியுமாகிய இருவரையும் வழிபடு கடவுளென்று கருதிப் புகழ்கின்றாய் (அங்ஙனம் புகழ்தலை விட்டொழிந்து) [அடியாராக மதித்தல் வேண்டுமென்றபடி],—கானல் நந்து அலை நீத் தடம்- பெய்த்தேனாச் சங்குகள் அலைகின்ற ஜலத்தையுடைய வாவியென்றும்—தீத் தண்மை - அங்கியைக் குளிர்ந்த நீரென்றும்—சூளை அருந்ததி - வஸாவின் மகளினா (க்கட்வுட்கறபினையுடைய) அருந்ததியென்றும்—கான் நனந்தலை ஆம் பதி என்று - சுடலையை (நாட்டினது) நடுவிலுள்ளதாகிய நகரமென்றும்—எண்ணிச் சூழ் மனனே - (திரிபாகக்) கருதிச் சுழல்கின்ற நெஞ்சமே. எ-று. நெஞ்சமே இருவரையும் புகழ்தலைவிட்டொழிந்து திருவேகம்பப்பெருவாழ்வைத் துதிப்பாயாகவெனக் கூட்டுக. (௩௪)

மனமாலையாற்றவலைகடல்வீரமடியல
மனமாலையாற்றனவியத்தருமன்மதன்மதச
மனமாலையாற்றண்ணளிசுரந்தாள்கச்சிமாநகர்க்கு
மனமாலையாற்றவனேகம்பமேவிய

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.

(இ - ள்.) மனம் மாலை ஆற்ற - நெஞ்சமானது மயக்கத்தைச் சகிக்கவும்,—அலை கடல் வீரம் மடிய - திரையையுடைய சமுத்திரத்தினது வலி குன்றவும்,—நலம் மன - நன்மையானது பொருந்தவும்,—மாலை ஆற்றல் நலிய - அந்திக் காலத்தினது வலிமை கெடவும்,—தருமன் மதன் மதசமனம் - இயமனும் மன்மதனும் கொண்ட சினம் சாந்தமுறவும்,—மாலையால் தண் அளி சுரந்து ஆள் - (உமது) மாலையினால் குளிர்ந்த அருள் சுரந்து ஆண்டருளும்,—மா கச்சி நகர்க்கு மன - பெருமையாகிய காஞ்சீபுரத்திற்குத் தலைவரே,—மால் ஐயாற்றவனே - பெருமையாகிய திருவையாற்றையுடையவரே,—கம்பம் மேவிய வான் பொருளே - திருவேகம்பதில் வீற்றிருக்கும் பரம்பொருளே. எ - று. (ஙடு)

பொருந்தங்குமரிக்குறும்பறறிருவர்புகழ்சிவநதாய்
பொருந்தங்குமரிக்குமுள்ளேவினையென்றுபோய்க்கம்பமே
பொருந்தங்குமரிகருங்காறுமமர்பொன்னிசானவிதண்
பொருநதங்குமரிகருமேலாங்கம்பைப்புனலாடுநெஞ்சே.

(இ - ள்.) பொரும் தம் குமரிக் குறும்பு அற்று இருவர் புகழ சிவம் - (யான் பரம் யான் பரம் என்று) போர்புரிதற்குக் காரணமாகிய தமது அழிவில்லாத (மலத்தாலாகிய) பொல்லாங்கு நீங்கிப் (பிரம விஷ்ணுக்களாகிய) இருவரும் துதிக்கும் பரசிவமானது—தாய் பொரும் - மாதாவைப் போலும்,—உள்ளே தங்கும் - இருதயத்திலே வசித்தருளும்,—வினை அரிக்கும் - கன்மபாசத்தைக் கெடுத்தருளும்,—என்று போய் - என்று (சிந்தித்துச்) சென்று,—கம்பமே பொருந்து - (அப்பரம்பொருள் சிவலிங்கமூர்த்தங்கொண்டு வாழும்) திருவேகம்பத்தலத்தையே சார்வாயாக,—அங்கு மரிக்கு

3936581

ம் காறும் அமர் - அங்கே நீ இறக்கும்வரையும் வசிப்பாயா க,—பொன்னி சானவி தண் பொருந்தம் குமரிக்கு மேலாம் கம்பைப் புனல் ஆடு - காவேரி கங்கை குளிர்ச்சிபெறற தாமிரபுர்ணி கன்னியாநதி (முதலிய) நதிகளுக்கு மேம்பட்டதாகிய கம்பாநதியினது தீர்த்தத்தின் மூழ்குவாயாக,—நெஞ்சே - மனமே. எ-று. மூர்த்தி தல தீர்த்தங்களாகிய மும்மைச்சிறப்புமுள்ள சைவதலங்களிற் சிறந்ததாகலின், இவ்வாறு கூறினர். (௩௮)

சேயரியம்பகமானேபொருள்வயிற்சென்றவர்தாஞ்
சேயரியம்பகவாத்திடுங்காரவரிற்செய்வதெனனுஞ்
சேயரியம்பகவறகிங்கெனுச்சிறுத்தொண்டாதந்தஞ்
சேயரியம்பகம்பாவென்றென்றேதனுநதிறனல்லதே.

(இ - ள்.) சேய் அரி அம்பக மானே - சிவந்த வரி பொருந்திய கண்ணையுடைய பெண்ணே,—பொருள் வயின் சென றவர் தாம் சேயர் - பொருண்மேற் சென்ற தலைவரானவர் அரதேயத்தர்,—இயம் பக ஆர்த்திடும் கார் வரின் நாம் செய்வது என் - (ஆதலால்) வாச்சியங்கள் பிளவுபட முழங்குகின்ற கார்காலம் வந்தால் யாம் செய்வது யாது!—பகவறகுச் சேய் அரியம் ஈங்கு என்னுச் சிறுத்தொண்டர்தம் தஞ்சே - (வைரவவேடம் பூண்டெழுந்தருளிய) கடவுள்பொருட்டுப் புதல்வனை அறுக்கமாட்டேம் இவ்விடத்தென்று மறுத்துக் கூறுத சிறுத்தொண்டநாயனுரது பற்றுக்கோடாயுள்ளவரோ,—அரி அம்ப - விஷ்ணுமூர்த்தியாகிய பாணத்தையுடையவரோ,—கம்பா - திருவேகம்பநாதரோ,—என்று என்று ஏத்தும் திறன் அல்லது - என்று பலமுறை துதிக்குந்தகு

தியன்றி. எ-று. வேறு புகலின்றென்பது எஞ்சி நின்றது.
[கார்காலக்குறி கண்டு தலைவி கவன்றுரைத்தது.] (௩எ)

அல்லாக்குமாரணங்குற்றுயிர்த்தேங்குமருள்பொறைதை
யல்லாக்குமாரனன்னாருளாரென்னுமம்பகலை
யல்லாக்குமாரமடர்கச்சிககம்பரருட்குரிய
னல்லாக்குமாரனையீன்பயனீதென்னுமாயிழையே.

(இ - ள்.) அல்லாக்கும் - துன்பமுறுவள்,—ஆர் அணங்கு உற்று உயிர்த்து ஏங்கும் - மிகவருத்தமெய்திப் பெருமூச்செறிந்து அழுவள்,—அருள் பொறை தையல் ஆ குமாரன் அன்னார் அருளார் என்னும் - கருணையினும் க்ஷமையினும் அழகினும் பசுவும் பூதேவியும் மன்மதனும்போன்ற தலைவர் கருணைசெய்யாரென்று சொல்லுவள்,—அம் பகலை அல் ஆக்கும ஆரம் அடர் கச்சி - (அதற்குக் காரணம்) அழகிய பிலை (சந்திரகிரணம் வீசும்) இரவாகச் செய்கின்ற முத்துக்கள் நெருங்கிய காஞ்சிபுரத்தில் வாழும்—கம்பர் அருட்கு உரியன் அல்லாக் குமாரனை ஈன் பயன் ஈது என்னும் - திருவேகம்பநாதரது கருணைக்கு உரியவனாகாத புத்திரனைப் பெற்ற பேறுகிய இதுதானென்றும் சொல்லுவள்,—ஆய் இழை - ஆராய்ந்து செய்யப்பட்ட ஆபரணத்தையுடைய தலைவியானவள். எ-று. [புதல்வற்றூடு புலத்தல்.] (௩அ)

ஆயாதிருக்கச்சியேகம்பனின்னடியார்க்கடியே
னாயாதிருக்கச்சிவமெனபதென்றைதயாய்ந்தமற்றோன்
றாயாதிருக்கச்சிதானந்தமாயுமர்வண்ணமளி
யாயாதிருக்கச்சிதந்தறிவுருவாந்திருவே.

(இ - ள்.) ஆயா - (சர்வான்மாக்களுக்கும்) தாயாயுள்ளவரே,—திருக் கச்சி ஏகம்ப - அழகிய காஞ்சிபுரத்தில் வாழுந்

திருவேகம்பநாதரோ,—நின் அடியார்க்கு அடியேனாய் - (நாயினேன்) உமது தொண்டர்க்குத் தொண்டனேனாகி,—ஆதிருக்கு அச்சிவம் என்பது என்று அதை ஆய்ந்து - ஆன்மாவானது கணனும் அகரம்போன்ற சிவமானது சூரியனும் (எனச் சிவாகமங்களிற் கூறும்) ஆந்தஞானபாதப்பொருளை ஆராய்ச்சிசெயது—மற்று ஒன்று ஆயாது இருக்க - வேறொன்றனை ஆராய்ச்சிசெய்யாதிருக்கும்வண்ணமும,—சிதானந்தம் ஆய் அமர் வண்ணம - ஞானானந்தவடிவமாய் (நிட்டைபொருந்தி) இருக்கும் வண்ணமும்,—அசசுத திருகரு இது நீத்து - சரீரத்தைத (யானெனப் பறறச்செயகின்ற மலக்) குற்றமாய இதனைப் போக்கி—அறிவு உருவாம் திரு - சிவஞானவடிவமாகிய செல்வத்தை—அளியாயா - தநதருளமாட்டீரா. எ-று. (௩௧)

திருக்காமக்கோட்டமுதல்விபங்காண்டருள்செலவன்வினை
திருக்காமக்கோட்டமமாற்றிடுங்கம்பனறிருநதெழின்மு
திருக்காமக்கோட்டமளித்தானென்றேத்திநந்தீவினைப்பி
திருக்காமக்கோட்டமுறும்பாம்பரைக்கசைதேவனையே.

(இ-ள்.) திருக் காமக் கோட்ட முதல்வி பங்கு ஆண்டருள் செல்வன் - அழகிய காமக்கோட்டத்தில் வாழுங் காமாட்சியம்மையைப் (பாதித்திருமேனியில்) வைத்தருளிய செல்வனொன்றும்—வினை திருக்கு ஆமக் கோள் தமம் மாற்றிடும் கம்பன் - கன்மபாசத்தையும் மாயாபாசத்தையும் ஆன்மாவைப் பந்தித்த மலமாகிய வலிய இருளையும் (தமதடியாருக்குப்) போக்கியருளும் திருவேகம்பநாதரென்றும்,—திருந்து எழில் முதிருக்கு ஆம் அக்கோட்டம் அளித்தான் என்று ஏத்தி - திருந்திய அழகின் முதிர்ச்சிப்பொருட்டு

(க் காஞ்சிநகரத்திற்கு) நிலையுடைய அநதத்தடாகங்களைக் கொடுத்தருளினாரென்றும் துதித்து,—நம் தீவினைப் பிதிர் உக்காம் - (மனமே) நமது தீவினையாகிய பொடியை உதிர்த்தொழித்தேம்,—அக்கு ஓட்டம் உறும் பாம்பு அரைக்கு அசைசேவனை - சங்குமணியையும் ஓடுந்தொழில் பொருந்திய சர்ப்பத்தையும் அரையின்கண்ணே அணிந்தருளிய கடவுளை. எ-று. மனமே கடவுளைச் செல்வரென்றும் திருவேகம்பநாதரெனறும் கொடுத்தருளினாரென்றும் துதித்து உதிர்த்தொழித்தேமெனக் கூட்டுக. இரண்டாமடியில் திருக்கு மாயாபாசத்தின்மேறறு. அரைக்கு வேற்றுமைமயக்கம். (௩0)

வனசத்தவனபுரவாளனவன்மதியம்பசிய
வனசத்தவனபுரவிபகலோனவன்மன்னுசத்த
வனசத்தவனபுரம்வென்றோனவனவனேநலஞ்சு
வனசததவனபுரவோரவாழ்கலிக்கச்சிவாழ்கம்பனே.

(இ - ள்.) வனசத்தவன் (அவன்) - தாமரையாசனராகிய பிரமதேவரும் அவர்,—புரவாளன் அவன் - காத்தற்றொழில் புரியும் விஷ்ணுவும் அவர்,—மதியம் (அவன்) - சந்திரனும் அவர்,—பசிய வன சத்த வன் புரவிப் பகலோன் அவன் - பச்சைநிறமுள்ள சப்தாவென்னும் வலிய குதிரையையுடைய சூரியனும் அவர்,—மன்னு சத்து அவன் - நிலைபெற்ற சத்துப்பொருளும் அவர்,—அசத்து அவன் - அசத்துப்பொருளும் அவர்,—புரம் வென்றோன் அவன் - முப்புரத்தையும் வெற்றிகொண்டவரும் அவர்,—அவனே நல் அஞ்சு வன சத்த அன்பு உரவோர் வாழ் கலிக் கச்சி வாழ் கம்பன் - அவரே நல்ல ஸ்ரீ பஞ்சாக்கரோச்சாரணத்தையுடைய பத்திபொருந்திய அறிஞர்கள் வசிக்கும் முழக்கம் பொருந்திய காஞ்சிபுரத்தில் வாழ்கின்ற திருவேகம்பநாதர். எ-று. (௩க)

கங்கணம்பன்னகஞ்சாந்தமுநீறுகருதொருபா
கங்கணம்பன்னகருங்குழன்மேனிகழுதுகழ
கங்கணம்பன்னகமேகம்பமன்பரகங்கள்சிரங்
கங்கணமபன்னகவில்லானுக்கோதக்கடவனவே.

(இ - ள்.) கங்கணம் பன்னகம் - அஸ்தகடகம் சர்பப முமம்,—நீறு சாந்தமும் - விபூதி சந்தனமும்,—கருது ஒருபாகம் அம்பு அன்ன கண் கருங்குழல மேனி - (அனபாகள) சிந்திக்கும் ஒருபாகம் பாணம்போலும் கண்களையும் கரிய கூந்தலையுமுடைய உமாதேவியாரது திருமேனியும்,—கழகங்கணம் கழுது - திருத்தம்புரியுமிடத்துள்ள கூட்டம் பேயக ளும்,—பன அகம் ஏகம்பம் அன்பர் அகங்கள் சிரம் - சொலலப்படும் வீடு திருவேகம்பமும் திருத்தொண்டாகளுடைய இருதயங்களும் வேதசிரசாகிய உபநிடதங்களுமாக,—கங்கணம் பன் நக வில்லானுக்கு ஓதக்கடவன - ஆகாயத்துள்ள நக்ஷத்திரங்கள் நெருங்கிய மேருமலையாகிய விலலையுடைய சிவபெருமானுக்குச் சொல்லத்தக்கனவாம். எ-று. (௩௨)

கடவாதவன்பருவராதவன்பரகந்தொறுஞ்சங்
கடவாதவன்பருவராவிணையிருட்கார்க்குவன்றேர்
கடவாதவன்பருவராலுகள்கம்பைக்கம்பனலங்
கடவாதவன்பருவராதவித்தெனைக்காத்தனனே.

(இ - ள்.) கடவாத அன்பர் உவராத அன்பர் அகம் தொறும் - (வேதசிவாகமங்களின் விதியினின்றும்) விலகாத மென்றொண்டரும் (ஒருபோதும் திருவடியை) வெறுக்காது விதி கடந்தொழுகும் வன்றொண்டருமாகிய திருவடியாாகள் நெஞ்சந்தோறும்—சங்கட வாத வன்பு அருவரா விணை இருள் கார்க்கு வன் தேர் கடவு ஆதவன் - வருத்தமாகிய தரு

க்கத்தின் வலிமைக்குக் கருவியாகிய மாயாமலமும் (அப ரிபக்குவர்) உவர்ப்புறாத கன்மமலமும் ஆணவமலமுமாகிய அந்தகாரத்தைப் புலரச்செய்யும்வண்ணம் வலிய வைதிகரத த்தை நடத்தும் ஞானசூரியனும்,—பரு வரால் உகள் கம்பை க் கம்பன் - பரிய வரான்மச்சங்கள் பாய்கின்ற கம்பாநதி யினாலே சூழப்பட்ட திருவேகம்பத்தில் வாழ்பவரும்—நல ங்களை தவாதவன் - (எல்லா) நன்மைகளும் நீங்காதுடைய வருமாகிய சிவபெருமான்—பருவராது அளித்து எனைக் கா த்தனன் - (பிறவியின் அகப்பட்டுத்) துன்பமுறுவண்ணம் (இ ன்பவீட்டைத்) தந்து அடியேனைக் காத்தருளினார். எ-று. இர ண்டாமடியில் வன்பு ஆகுபெயர். (௩௩)

தனம்பொடியாதுமுளையாதெயிறிந்தத்தையல்கம்பத்
தனம்பொடியாதுமவளராப்பிறைமுடித்தானுக்கென்பா
தனம்பொடியாதுதைசாந்தமெனுங்கொன்றைதந்திடின்ம
தனம்பொடியாதுதையாதென்னுமென்கட்டனித்துவந்தே.

(இ - ள்.) தனம் பொடியாது - முலை அரும்பாது,—எயி று முளையாது - தந்தம் முளையாது;—இந்தத்தையல் - இந்தப் பெண்—கம்பத்தன் அம்பொடு யாதும் வளராப் பிறை முடித் தானுக்கு - திருவேகம்பநாதரும் கங்கையுடன் சிறிதும் விருத் தியில்லாத பிறைமதியைச் சூடியவருமாகிய சிவபிரானுக்கு —என்பா தனம் பொடியாதுதை சாந்தம் எனும் - அஸ்திகளோ திரவியம் திருநீறோ [illegible]திந்த சந்தனமென்று சொல்லு வள்,—கொன்றை தந்திடின் மதன் அம்பு ஓடியாது தையாது என்னும் - (அவ்விதன்றிக்) கொன்றைமாலையைத் தந்தருளினா ல் மன்மதனுடைய பாணங்கள் சிதைந்து தாக்குமென்றும் சொல்லுவள்,—என்கண் தனித்து வந்து - என்னிடத்தே த

ணித்து வந்து. எ-று. இந்தப்பெண் என்னிடத்தே வந்து சொல்லுவளெனக் கூட்டுக. சிதைந்து தாக்குமென்பதற்கு அவமாய்ப் போமென்பது கருத்து. [தோழி செவிலிக்கறத்தொடு நிற்றல்.] (௩௪)

வந்தனையாவதுஞ்செய்தறியாமனமேமறலி
வந்தனையாவதுபார்நரகென்னுமுன்வாய்த்திடுத
வந்தனையாவதுசெய்தார்க்கருண்மயிலூரருட்ப
வந்தனையாவதுலாகம்பனேயென்றுவாழ்த்துவையே.

(இ - ள்.) வந்தனை யாவதும் செய்து அறியா மனமே - வழிபாடு சிறிதாயினும் புரிந்தறியாத நெஞ்சமே,—மறலி வந்தனையா அது நரகு பார் என்னும் முன் - இயமன் வந்தாயா அந்நரகத்தைப் பார்ப்பாயாக என்று சொல்லுமுன்பே,—வாய்த்திடு தவம் தனை ஆவது செய்தார்கு அருள் - சிறந்த தவத்தை (ப்பயன்) உண்டாகும்வண்ணம் செய்தவர்கட்குக் கருணைசெய்கின்ற—மயில் ஊர் அருள் பவம் தன் ஐயா - மயிலை நடாத்துகின்ற அருளவதாரத்தையுடைய முருகக்கடவுளுக்குப் பிதாவே—அதுலா - ஒப்பில்லாதவரோ—கம்பனே என்று வாழ்த்துவையே - திருவேகம்பநாதரோயென்று துதிப்பாயாக. எ-று. (௩௫)

வைகாத்திருப்பதிநாளகோள்வழுங்குங்கதிகளென்ற
வைகாத்திருப்பதிகைப்பிகா[illegible]மார்பமன்றி
வைகாத்திருப்பதிமழுப்பேறுமு[illegible]வரைப்பாயினுஞ்செய்
வைகாத்திருப்பதியான்கச்சியேகம்பமாவடியே.

(இ - ள்.) திரு வைகாப் பதி - திருவைகாவென்னுந்தலமும்—நாள் கோள் வழுங்கும் கதிகள் என்றவை காத் திரு

ப்பு அதிகைப்பதி - நக்ஷத்திரங்களும் கிரகங்களும் செல்கின்ற வேகங்களென்பவைகளைச் சோலைகள் (தகைந்து) மீட்கின்ற திருவதிகையென்னுந் தலமும்,—காசி - வாரணாசியென்னுந்தலமும்,—தன் மார்பம் அன்றி வைகாத் திருப் பதி மாறபேறும - தனது நெஞ்சமன்றி வசியாத இலக்குமி தங்கிய திருமாற்பேறென்னுந் தலமும்,—உன் வரைப்பு ஆயினும் - (திருவேகம்பநாதரே) உம்முடைய க்ஷேத்திரங்களாயிருப்பினும்,—யான் காத்திருப்பது கச்சி ஏகம்பம் மா அடியே - அடியேன் இடையறுது வசிப்பது காஞ்சிபுரத்தில திருவேகம்பமாகிய மாமரத்தடியே,—செய்வை - (ஆதலால்) கருணை புரிந்தருளும். எ-று. (௨௬)

மாவடிவாயவதாரஞ்செயேகம்பவாணாகெடு
மாவடிவாயவம்பிஞ்சியிலேவியமன்னர்புள்ளு
மாவடிவாயவாரணுதஞானவரோதயர்த
மாவடிவாயவந்தீர்சிந்தையாரெம்மையாள்பவரே.

(இ - ள்.) மா அடி வாய் அவதாரம் செய் ஏகம்பவாணர் - மாமரததடியிலே சிவலிங்கமூர்த்தங்கொண்டருளிய திருவேகம்பவாணரும்—கெடுமா வடி வாய அம்பு இஞ்சியில் ஏவிய மன்னர் - (அசுரர்கள்) அழியும்வண்ணம் கூரிய நுதியையுடைய பாணத்தை மும்மதிலிலே பிரயோகித்த தலைவரும்—புள்ளு மா வடிவு ஆயவாரணுத் வர ஞான உதயாதம்- அன்னப்பட்சியும் பன்றியுருவுமான பிரமதேவரும் விஷ்ணுமூர்த்தியும் அறியாத பரவுணர்வின்கண்ணே விளங்குகின்றவருமாகிய சிவபிரானுடைய—மா அடி வாய் அவம் தீர் சிந்தையார் - பெரிய திருவடி பெறற்குரிய பயனின்மை நீங்கிய

உள்ளத்தையுடைய அடியார்களே—எம்மை ஆள்பவர் - எம்மை அடிமைக் கொள்பவர்கள். எ-று. (சஎ)

ஆனந்தவெள்ளம்புயத்தாள்பணிகம்பவாணவத்தி
யானந்தவெள்ளமலவுடற்பாரமறிவுமிகை
யானந்தவெளளவதியேனுங்கன்மமடாதுருப்பட்
டானந்தவெள்ளநதுளைந்தாடவைத்தியருமணியே.

(இ - ள்.) ஆன் அந்த - இடபவாகனத்தையுடைய அழகரே,—வெள் அம்புயத்தாள் பணி கம்ப - வெண்டாமரைமலரிலிருக்கின்ற சரசுவதி வணங்குந் திருவேகம்பநாதரே,—ஆணவத் தீ யான் நந்த - ஆணவமலமாகிய அக்கினியும் யானென்னும் போதமாகிய தூமமும் கெடவும்,—மல உடற் பாரம் எள்ள - மலநிறைந்த சரீரசுமையை இகழ்ந்து கைவிடவும்,—அறிவு மிகையான அந்தக் கனமம் என் அவதி ஏனும் அடாது - ஞானமிகுதியினாலே அக்கன்மமலம் எட்டுணையாயினும பொருந்தாமலும்,—உருபபட்டு - (சுதத) ரூபமுடையேனாகி,—ஆனந்த வெள்ளம் துளைந்து ஆட வைத்தி - இன்ப வெளளத்தின் மூழ்கியாடும்வண்ணம் திருநோக்கம் வைத்தருளும்,—அரு மணியே - அரிய மாணிக்கம்போல்பவரே. எ-று. ஆணவத்தைத் தீயாகக் கூறினமையால் போதத்தைத் தூமமாகக் கூறினார், தற்போதநிகழ்ச்சிக்கு மலம் காரணமென்பது சிவாகமநூற்றுணிபாகலின். (சஅ)

மணிகண்டவாதிரைநாளானரனிகம்பவாணனென்கண்
மணிகண்டவாதினிதாள்வோன்றனைப்புத்தர்வாமிகள
மணிகண்டவாதியுமென்றுண்மைதேர்மன்வியாகரண
மணிகண்டவாதிவிபுதர்களுமொறும்வாழ்த்துமினே.

(இ - ள்.) மணி கண்ட ஆதிரை நாளான் - கரிய கண்டத்தையுடைய திருவாதிரைநக்ஷத்திரத்தினரும்—அரன் - பாசத்தை அரிப்பவரும்—கம்பவாணன் - திருவேகம்பத்தில் வாழ்பவரும்—என் கண்மணி - அடியேன் கண்மணியாயுள்ளவரும்,—கண தவாது இனிது ஆள்வோன் தனை - அறிவு கெடாமல் இனிமையாக அடிமைக்கொள்பவருமாகிய சிவபிரானை,—புத்தர் வாமிகள் அமண் நிகண்டவாதியை வென்று - பௌத்தரும் சாக்தேயரும் சமணரும் நிகண்டவாதியருமாகிய சமயிகளை ஜயித்து—உண்மை தேர் மன் வியாகரண மணி கணட ஆதி விபுதர்கள் - தத்துவப் பொருளை ஆராய்தற்குக் கருவியாகிய நிலைபெற்ற இலக்கணமாகிய இரத்தினத்தைக் கைக்கொண்ட தலைமையுள்ள அறிஞர்களே,—நாள் தொறும் வாழ்த்துமின் - நாடோறும் துதியுங்கள். எ-று. ()

வாராரிடைமருமான்றொழவேகம்பமன்னிவளர்
வாராரிடைமருதாரார்தமதன்பர்மாரருங்கொல்
வாராரிடைமருவிப்புகல்வேனிவ்வருத்தமந்தோ
வாராரிடைமருளப்பணைபூண்முலைமாதரசே.

(இ - ள்.) வாரார் - (விரைந்து) வாரார்,—இடை மருமான் தொழ ஏகம்பம் மன்னி வளர்வார் - இடையர்குலத்திற் பிறந்த கண்ணன் வழிபடும்வண்ணம் திருவேகம்பத்திலே நிலைபெற்று ஓங்குபவரும்—ஆர் இடை மருதார் ஆர் தமது அன்பர் - ஆத்திமாலையையணிந்த மத்தியார்ச்சுனருமாகிய சிவபிரானுடைய அடியாராகிய தலைவர்;—மாரரும் கொல்வார் - (ஆதலால்) மன்மதனும் கொல்வார்;—அந்தோ இவ்வருத்தம் ஆர் இடை மருவிப் புகல்வேன - ஐயோ இத்துன்பத்தை யாவரிடத்தே சென்று சொல்வேன்!—இடை ம

ருளப் பணை வார் ஆர் பூண் முலை மாதரசே - இடை தளரு ம் வண்ணம் பருத்த கச்சுப்பொருந்திய ஆபரணத்தினை அணிந்த தனங்களையுடைய மங்கையர்க்கரசே. எ-று. மங் கையர்க்கரசே தலைவர் விரைந்து வரார் ஆதலால் மன்மத னும் கொல்வார் யாவரிடத்தே சொல்வேனெனக் கூட்டு க. [தலைவனிடத் தலைவி வருந்தல்.] (௩0)

மாதேவனீசர்மொழியாற்சிறுதெய்வம்வந்தித்துவிம்
மாதேவனீசதுர்வேதங்கடாமன்னுதற்புருடன்
மாதேவனீசனெனவுரியானவனன்பர்கட
மாதேவனீசலியாதுசெய்யேகம்பவைபபிற்சென்றே.

(இ - ள்.) மாதே - பெண்ணே,—நீசர் வல் மொழியா ல் சிறுதெய்வம் வந்தித்து விம்மாது - (புறச்சமயிகளாகிய) கீழ்மக்கள் வலிந்து கூறும் வசனத்தால் சிறிய தெய்வங்களை வணங்கி ஏங்காது,—ஏவன் நீ - யாவர் நீ யென்றாராய்ச்சி செய்து—சதுர் வேதங்கள் தாம் - நானகு வேதங்களும்—மன னு தறபுருடன் மாதேவன் ஈசன் என உரியான் - நிலைபெற் ற தற்புருடரும் மகாதேவரும் ஈச்சுரருமென்று சொலலுத ற்குரியவராகிய—அவன் அன்பர்கள் தமாது ஏவல் - அச்சிவ பிரானுடைய அடியார்களது ஏவற்றொண்டை—ஏகமப வை பபில் சென்று நீ சலியாது செய் - திருவேகம்பமென்னும் எல்லையிற்போய் நீ சலனமின்றிப் புரிவாய். எ-று. ஈண்டுப பெண்ணென்றது ஆன்மாவை. (௩க)

வைப்பதுமத்தமுடிமீதுநாடக்வர்க்கமெஞ்சு
வைப்பதுமத்தகமேலதுநாட்டமருவுகம்பம்
வைப்பதுமத்தமரும்பதுபார்வையிற்பாகன்வெண்பா
வைப்பதுமத்தனென்றுமெல்லியோகங்கைமால்கொள்வதே.

(இ - ள்.) முடிமீது வைப்பது மத்தம் - சென்னியின் மேலே தரிப்பது ஊமத்தமலரே,—எண் சுவைப்பது நாடக வாக்கம் - அஷ்டவிதரசமுள்ளது நிருத்தத்தின் முறைமை யே,—மத்தகம மேலது நாட்டம் - நெற்றியின்மீதுள்ளது க ண்ணே,—வைப்பது மருவு கம்பம் - வீற்றிருக்குந்தானமா யுள்ளது பொருந்திய திருவேகம்பமே,—மத்தம் அறுப்பது பார்வை - (தமதடியாருடைய) செருக்கைக் கெடுத்தருளவ து திருநோக்கமே,—அப்பாகன் வெண்பாவைப் பதுமத்த ன் என்றால் - அந்தவைதிகரத சாரதி கலைமகள் கணவரா கிய பிரமதேவரோயென்றால்—நங்கை மால் கொள்வது என் னேயோ - இப்பெண் (அப்பெற்றியுள்ள திருவேகம்பநாதா மீது) ஆசைகொண்டு மயங்குவது யாது காரணமோ. எ-று. [பாங்கி தலைவி குறிபபறிதல.] (௫௨)

மாலையடியடிகேண்முனந்தேடவைத்தாய்சமனு
மாலையடியடியென்றுமற்காத்துவளந்தருபா
மாலையடியடிதோறுஞ்சுவைபெறப்பாடமையின்
மாலையடியடியோங்கட்கருள்கச்சிவாழ்கம்பனே.

(இ - ள்.) அடிகேள் - சுவாமிகாள்,—ஐ அடி முனம் மா ல் தேட வைத்தாய் - அழகிய பாதங்களை முற்காலத்தில் வி ஷ்ணுமூர்த்தி தேடும்வண்ணம் செய்தவரே,—சமன் நாம் ஆலை அடி அடி என்றுமல் காத்து - இயமன் அச்சம்பொரு ந்திய கரும்பாலையிலிட்டு அடி அடி யென்றுமற்றடுத்து— வளம் தரு பா மாலை அடி அடி தோறும் சுவை பெறப் பாட- மாமிசைமை பெற்ற பாமாலைகள் அடிகள்தோறும் சுவை பொருந்தும்படி பாடும்பொருட்டு—மை இல் மாலை அடி அ

டியோங்கட்கு அருள் - குற்றமில்லாத தனமைமையை வழிவ ழியடியோங்கட்குத தந்தருளும்,—கச்சி வாழ் கம்பனே- காஞ்சிநகரத்தில் வாழுந் திருவேகம்பநாதரே. எ-று. (௫௧)

வாதங்கமண்டலநீரழலாயக்கம்பமன்னிநின்ற
வாதங்கமண்டலம்பாயுறிபோய்வன்கழுப்பொருந்த
வாதங்கமண்டலத்தார்செய்யவென்றவாவாழ்த்துமத்தா
வாதங்கமண்டலமூன்றுங்கடந்தென்மனத்தகத்தே.

(இ - ள்.) மண் தலம் நீர் அழல் வாசம் கம் ஆயக் கம்பம் மன்னி நின்றவா - பிருதிவி அபபுத் தேயு வாயு ஆ காசம் ஆகிய பஞசபூதங்களுமாகித் திருவேகம்பத்தில நி லைபெற்று வாழ்பவரே,—தம் கமண்டலம் பாய உறி போய வனகழுப் பொருநத - தங்களுடைய கரகமும் பாயும உறியும் நீங்கி வலிய கழுமரத்திலே தூங்கும்வண்ணம்—அங் கு அமண் தலத்தார வாது செய்ய வென்றவா வாழத்தும் அத்தா - அம்மதுரைத்தலத்தே ஆருகதசமயக்கூட்டத்தினா தருக்கம் புரிய (அவர்களை) வென்ற திருஞானசம்பந்தமூ ாத்திநாயனார் துதிக்கும் பிதாவே,—மண்டலம் மூன்றும் கடந்து - (அங்கி பானு மதியாகிய) மண்டலங்கள் மூன்ற னையும் பேதித்து—என் மனத்தகத்துத் தங்க வா - அடியே னது நெஞ்சத்தின்கண் இருக்கும்வண்ணம் வந்தருளும். எ-று. தூங்கும்வண்ணம் வென்றவென்க. (௫௨)

அகத்தியனூரதன்பூவிற்குநாசியரிந்திடுசெய்
யசதுதியனூரதவத்தியென்னுதறுத்தான்முதலோ
ரகத்தியனூரதனூழெழுங்கம்பரறிவிற்செம்போ
தகத்தியனூரதமாக்கொளித்தேமன்றிலாடுவரே.

(இ - ள்.) அகத்தியன் - அகத்தியமுனிவரும்—நாரதன்- நாரதமுனிவரும்,—பூவிற்கு நாசி அரிந்திடு செய்ய கத்திய ன் - பூவின்பொருட்டு (க்கழற்சிங்கநாயனாரது தேவியாரு டைய) மூக்கை அரிந்த செவ்விய கத்தியையுடைய செருத்து ணைநாயனார்—அவ் அத்தி ஆரது என்றது அறுத்தான் மு தலோர் - (சிவகாமியாண்டாரது திருப்பூங்கூடையைப் ப றித்து மலர்களைச் சிதறிய அந்தயானை யாவருடையதென் றுராயாது சேதித்த எறிபத்தநாயனார் முதலாகிய நாய ன்மாரும்—அகத்து இயல் நார் அதனால் தொழும் கம்பர் - (தமது) உள்ளத்தமைந்த அன்பினால் வழிபடு திருவேகம்ப நாதர்—அறிவில் அகத்திச் செம்போது அனார் அதமர்க்கு ஒளித்து மன்றில் ஆடுவர் - (பரிபக்குவருடைய) அறிவிலே செவ்வகத்தியின் சிவந்த மலர்போல விளங்குவாராகி அபரி பக்குவருக்கு மறைந்து கனகசபையிலே திருநிருத்தஞ்செ ய்தருளுவர். எ - று. (ருரு)

ஆடானையம்பலமேயானைக்கம்பனையன்பிலர்பா
லாடானையம்பலமீவானைக்கண்டனளாகிமங்கை
யாடானையம்பலகொண்டுசென்றுளங்கனேசெகிழ்ந்த
தாடானையம்பலசதோவெங்குமாயதலர்த்திருவே.

(இ - ள்.) ஆடானை அம்பலம் மேயானை - திருவாடா னையிலும் சிதம்பரத்திலும் இருப்பவரும்—அன்பிலர்பால் ஆடானை - பத்தியில்லாரிடத்தே பொருந்தாதவரும்—அம் பலம் ஈவானை - அழகிய (முத்திப்) பயனைத் தந்தருள்பவரு மாகிய—கம்பனை - திருவேகம்பநாதனை—கண்டனளாகி ம ங்கையாள் தான் பல னையும் கொண்டு சென்றாள் - (பவ னிவருங்காலத்தே) தரிசித்தவளாகி இப்பேதையானவள் (அ

வ்விறைவ[illegible]ருணைசெய்வரோ செய்யாரோ என்று) நாளு விதசந்தேகமெய்திப் போயினள்,—அங்ஙனே ஆள் தானே நெகிழ்ந்தது - அவ்விடத்தே கட்டிய ஆடையானது அவிழ்ந்தது,—அம்பல் அந்தோ எங்கும் ஆயது - (அப்பொழுதே) பழிமொழியும் ஐயோ எங்கும் பரந்தது,—மலர்த் திருவே - செந்தாமரைமலரிலிருக்கும் இலக்குமிபோல்பவளே. எ-று. [அலரறிவுறுத்தல்.] (ருசு)

திருமேற்றளிவளர்கம்பன்பனியுந்திண்கோடையுங்கூ
திருமேற்றளியுடன்செய்தவத்தோர்க்கிறைசீரெழின்மு
திருமேற்றளிமுரல்கொன்றையன்றாள்சிந்தியார்சமனா
திருமேறறனிவிடவேறேதுறுதிதிருத்துவரோ.

(இ - ள்.) திருமேற்றளி வளர் கம்பன் - திருமேற்றளியெனனும தலத்தில் வாழுந் திருவேகம்பநாதரும் —பனியும் திண் கோடையும் கூதிரும் ஏற்று அளியுடன் செய் தவத்தோர்க்கு இறை - பனியையும் முதுவேனிலின் வெப்பத்தையும் குளிரையும் பொறுத்து அன்போடு செய்யுந்தவத்தையுடைய முனிவர்களுக்குத் தலைவரும்—சீர் எழில முதிருமேற்றளி முரல் கொன்றையன் தாள் சிந்தியார் - சிறந்த அழகு முதிர்ந்த ஆண்வண்டுகள் ஒலிக்கின்ற கொன்றைமாலையை அணிந்தவருமாகிய சிவபிரானுடைய திருவடிகளைத் தியானியாதவர்—சமன் அதிருமேல் தனி விட வேறு ஏது உறுதி திருத்துவர் - இயமன் ஆரவாரித்து வந்துவிட்டது விலக்கும் வண்ணம் வேறே யாது நிச்சயத்தைக் கைக்கொள்வரோ! எ - று. இறுதியடியில் தன்னிவிடவெனற்பாலது தனிவிடவென இடைக்குறைந்து நின்றது. (ருஎ)

திருவோணகாந்தன்றளிவளரேகம்பன்சீர்க்கரு[illegible]ன்கண்ட
திருவோணகாந்தன்றன்கோன் வரைப்பாற்சென்றியான்மு
திருவோணகாநதனிபேசாமெனுந்திண்விரதத்தின்மு
திருவோணகாநதம்பிறிதொனறெவ்வாணண்பிற்சிரியனே.

(இ - ள்.) திருவோணகாந்தன்றளி வளர் ஏகம்பன் சீர்க்கு அருக - திருவோணகாந்தன்றளியென்னும் திருப்பதியில் வாழுந திருவேகம்பநாதரது புகழைப் பாடுதற்குரிய பாங்கனே,—திருவோணகாந்தன் தன் கோன் வரைப்பால் சென்று- திருவோணநக்ஷத்திரததிற்குரிய விஷ்ணுமூர்த்திக்குத் தலைவராகிய அவ்விறைவரது மலையிடத்தை அடைந்து—யான் முன கண்ட திருவோள் - நான் முன்பு கண்ட இலக்குமிபோன்ற தலைவியானவள்—நகாம் தனி பேசாம் எனும் திண் விரதத்தின் முதிருவோள் - நகைக்கமாட்டேம் தனிமையாக வசனிக்கமாட்டோம் என்கிற வலிய நோன்பில் முறுகுபவள்,—நகாநதம் பிறிதொன்று ஒவ்வாள் - (அன்றிச்சிரமுதல்) நகமிறுதியாக மற்றொன்றால் உவமிக்கப்படாள், [அவைகட்கு அவையே ஒப்பென்றபடி]—நண்பில் சிரியனே - சிநேகத்திற்சிறந்துள்ளோய். எ-று. [தலைவியியலிடம் பாங்கற்குணாத்தல.]

அனேகதங்காவதமப்புகழ்க்கம்பவறுத்தருள்வா
யனேகதங்காவதம்பற்பலவோர்டியலைந்தவநீ
யனேகதங்காவதன்பால்வரைப்பாற்றமாற்றிக்கச்சி
யனேகதங்காவதனேயலையாவக்கின்னெறியே.

(இ - வ.) அமனை - உலகெலாமானவரே,—அதமப் புகழ் தங்காக் கம்ப - அதமமாகிய கீர்த்தி பொருந்தாத திருவேகம்பநாதரே,—அனே - மாதாவே,—அதம் பற்பல காவதம்

ஓடி அலைந்[illegible] வறியன் ஏகு அதம் அறுத்து - வலிமையோடு பலபலகாதவழி விரைந்து சென்று திரிந்து வறியேன் செல்கின்ற அதத்தை நீக்கி—கா அதன் பால் வரைப் பால் தவ[illegible] ஆற்றி அலையாவகை நன்னெறி அருள்வா[illegible] சோலையின்கண்ணும் மலையினகண்ணும் (வசித்துக்) [illegible]ரியதவங்களை செய்து அலையாவண்ணம் நன்மார்க்கமாகிய சிவஞானத்[illegible]த் தாநதருளும்,—கச்சி அனேகதங்காவதனே - கச்சியனேகதங்காவதமென்னுந்தலத்தில் வாழபவரே. எ-று. நீக்கித் தந்தருளுமெனக் கூட்டுக. (ருக)

நெறிக்காரைக்காட்டுகுழலாரபின்சென்று நிறபீருயிரபோ
நெறிக்காரைக்காட்டுவிரகம்பனுக்காலையினேர்ந்தநெறு
நெறிக்காரைக்காட்டுப்பள்ளிக்கோவுக்கன்புநிகழத்திககச்சி
நெறிக்காரைக்காட்டுச்செல்லீர்துணையாவருநீர்மையரே.

(இ - ள்.) நெறிக் காரைக் காட்டு குழலார் பின் சென்று நிற்பீர் - நெறிப்பையுடைய மேகத்தைபபோலும் அளகத்தையுடைய பெண்கள் பின்னே போய் நிற்கின்ற மூடர்களே,—உயிர் போம் நெறிக்கு ஆரைக் காட்டுவீர் - ஆன்மாச் சரீரத்தை விட்டுப்போம் மார்க்கத்தில் யாவரை இலச்காகக் காண்பிப்பீர்!—கம்பனுக்கு - (ஆதலால்) திருவேகம்பநாதரும்—ஆலையின் நேர்ந்த நெறுநெறு இக்கு ஆர் ஐக் காட்டுப்பள்ளிக் கோவுக்கு - கரும்பாலையில் அகப்பட்ட நெறுநெறு என்னும் ஒலியுள்ள கரும்புகள் நிறைந்த அழகிய திருக்காட்டுப்பள்ளியென்னுந்தலத்தில் வாழும் இறைவருமாகிய சிவபிரானுக்கு—அன்பு நிகழ்த்திக் கச்சிநெறிக்காரைக்காட்டுத் துணையாச் செல்லீர் - பத்திசெய்து கச்சிநெறிக்காரைக்காட்

டில் விரைந்து போய் வசியுங்கள்—அரு நீர்மையீரோ - குண மில்லாதவர்களே. எ - று. (௬0)

மயானப்பதிவளர்கச்சிப்பிரான்வருமேறெனுந்தன்
மயானப்பதியினையூர்ந்தருளேகம்பவாணனிள
மையானப்பதினனிலாநீந்துவேணிமௌலியன்கா
மையானபபதினைநதுமூவேழுநீக்கவரந்தருமே.

(இ - ள்.) மயானப்பதி வளர் கச்சிப் பிரான் - திருமயானமென்னுந் தலத்தில் வாழுங் காஞ்சிநாதரும்—வரும் தன்ம ஏறு எனும் யானப் பதியினை ஊர்ந்தருள் ஏகம்பவாணன - வாராநின்ற தருமதந்தியென்னும் தலைமையாகிய வாகனத்தை நடத்தியருளுந் திருவேகம்பவாணரும்—இளமையான அப்பதில் நல் நிலா நீந்து வேணி * மௌலியன் - சிறுபருவத்தாற கங்கையின்கண்ணே நல்ல பிறையானது நீந்தி விளையாடப்பெற்ற சடைமுடியையுடையவருமாகிய சிவபெருமான்—கனமையான் அப்பதினைந்தும் மூவேழும் நீக்க வரம் தரும்—(தமதடிச் சார்ந்தார்க்குண்டாகிய) சாந்தம் பற்றி அம் முப்பத்தாறு தத்துவங்களையும் நேதிசெய்யும்படி திருவருள்புரிவர். எ-று. முதலடி இரண்டாமடிகளில் மயானப்பதி தன்மயானப்பதி என்பன மையானப்பதி தன்மையானப்பதியெனப் போலியாய் வந்தன. தத்துவம் முப்பத்தாறுவன ஆன்மதத்துவம் இருபத்துநான்கும், வித்தியாதத்துவம் ஏழும், சிவதத்துவம் ஐந்துமென இவை. (௬௧)

தருமந்தரதமர்நேர்கல்விவேட்டுத்தவாயினுருத்
தருமந்தரதமன்செய்தாரெனுஞ்செருத்தனைக்கம்பம்வாழ்
தருமந்தரதமர்க்கெட்டார்வரைதனிற்கைபுயமாக்
தருமந்தரதமக்கூர்ந்தகற்குரிசென்னுரைசொற்றுறுகவே.

(இ-ள்.) தருமம் தர தமம் தேர் கல்வி வேட்டு - புண்ணியங்களிலே தாழ்ச்சி உயர்ச்சிகளை ஆராய்ச்சிசெய்தற்கருவியாகிய வித்தையை விரும்பி—தரையின் உருத்து - பூமியிற்பிறந்தும்,—அருமந்த ரதம் அங்கு எய்தார் எனும் சொல்தனை - அருமருந்தன்ன (அக்கல்வி) இன்பத்தை அங்கே அடையாது தாழ்ந்திருக்கின்றார்களென்று நீர் சொல்லும் வார்த்தையை—கம்பம வாழ்தரும் மந்தர் அதமர்க்கு எட்டா வரைதனில் - திருவேகம்பத்தில் வாழும் (பரிபக்குவராகிய உத்தமர்க்கேயன்றி மற்றை அபரிபக்குவராகிய) மந்திமர் அதமர்க்கு எட்டாத திருவேகம்பநாதராது மலையின்கண் (வசிக்கின்ற)—கை புயம் ஆம் தரு மந்தர - கையும் புயமும் கற்பகதருவும் மந்தரகிரியும் போலப் பெற்ற தலைவரோ,—தமக் கூந்தற்கு நீ சென்று சாற்றுக - இருள்போன்ற கேசத்தையுடைய தலைவிக்கு நீரோ போய்ச் சொல்வீராக. எ-று. முதலடியில் உருத்துமென்னும் உயர்வுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. [கல்விமேற் பிரிவு நீயே கூறென்றல்.]

கவளக்கரியன்றுவென்றாரன்பாற்சொன்னகட்டுரைக்காங்
கவளக்கரியுன்றுகொல்லாமித்தெய்வங்களையிருளாங்
கவளக்கரியன்றுதந்தாஞ்சுண்டிருள்கண்டனென்று
கவளக்கரியுன்றுறைசூழ்கம்பன்வரைக்காரிகையே.

(இ-ள்.) அன்று கவளக் கரி வென்றார் - அந்நாளிலே கவளத்தையுண்ணும் யானையை வென்ற தலைவரானவர்—அன்பால் சொன்ன கட்டுரைக்கு ஆங்க இத்தெய்வம் வளக்கரி அன்று கொல் ஆம் - அன்போடு சொன்ன உறுதிமொழிக்கு இம்மலையின்கண் வாழுங்கடவுள் மாட்சிமை பொருந்திய

சாட்சியன்றே,—கனை இருள் ஆங்கு அவ் அளககர் இயன்று நர்த நஞ்சு உண்டு இருள் கண்டன - செறிந்த இருள்போ ன்ற அந்தச்சமுத்திரமானது (தனையம், உறறுக கொடுத்த வி டத்தை அருந்திக கறுத்த மிடற்றையுடையவரும்—ஒன்றுக ஆாகக அரியன் - (மற்றைக்கடவுளரில்) ஒருவராக வைத்தெ ண்ணககூடாத மகாதேவருமாகிய—துறை சூழ் கம்பன் வ ளாக காரிகையே - நீர்த்துறைகள் சூழ்ந்த திருவேகம்பவா ணரது மலையின்கண் வசிக்கின்ற பெண்ணே. எ - று. கவ ளம் வாயளவு கொணடவுணவு. ஆங்க உரையசை. ஆம் அசை. [தலைவனீடத் தலைவி வருந்தல்.] (சாஙு)

காரியங்காரணமாம்பஞ்சபூதக்கலபபின்மயங்
காரியங்காரணங்கெய்தாவகையருளகாட்டுமவி
காரியஙகாரணஞ்சூழ்சம்பனூரலலுங்காய்பகலுங்
காரியஙகாரணவோசையைக்காட்டுங்கலிக்கசசியே.

(இ - ள்.) காரணம் காரியம் ஆம் பஞ்ச பூதக் கலப்பி ல் மயங்கார் இயங்கா - சூக்கும தூலங்களாகிய இரு தி றத்தைம்பூதப்புணர்ச்சியாலாய தேகாதிப பிரபஞ்சத்தின மயக்குற்றுச் சரியாத பெரியராயினுர்—அணங்கு எய்தாவ கை அருள் காட்டும் அவிகாரி - (பிறவிக்கடலுளழுந்தி) வ ருத்தமடையாவண்ணம் (அவர்கட்குத்) திருவருளை விளககி யருள்கின்ற நிருவிகாரியும்—அங்கு ஆரணம் சூழ் கம்பன் ஊர் - அங்கே வேதங்கள் (முழங்கிச்) சூழ்கின்ற திருவே கம்பநாதருமாகிய சிவபிரானுடைய தலமாவது—அல்லும் காய் பகலும் கார் இயம் கார் அணவு ஓசையைக் காட்டும் கலிக் கச்சியே - இரவினும் வெப்பம்பொருந்திய பகலினும்

பெருமை பெற்ற வாத்தியங்கள் மேகங்களிடத்தே பொருந்திய முழக்கத்தைப்போலும் காஞ்சிநகரமே. எ-று. மயங்கா முற்றெச்சம். (௬௪)

கச்சித்தெருவில்வந்தார்நெகிழ்த்தாரென்களபமுலைக்
கச்சித்தெருளினர்யாவரென்பேற்குக்கல்லாலமாயோ
கச்சித்தெருதினையூருஞ்செயுங்கன்னல்கலவிபந்துயக்
கச்சித்தெருவையுறுஞ்சூலமேந்திடுங்காணென்பரே.

(இ - ள்.) கச்சித் தெருவில் வந்தார் - காஞ்சிநகரத்தினது திருவீதியிலே பவனிவந்தவரும்—என் களப முலைக் கச்சு நெகிழ்த்தார் - என்னுடைய சாந்தணிந்த தனங்களின் கண்ணதாகிய கச்சை அவிழ்த்தவருமாகிய—இத்தெருளினர் யாவர் என்பேற்கு - இந்தத்தெளிவினையுடையார் எப்பெற்றியரென்று வினவிய எனக்கு,—கல்லால் யோகம் அமர் சித்து - கல்லாலநீழலிலே நிட்டையிலிருந்தருளிய இந்தச்சித்தானது—எருதினை ஊரும் - இடபத்தை நடத்தும்—கல் இபம் கன்னல் துய்க்கச் சித்துச் செயும் - கல்லானையானது கரும்பினை அருந்தும்வண்ணம் சித்தைச் செய்யும்—எருவை உறும் சூலம் ஏந்திடும் காண் என்பர் - இரத்தம் பொருந்திய சூலாயுதத்தைத் தரிக்கும் என்று சொல்லுவர். எ-று. காண் அசை. [திருவேகம்பநாதர் பவனிவருதலைத் தரிசித்து மால் கொண்டு நிறையழிந்த மாது சொல்லியது.]

பராரைவரைவரைபோல்வினைக்குங்கம்பரைத்திருவம்
பராரைவரைவரையோவழியார்புன்னெறிக்கணைக்கும்
பராரைவரைவரைபத்தெரியார்படித்தோரிற்செம்மாப்
பராரைவரைவரைவிட்டொழிப்பாரவ்விதன்னுடையாக்கே.

(இ - ள்.) பராரை வரை வரைபோல் வளைக்கும் கம்ப ரை - பரிய அரையினையுடைய மேருமலையை மூங்கில்போல வில்லாக வளைத்த திருவேகம்பநாதரும்—திரு அம்பரா ரை - திருவம்பரொனனுந் தலத்தையுடையவருமாகிய கடவுளை—வரைவார் ஐயோ அறியார் - (இவ்வடிவினரொன்று யாவா) எழுதுவர் ஐயையோ (ஒருவரும்) உணரார், —(இங்ஙனமாகவும)—பன் நெடுங் கணக்கு உம்பர் ஆர் ஐவரை வரையத தெரியார் - (சிறுவாகள) ஓதும் நெடுங்கணக்கினமேலே பொருந்திய (அகாரமுதல்) ஐகாரம் இறுதியாக எழுத அறியாத மூடர்கள்—படித்தோரின் செம்மாப்பர் - (உருவம் அருவம் உபயமாகிய வடிவங்களைக் கடந்துள்ள அவ்விறைவரையும் வரையக்) கற்றவர்போல் இறுமாந்திருப்பர்;—அவ்விதண்டையாக்கு ஐவரை வரையிட்டு ஒழிப்பார் ஆர் - அந்தவிதண்டாவாதிகட்குப் பஞ்சப்பொறிகளையும் களைந்தொழித்து உண்மையுணர்த்த வல்லவர் யாவர். எ-று. விதண்டையா தம்மதமே நிறுத்துப் பேசுவோர். (௬௯)

தண்டகநாடகமாடுமெந்தாய்தண்குறங்கரம்பைத்
தண்டகநாடகலல்குல்பங்காபொற்றடவரைக்கோ
தண்டகநாடகராதிமண்காற்றங்கிதண் புனலாந்
தண்டகநாடகம்வாழ்கம்பனேநின்சரண்சரணே.

(இ - ள்.) தண்டக நாடகம் ஆடும் எந்தாய் - தண்டகமென்னும் தாண்டவத்தைச் செய்தருளும் எமது பிதாவே,—தண் அரம்பைத் தண்டு குறங்கு அகல் அல்குல் அகம் நாடு பங்கா - குளிர்ச்சி பொருந்திய வாழைத்தண்டுபோன்ற தொடையையும் விசாலமாகிய அல்குலையும் உடைய உமாதேவியார் திருவுளம் விரும்பப்பெற்ற பாதித்திருமேனியை யுடை

யவரோ,—பொன் த - வளைக் கோதண்ட - பொன்மயமாயு ளள பெரிய மேருகிரியாகிய வில்லையுடையவரோ,—நாள் தக ர ஆதி மண் தண் புனல் அங்கி காற்று கம் ஆம் - நக்ஷத்திர ங்களும் மேடமுதலிய இராசிகளும பிருதிவியும் குளிர்நத அப்புவும் தேயுவும் வாயுவும் ஆகாசமுமாகிய—தண்டக நாடகம் வாழ் கம்பனே - தொண்டைநாட்டின்கண் வாழுந் திருவேகம்பநாதரே,— நின் சரணே சரண் - உம்முடைய பாதங்களே (அடியேற்குப்) புகலிடமாகும். எ-று. (கூஎ)

சரமைநதனங்கனொருங்கேவுமுனகொன்றைதந்திருட்குஞ்
சீரமைநதனங்கண்மெலியச்செய்யார்பொய்மைசாற்றுபரா
சரமைந்தனங்கணபோற்றியென்றேத்தக்கைதநதருளீ
சரமைநதனங்கண்மகிழ்கம்பைசூழகம்பஞ்சார்ந்தவரோ.

(இ - ள்.) அனங்கன் ஐநது சரம ஒருங்கு ஏவுமுன் கொன்றை தநது - மன்மதனானவன் பஞ்சபாணங்களையும் ஒருசேரப் பிரயோகிக்குமுன்னரே கொன்றைமாலை தநதருளி,—அல் இருள் குஞ்சர மைநது நங்கண் மெலியச் செயயாா - இராக்காலத்தே அந்தகாரமாகிய யானையின் வலிமையை நம்மிடத்தே இளைக்கும்வண்ணம் புரியார்,—பொய்மை சாற்று பராசரமைநதன் அங்கண போற்றி என்று ஏத்தக் கைதந்தருள் ஈசர் - (விஷ்ணுவே பரமென்று) அசத்தியங்கூறிய வியாசமுநிவர் அருட்கண்ணரோ இரக்ஷிப்பீராக என்று துதித்தமையால் (தம்பித்த) கரத்தைக் கொடுத்தருளிய இறைவரும்,—அனங்கள் அமைந்து மகிழ் கம்பை சூழ் கம்பம் சார்ந்தவர் - அன்னங்கள் செறிவுற்று இன்பமெய்தப்பெற்ற கம்பாநதி சூழ்ந்த திருவேகம்பத்தில் வாழ்பவருமாகிய சிவபெருமான். எ-று. [மாலை விருப்புரைத்தல்.] (கூஅ)

தவந்தானங்காலந்தொறுமறவார்தங்குகச்சியினெய்
தவந்தானங்காலன்றிறல்வாட்டுகம்பன்றன்வெற்பினர்கை
தவந்தானங்காலந்தருமென்செய்கேன்சந்தக்குன்றினும்வந்
தவந்தானங்காலன்பிலாமதன்றானும்வருத்துவனே.

(இ- ள்.) தவம் தானம் காலம் தொறும் மறவார் தங்கு கச்சியின் - தவத்தையும் தானத்தையும் காலந்தோறும் மறவார்தவர்கள் வசிக்குங் காஞ்சீபுரத்தில்—எய்த வந்தான அம் காலன் திறல் வாட்டு கம்பன்றன் வெற்பினர் - அணுக வந்தவழி மேகம்போலும் நிறத்தையுடைய இயமனது வலிமையைக் கெடுத்தருளும் திருவேகம்பநாதரது மலையின் வாழுநதலைவருடைய—கைதவந்தான் அங்கு ஆலம் தரும் என் செய்கேன் - வஞ்சகமானது (கடலாகிய) அவ்விடத்து (ப்பிறந்த) விடம்போலும் (துக்கத்தைக்) கொடுக்கும் (ஆதலாலயான்) யாது செய்வேன்!— (இஃதன்றி)—சந்தக்குன்றினும் வந்த வந்தால் நங்கால் அன்பு இலா மதன்றானும் வருத்துவன்- பொதியமலையினின்றும் வந்த தென்றற்காற்றினால் நம்மிடத்து இரக்கமில்லாத மன்மதனும் துன்பஞ்செய்வன். எ - று.
[தலைவனீடத் தலைவி வருந்தல்.] (௫௧)

வரகந்தமாதனவாழ்வோருணற்குமற்றின்பம்விற்ப
வரகந்தமாதனமாயதென்னேகம்பர்மைந்தமெய்த்த
வரகந்தமாதனவள்ளிகொண்காவென்றுவாழ்த்தவருள்
வரகந்தமாதனவெற்பாளர்போலுநம்மன்னவர்க்கே.

(இ - ள்.) தன வாழ்வோர் உணற்கு வரகு அந்தமா- பொருட் செல்வராயினோர் புசித்தற்கு வரகின் அமுது அழகிதாமா (அதுபோல)—மற்று இன்பம் விற்பவர் அகம் தம

ஆதனம் ஆயது என்னே - சுகத்தை விற்கும் பரத்தையர் வீடு தம்முடைய ஆசனமாகியது என்னை!—கம்பர் மைந்த. திருவேகம்பநாதர் புதல்வரோ,—மெய்த்த வர - உண்மையாகிய மேம்பாட்டையுடையவரோ,—கந்தம் மா தன வள்ளி கொண்கா - மணம் தங்கிய பெரிய தனங்களையுடைய வள்ளிநாயகி கணவரோ,—என்று வாழ்த்த அருள் வரம் - என்று (அடியார்) துதிக்கக் கருணைசெய்யாநின்ற வரத்தையுடைய —கந்தமாதன வெற்பாளா போலும் நம் மன்னவர்க்கு - கந்தமாதனகிரியில் வாழ்கின்ற முருகக்கடவுள்போன்ற நமது தலைவருக்கு. எ-று. தலைவருக்கு ஆசனமாகியது என்னையெனக் கூட்டுக. மற்று அசை. அழகு கல்வி அறிவு முதலியவற்றாற் சிறந்த தலைவனென்பாள் கந்தமாதனவெற்பாளா போலு நம்மன்னவனென்றாள். [பரத்தையிற் பிரிந்த தலைவனீடத் தலைவி வருந்தல்.] (௭௰)

மன்றுதபோதனர்வாழ்கம்பவாணநின்வான்கருணை
மன்றுதபோதனகாபுகலேதென்முன்வந்ததரு
மன்றுதபோதனதாநரகாரவருந்துகென்று
மன்றுதபோதனரியறியாதமெய்வாழ்வருளே.

(இ - ள்.) மன்று - (எவ்வகைப்பொருட்கும்) இறைவரோ,—தபோதனர் வாழ் கம்பவாண - முனிவரர் வசிக்கும் (காஞ்சிபுரத்துள்ள) திருவேகம்பத்தில் வாழ்பவரோ,—அனகா-மலரகிதரோ,—நின் வான் கருணை மன்றுத போது புகல் ஏது - உமது பேரருள் பதியாத காலத்தே பறறுக்கோடு யாது! —என் முன் தருமன் வந்து அத போது அனது ஆம் நரகு ஆர வருந்துக என்றுமல் - அடியேனுக்கு முன்னே இயமன் வந்து அறிவில்லாதவனே வருவாயாக அத்தன்மைத்தாகிய நி

ரயத்திலே மிகத் துன்பப்படுவாயாக என்று சொல்லாவண்ணம்,—நாத - (ஆத்தும) நாயகரோ,—போதன் அரி அறியாத மெய் வாழ்வு அருள் - பிரமதேவரும் விஷ்ணுமூர்த்தியும் உணராத உண்மைவாழ்வைத் தந்தருளும். எ-று. மலரகிதரோ வென்பதன்பின்னர் ஆத்துமநாயகரோவெனக் கூறிக்கொள்க.

வாவிக்கமலத்தடவாளைமாங்கனிவாய்கிழித்து
வாவிக்கமலச்சுனைதேக்கிநீந்தும்வண்கச்சிக்கம்பா
வாவிக்கமலக்குநாச்செற்றுக்காலனவந்தெய்துமுன்ன
வாவிக்கமலத்துணைத்தாடந்த—கொளவல்விரைந்தே.

(இ - ள்.) வாவிக் கமலத் தட வாளை - தடாகநீரிலே வாழும் பெரிய வாளைமீன்களானவை—மாங்கனி வாய் வாவிக் கிழித்துக் கமலச் சுனை தேக்கி நீந்தும வண் கச்சிக் கம்பா - மாங்கனிகளிடத்தே பாய்ந்து (அவற்றைப்) பிளவுசெய்து (மீண்டு) தாமரைமலரிலே (தங்கிய) தேனை நிறையவுண்டு நீந்துகின்ற மாட்சிமைபெற்ற காஞ்சிபுரத்தில் வாழுந திருவேகம்பநாதரோ,—வர - வந்தருளும்,—மலக்கு நாச் செற்று விக்கக் காலன் வந்து எய்துமுன் - (மனத்தை) மயக்கி (உரையாடாவண்ணம்) நாவையடக்கி விக்குதலுண்டாய இயமன் வந்தடையுமுன்னரோ,—அவாவிக் கு அமலத் துணைத் தாள் தந்து ஆட்கொள வல் விரைந்து - (திருவுளம்)விரும்பி (இப்) பூமியின்கண்ணே (உம்முடைய) நிருமலமாகிய உபய பாதங்களையும் தந்து அடிமைக்கொள்ளும்வண்ணம் பெரிதும விரைவாக. எ-று. விரைவாக என்பதன்பின்னர் வந்தருளுமென்னும் பயனிலையைக் கூறிக்கொள்க. (எ௨)

வல்லியுங்கோட்டுமலைதிரிகானிருள்வாய்வருவான்
வல்லியங்கோட்டுவில்லார்மொழிவார்மலையின்றமுலை

வல்லியங்கோட்டுநன்னீர்க்கம்பைவாய்த்தழுவக்குழைந்தார
வல்லியங்கோட்டுடனார்த்தெழுமேகம்பம்வாழ்வரைக்கே.

(இ-ள்.) வல்லியம் கோட்டு மலை திரி கான் இருள்
வாய் வருவான் - புலிகளும் யானைகளும் சரிக்கின்ற வனத்
தின்கண்ணே இராக்காலத்திலே (தாம்) வரும்பொருட்டு—
வலலி - பெண்ணே—அம கோட்டு வில்லார் மொழிவார -
அழகிய வளைத்த வில்லையுடைய தலைவர் சொல்லுவா,—மலை
ஈன்ற முலை வல்லி அங்கு ஓட்டு நல நீர்க் கம்பைவாய் தழுவ
க குழைநதார் - இமையகிரி பெற்ற தனங்களாகிய சூதா
டுகருவிகளையுடைய உமாதேவியாா அஙகே ஓட்டமபொரு
ந்திய நறுநீரையுடைய கம்பாநதிக்கண்ணே தழுவக் குழை
ந்த திருமேனியையுடைய திருவேகம்பநாதரது—வல இய
ம் கோட்டுடன் ஆர்த்து எழும் ஏகம்பம் வாழ் வரைக்கு -
வலிய வாத்தியங்கள் ஊதுகொம்போடு முழங்கிக் கிளாகி
ன்ற திருவேகம்பமெனனும் ஆலயம் தங்குதற்கிடமாகிய (கா
ஞ்சிநகரத்தைச் சார்நத) மலையிடத்தில். எ-று. மலையிடத்
தில் வனத்தின்கண்ணே வரும்பொருட்டுப் பெண்ணே தலை
வர் சொல்லுவரெனக் கூட்டுக. வரைககு வேறறுமைம
யக்கம். [இரவரவுரைத்தல்.] (௪௩)

வரையும்வரையுமுள்வாடாதிருந்ததடியவர்யா
வரையும்வரையுமவ்வேட்டன்பர்பார்த்திவனரிவனை
வரையும்வரையுமென்றுதெனைச்சேர்த்துவரையுங்கம்பர் .
வரையும்வரையுநதிடமுமுள்ளார்தந்தமாந்தழையே.

(இ-ள்.) வரையும் வரையும் உள் வாடாதிருநதது - ம
ணம் புணர்த்து[illegible]ரும் உளவிரம் உலர்ந்து புலராதிருந்த

து,—அடியவர் யாவரையும் வரையும் அவ் ஏட்டு அன்பர் பார்த்து - தொண்டரெல்லாரையும் எழுதும் அந்தலேகக ப த்தர் நோக்கி—இவன் ஆர் இவனே வரையும் வரையும் என ஞெ எனைச் சேர்த்து வரையும் கம்பர் - இவன் யாவன் இவ னைத் தள்ளுந்தள்ளுமென்று சொல்லாது அடியேனையும் கூ ட்டி எழுதுவிக்கும் திருவேகம்பநாதரது—வரையும் வரை உறந்து இடமும் உள்ளார் தந்தமாந்தமை - மலையினும் மூங்கி ல் செறிந்தவிடத்தினும் வாழும் தலைவர் நலகிய மாந்தளிரா னது. எ-று. மாந்தளிரானது புலராதிருந்ததெனக் கூட்டுக. மூன்றுமடியிறுதியில் வரைவிக்குமெனற்பாலது வரையுமெ ன விவவிகுதி தொக்குநின்றது. [தறைநயப்புரைத்தல்.]

மாந்தருமங்கலவாவிடமாந்தியவ்வானவரு
மாந்தருமங்கலரிட்டேத்தவாழ்கம்பவாணனொற்றை
மாந்தருமங்கலவைப்பாக்கொண்டானடிவாழ்த்துபுவிம்
மாந்தருமங்கலமாகக்கொள்ளாம்வம்பின்மாழ்குதுமே.

(இ-ள்.) மாந்த அரும் அம் கலவா விடம் மாந்தி - (பிறதேவரால்) அருந்துதற்கரிய அழகு பொருந்தாத நஞ்சை யுண்டு— அவ்வானவரும் மாந்தரும் அலர் இட்டு ஏத்த அங் கு வாழ் கம்பவாணன் - அந்தத் தேவரும் மானுடரும் மலர் களை அருச்சித்துத் துதிக்கும்படி (காஞ்சீபுரமாகிய) அவ் விடத்தே வீற்றிருக்கின்ற திருவேகம்பவாணரும்—ஒற்றை மாந்தரு மங்கலவைப்பாக் கொண்டான் - ஒன்றான (அம்) மாமரத்தடியை இன்பத்தானமாகக் கொண்டருளியவருமாகி ய சிவபிரானது—அடி வாழ்த்துபு விம்மாம் - பாதங்களைப் பு கழ்ந்து மகிழமாட்டோம்,—தருமம் கலமாகக் கொள்ளாம்

சிவபுண்ணியங்களை ஆபரணமாகக் கைக்கொள்ளமாட்டேம்,—வம்பில் மாழ்குதும் - வீணாக மயங்குகின்றேம். எ - று.

மாவலியேவலையாப்பகைமீன்களைமாட்டிமண்மேன்
மாவலியேவலைமாற்றினன்றாழ்கம்பமஞ்சுளரோ
மாவலியேவலைநோக்கிபங்காமகன்பெண்ணெனுநா
மாவலியேவலையேகொடியேனவினைமாய்த்திடவே.

(இ - ள்.) மா வலியே வலையாப் பகை மீன்களை மாட்டி - மிகுந்த பலத்தையே கண்ணியாகக் கொண்டு பகைவராகிய மச்சங்களை அகப்படுத்தி (வென்று)—மண்மேல் மாவலி ஏவலை மாற்றினன் தாழ் கம்ப - இப்பூமிக்கண்ணே மகாபலிச்சக்கிரவர்த்தியின் ஆணையைக் கெடுத்த விஷ்ணுமூர்த்தி வணங்குகின்ற திருவேகம்பநாதரோ,—மஞ்சுள ரோம ஆவலி ஏ அலை நோக்கி பங்கா - அழகிய மயிரொழுங்கினையும் அம்பினை வருத்துகின்ற கண்களையுமுடைய உமாதேவியாரை (வாம) பாகத்திலுடையவரோ,—மகன் பெண் அலியே எனும நாமா - ஆண் பெண் அலி எனனும் பெயர்களையுடையவரோ,—கொடியேன் வினை மாய்த்திட வலை - (நீரோ) கொடியேனுடைய கன்மங்களைப் போக்கியருளவலலிர். எ-று. (எசு)

வேதனைவாய்ப்பணிவுற்றவமேமெலிவேனுமுற
வேதனைவாய்ப்பணியார்கம்பத்தேவெளிநின்றுவிண்டு
வேதனைவாய்ப்பபணிசெய்துமெட்டாதெங்குமேவுசம
வேதனைவாய்ப்பணியான்றடுத்தாண்டனன்மேதகவே.

(இ - ள்.) வேதனைவாய்ப் பணிவு உற்று அவமே மெலிவேனும் உற ஏ - துக்கத்தின் மூழ்கி வாளா (மனம்) தளர்கின்ற அடியேனும் (திருவருள்) பெறும்வண்ணம்—தனை வா

ய்ப்ப அணியார் கம்பத்தே வெளி நின்று - தந்திருவடியை நேர்பட அணுகிய பரிபக்குவர் (சூழப்பெற்ற காஞ்சீபுரத்துள்ள) திருவேகம்பத்திலே வெளிப்பட்டு நின்று,—விண்டு வேதன் கைவாய்ப் பணி செய்தும் எட்டாது - விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவரும் (மனம்) உருகித் தொண்டுசெயப்பெறும் நேர்படாது—எங்கும் மேவு சமவேதன் - எவ்விடத்தும் நிறைந்த சமவேதசத்தியையுடையவரும்—ஐவாய்ப் பணியான் - பஞ்சசிரசுகளைப்பொருந்திய சர்ப்பாபரணருமாகிய திருவேகம்பநாதா—தந்தனு மே தக ஆண்டனன் - (விடயத்திற்செல்லவொட்டாது) மீட்டு மாட்சிமை பெற அடிமைக் கொண்டருளினர். எ - று. திருவேகம்பநாதர் அடியேனும் திருவருள் பெறும்வண்ணம் வெளிப்பட்டு நின்று அடிமை கொண்டருளினரெனக் கூட்டுக. இரண்டாமடியில் ஏ அசை. சமவேதம் விட்டுநீங்காமை. (எஎ)

தகரங்கந்திகருங்குழலாயினியுயிர்தாங்கெனுஞ்சொற்
றகரங்கநதிக்குமருள்வாரலர்தபனன்றனைச்சேர்
தகரங்கநதிக்குமுகனைக்கொய்கம்பாதடவரைப்போ
தகரங்கந்திக்குமரம்போற்கொல்யானைத்தனிமன்னரே.

(இ - ள்.) தகரம் கந்திக்கும் குழலாய் - மயிர்ச்சாந்து கமழுகின்ற அளகத்தையுடைய மாதே,—அங்கு அகந்திகரும் அருள்வார் அலர் இனி உயிர் தாங்கு எனும் சொல் தகர் - அவ்விடத்தினின்றும் (வந்து) மாலைக்காலத்தினும் கருணைசெய்வாரல்லர் (ஆதலால்) இனி ஆவியைப் பாதுகாப்பாயாக என்று (நீ) கூறும் கூற்றை விட்டொழி,—தபனன்றனைச் சேர்ந்த கரம் திக்கு முகனைக் கம் கொய் கம்பர் - அக்கினிதேவனைச் சிவந்த கையையும் நான்முகக்கடவுளைச் சிரத்தையும அ

றுத்தருளிய திருவேகம்பநாதரது—தட வரைப் போதகர் அ
ம் கரதூ இக்கு மரம் போல் கொல் யானைத் தனி மன்னர்-
பெரிய மலையிடத்து வசித்துப் பிறர்க்கு உணர்த்துதலின் வ
ல்லராகிய அழகிய கட்டுத்தறியைக் கரும்புபோலக் கொல்
கின்ற யானைகளையுடைய ஒப்பற்ற தலைவரானவர். எ - று.
மாதே தலைவரானவர் கருணைசெயவாரல்லர் ஆதலால் நீ கூறு
ம கூற்றை விட்டொழியெனக் கூட்டுக. இரண்டாமடியில
அந்திக்கும் வேறறுமைமயக்கம். [மாலையம்பொழுது கண்டி-
ரங்கல்.] (எஅ)

தனித்தனமேயன்பர்க்காகி நின்றோன்றமிழ்க்கச்சிக்கம்பத
தனித்தனமேயனபராசத்திபூசனைகொணடபுனி
தனிததனமேபபசப்பொழியான்மறறோர்சாரபுமில்லேந
தனித்தனமேயனமேயினியேதுயயத்தக்கதுவே.

(இ - ள்.) அன்பர்க்குத் தனித் தனமே ஆகி நின்றோன-
பத்தர்களுக்கு ஒபபற்ற நிதியமேயாய் நினறவரும்—தமிழுக
கச்சிக் கம்பத்தன் - தமிழையுடைய காஞ்சிநகரததுளள தி
ருவேகம்பநாதரும்—நிததன - என்றும் உள்ளவரும்—அமே
யன-பிரமாணாதீதரும்—பராசததி பூசனை கொணட புனிதன-
காமாக்ஷியம்மையுடைய ஆராதனையை ஏறறருளிய சுததரு
மாகிய சிவபிரான,—இத்தனம் மேய பசப்பு ஒழியான - இ-
தமுலைகளிலே தங்கிய பசலையைப போக்கியருளார்,—மற்று
ஓர சாரபும் இல்லேம் தனித்தனமே - (ஆதலால்) பிறிதொரு
பற்றுக்கோடுமில்லாதவர்களாய்த் தனிமையானுமன்றே,—
அனமே இனி உய்யத்தக்கது ஏது - அன்னம்போலும் நடை
யினையுடைய பெண்ணே மேற் பிழைக்கும்வண்ணம் யா
தோ! எ - று. பாங்கி நீ கூறுவாயாகவென்பது எஞ்சி நின்ற
து. [தலைவனிடத் தலைவி வருந்தல்.] (எக)

வேதாகமங்கலைகற்றதனுன்முத்திவேட்பதறி
வேதாகமங்கலைநீர்போக்குமேவியன்பத்திவிளை
வேதாசமங்கலைமாமதிவேய்ந்தவெண்ணீறஞெளிச்சு
வேதாகமங்கலையாத்திசைகொண்டமெய்யேகம்பனே.

(இ - ள்.) வேதாசமம் கலை கற்றதனுல் முத்தி வேட்பது அறிவே—(அநுபவஞானத்தாலன்றி) வேதாகமங்களைப் படித்ததனுல் மோக்ஷத்தை (அடைய) விரும்புதல் விவேகமாமா!—தாகம் அங்கு அலை நீர் போக்குமே - தாகத்தை (நற்நீரேயன்றி) அவ்விடத்துள்ள உவரிநீர் ஒழிக்குமா!—வியன் பத்தி விளைவே தா - (ஆதலால்) பரபத்தியையும் (அதன) முதிர்ச்சியாகிய பரஞானத்தையுமே தநதருளும்,—சம் அம் கலை மா மதி வேய்ந்த வெள் நீறஞெளிச் சுவேதா - சிரத்தையும் சங்கையையும் கலையும் பெருமையும் பொருந்திய பிறையையும் அணிந்த வெண்மையாகிய விபூதிப்பிரகாசத்தையுடைய தவளவண்ணனே,—திசை கமம் கலையாக் கொண்ட மெய் ஏகம்பனே - திக்குகளை நிறைந்த ஆடையாகப் புனைந்தருளிய தததுவப்பொருளாயுள்ள திருவேகம்பநாதனே. எ - று. திருவேகம்பநாதனே தந்தருளுமெனக கூட்டுக. (அ0)

ஏகம்பத்தானையரிதிசையூர்புகழேறுகச்சி
யேசம்பத்தானையுரிபோர்வைவாழிடஞ்சூதமதா
மேகம்பத்தானைபுகைத்தடியார்க்கெளிவாதருளு
மேகம்பத்தானையரிக்கண்ணிபாகனுக்கென்பர்களே.

(இ - ள்.) ஏகு அம்பு அத்தானை அரி திசை - (பகைவர் மேற்) செல்லும் பாணமும் அக்தவஸ்திரமும் விஷ்ணுமூர்த்தியும் திக்குகளுமே,—ஊர் புகழ் ஏறு கச்சியே - நகரம் சீர்

த்தி மிளிருந்த காஞ்சீபுரமே,—போர்வை கம்பத்து ஆனை உரி- மேற்போர்வை தறியிற்கட்டப்படும் யானையினது தோலே,— வாழ் இடம் சூதமது ஆம் ஏகமபத்து - வீற்றிருக்கும் தானம மாமரத்தடியினுள்ள திருவேகம்பத்ததாகிய தலமே,—ஆனை உகைத்து அடியார்க்கு எளிவந்து ஏகம் பத்தான் அருளும- இடபத்தை நடாத்தி அன்பர்களுக்கு எளிதிறபோந்து ஒன்ரு கிய ஞானபாதத்தைத் தசகாரியத்தால் உபதேசித்தருளுகி ன்ற—ஐ அரிக் கண்ணி பாகனுக்கு என்பர்கள் - அழகிய வரிபொருந்திய கண்களையுடைய உமாதேவியாரை வாம பாசத்திலிருத்திய சிவபெருமானுக் கென்று (பெரியோர்) சொ ல்லுவர். எ - று. இறுதியடியில் ஏகம் பத்தான அருளுமென் பதற்கு ஈண்டுக் கூறிய பொருளே பொருளெனபது "ஞான பாதத்தை யீரைந்தா னண்ணு காரியத்தா லெனக்குபதேச ந ல்கும" என ஆன்றோர் கூறிய திருவாக்கானுணாக. (அக.)

பரம்பரமானந்தவாதவாசூழ்கம்பனேயிம்பரும்
பரம்பரமானந்தமாநிறைநதோய்பசுஞ்சாபககரும்
பரம்பரமானந்தமொத்தகண் ணாதிறம்பாறவெங்கும்
பரம்பரமானந்தமுத்திதந்தாண்டருள்பாலிப்பையே.

(இ - ள்.) பரம் பர - முன்னைப் பழம்பொருட்கு முன் னைப் பழமபொருளே,—மானம் தவாதவர் சூழ் கம்பனே- மாட்சிமை நீங்காத மகத்துக்கள் சூழ்கின்ற திருவேகம்பநா தனே,—இம்பர் உம்பர் அம் பரமானந்த மா நிறைந்தோய் - இ ம்மிலும் மேலினும் அழகிய பரமசுகவடிவாக வியாபித்தவ னே,—பசும் சாபக் கரும்பர் அம்பு அரம் மான் ஒத்த அந்தக் கண்ணார் திறம் பசுமை உபசிய வில்லாகிய கரும்பையுடைய ம

ன்மதனும் பாணத்தையும் அரத்தையும் மானோக்கத்தையும் போன்ற அழகிய கண்களையுடைய பெண்களுமாகிய (இருதி றத்தாருஞ்செய்கின்ற மயக்க) வலிமை கெடவும்,—எங்கும் பரம்பு அர - எவ்விடத்தும் நிறைந்த (ஆன்மாக்களது பாசத் தை) அரிக்கின்றவரோ,—மால நந்த முத்தி தந்து ஆண்டு அரு ள பாலிப்பை - (ஆணவமல) மயக்கம் கெடவும் வீடுபேற் றை உதவி (அடியேனை) அடிமைகொண்டு கருணை புரிவீ ராக. எ - று. வியாபித்தவரோ யென்பதன்பின்னர் அரிக்கின் றவரோயெனக் கூறிக்கொள்க. (அஉ)

பாலனஞ்செய்துதவார்கொன்றைமாலைதண்பாசடைமேற,
பாலனஞ்செய்துறுதென்கச்சியேசம்பர்பானுவுமேற், பாலன
ஞ்செய்துதலபோலெயதுமாலையின்பைந்துளவோன், பாலனா
ஞ்செய்துகொல்வானென்றென்றேங்குமென்பான்மொழியே.

(இ - ள்.) பாலனம் செய்து கொன்றை மாலை உதவார் - காத்தற்றொழில் புரிந்து கொன்றைமாலையைத் தந்தருளார், —தண் பாசடைமேல் பால் அனம் செய் துறு தென் கச்சி ஏகம்பர் - குளிர்ந்த பசிய இலைகளின்மீது வெண்ணிறத்தை யுடைய அன்னங்கள் கழனிகடோறும் நெருங்குகின்ற அழ கிய காஞ்சிநகரத்தில் வாழும் திருவேகம்பநாதர்,—பானுவும் மேற்பாலன் - (ஆதலால்) சூரியனும் மேற்குத்திக்கை அடை ந்தான்,—நஞ்சு எய்துதல் போல் எய்தும் மாலையின் - ஆலா கலம் வருதல போன்று வாராநின்ற அந்திக்காலத்தே—பை ந்துளவோன் பாலன் அஞ்சு எய்து கொல்வான் என்று என் று என் பால் மொழி ஏங்கும் - பசிய துளசிமாலையையணி ந்த விஷ்ணுமூர்த்தியின் புதல்வனாகிய மன்மதன் பஞ்சபா

ணங்களையும் பிரயோகித்துக கொலவாரென்று பலமுறை பா
லினிரதம்போலும் வசனத்தையுடைய எனது புதலவி பரிவு
றறுக் கூறுவள. எ - று. திருவேகம்பநாதர் கொன்றைமாலை
யைத் தநதருளாரா ஆதலால எனது புதலவி பரிவுறறுக கூறு
வளெனக் கூட்டுக. [நறறுயிரஙகல்.] (அரு)

பாதகமஞ்சனவெற்பாகவீட்டுநெறபண்புவிரும்
பாதகமஞ்சனமாட்டாதுகைபன்னுநாப்புகழ்செப்
பாதகமஞ்சனகணடாகம்பாபன்றிநாடரிய
பாதகமஞ்சனமின்னமுங்காணரும்பண்ணவனே.

(இ - ள்.) அகம பாதகம் அஞ்சன வெற்பாக ஈட்டும் ந
ற் பண்பு விரும்பாது - நெஞ்சமானது பாபஙகளைக கரிய மலை
லைபோல (மேலும் மேலும்) ஆர்ச்சிப்பதேயன்றிச் சன்மா
ர்க்கங்களை (ச் சிறிதும்) சிந்தியாது,—கை மஞசனம் ஆட்
டாது - கரமானது (உமது திருவடிகளிலே) திவ்வியோதகத்
தை அபிஷேகம் செய்யாது,—பன்னு நாப புகழ் தகச செப
பா - வசனிக்கும் நாக்கானது (உமது) கீர்த்திகளை மாட்சி
மை பெறச் சொல்லாது,—மஞ்சு அன கண்டா - (ஆதலால்)
மேகம்போன்ற (கரிய) கழுத்தையுடையவரே,—கம்பா - தி
ருவேகம்பநாதரே,—பன்றி நாடரிய பாத - பன்றிவடிவமா
ன விஷ்ணுமூர்த்தி தேடுதற்கரிய பாதங்களையுடையவரே,—
அனம் கம் அஞ்சு இன்னமும் காணரும் பண்ணவனே - அ
ன்னவடிவமான பிரமதேவர் திருமுடிகள் ஐந்தனையும் இ
ன்னும் அறிதற்கரிய மகாதேவரே. எ - று. பாபத்தை உவர்
ப்பித்துச் சிவபுண்ணியத்தை ருசிப்பித்தருளுமென்பது எஞ்
சி நின்றது. செப்பாதென்பது செப்பாவெனத் துவ்வீறு
தொக்கு நின்றது. (அச)

வனப்புண்டரிகமுகத்தார்தமுற்பலமாமலரின்
வனப்புண்டரிகவர்கண்விரும்பேல்வணங்காயுரைசெய்
வனப்புண்டரிகலவாமலருண்டுவண்கம்பமுண்டு
வனபபுண்டரிகவுரியானுண்டேமனம்வாய்கையுண்டே.

(இ - ள்.) வனப் புண்டரிக முகத்தார்தம் - நீர்நிலையினுள்ள தாமரைமலர் போன்ற முகத்தையுடைய பெண்களது —மா உற்பல மலரின் வனப்பு உண்டு அரி கவர் கண் விரும்பேல் - அழகிய குவளைமலரின் அழகைக் கவர்ந்து வரிகளை அவாவிய கண்களை இச்சியாதே,—வணங்காய் உரைசெய்வன - (மாணுக்கனே கடைப்பிடித்து) வழிபடுவாயாக சொல்லுவேன்;—அப்பு உண்டு - (பூஜோபகரணமாகத் தடாகத்திலே) ஜலமும் உள்ளது,—அரி கலவா மலர் உண்டு - (வனத்திலே) வண்டுகள் அணுகாத அலரும் உள்ளது,—வண் கம்பம் உண்டு - மாட்சிமை பெற்ற (ஆலயமாகத்) திருவேகம்பமும் உள்ளது,—வனப் புண்டரிக உரியான் உண்டு - காட்டில் வாழும் புலித்தோலையுடைய சிவபிரானும் (ஆராதனையை ஏற்றுப் பயன்கொடுக்கும்படி சிவலிங்கமூர்த்தங்கொண்டருளி அத்திருவேகம்பத்தில்) வீற்றிருக்கின்றனர்,—மனம் வாய் கை உண்டு - (சற்பாவனைசெய்யும் கருவியாக) நெஞ்சமும் (ஸ்ரீபஞ்சாக்கரத்தை உச்சரிக்குங்கருவியாக) வாக்கும் (பூஜிக்குங்கருவியாகக்) கரமும் உள்ளன. எ-று. ஆதலாற் புதிதாக அமையவேண்டுவதொன்றுமின்றென்பது எஞ்சி நின்றது. இனி இற்செயற்பாலதாகிய இவ்வழிபாடே புத்திமுத்தி சாதனமென்பது கருத்து. (௮௫)

கைத்தாயிலையகன்றாயமும்யானுங்கலைசெமறு
கைத்தாயிலையவருகாலன்போதுமொர்கண்டன்றன்

கைத்தாயினையவென்கண்மணியேகக்கடவியெனைக்
கைத்தாயினையாற்கமபநதொழாரிற்கடுந்தெய்வமே.

(இ - ள்.) கைத்தாயினை அகன்று ஆயமும் யானும் க வல மறுகைத் தாய் - செவிலித்தாயையும் நீங்கிப் பெண்கள் கூட்டமும் நானும் வருந்தும்வண்ணம் வீதியைக் கடந்து —இல் நைய வரு காலன் போலும் ஓர் கண்டகன்றன் கைத் தாய் - வீட்டினுள்ளார் துன்பமுறுமாறு (உயிரைக் கவர) வ ருகின்ற இயமன்போன்ற ஒருகொடியோன் வயத்ததாகி— இனைய என் கண்மணி ஏகக் கடவி எனைக் கைத்தாய் - இப் பெற்றித்தாய என்னிருகண்ணினுண்மணி (போன்ற பெண்ம ணி) செல்லும்வண்ணம் நடாத்தி என்னை உவர்ப்பித்தாய்,— கடும் தெய்வமே நற் கம்பம் தொழாரின் இனைய - (ஆதலா ல்) கொடிய விதியே நல்ல திருவேகம்பத்தை வழிபடாதா ரைப்போல (நீ) துன்பப்படுவாயாக. எ-று. இரண்டாமடியில் இல் ஆகுபெயர். [விதியொடு வெறுத்தல்.] (அகூ)

கடமாதங்கம்பபிரானைச்சிவநிசிக்கண்வணங்கிற்
கடமாதங்கம்பற்பலசூழவாழ்நதங்குக்கஞ்சர்கண்ணார்
கடமாதங்கம்பணியாப்பூண்டுவைகிப்பின்கார்மலச்சங்
கடமாதங்கம்பற்றறப்போய்க்கலப்பர்திருவடியே.

(இ - ள்.) கடமாதம் சிவநிசிக்கண் கம்பப் பிரானை வண ங்கில் - மாசிமாசத்திலே சிவராத்திரிகாலத்திலே திருவேகம் பநாதனைத் தொழுதால்,—கட மாதங்கம் பற் பல சூழ வாழ் ந்து - (இகலோகத்திலே) மதத்தையுடைய யானைகள் பல ப ல (தமது முன்றிலிற்) சூழும்வண்ணம் வாழ்ந்திருந்து,—அ ங்குக் கஞ்சர் கண்ணார்கள் தமாது அங்கம் பணியாப் பூண்டு

வைகி - பரலோகத்திலே பிரம விஷ்ணுக்களுடைய என்புக ளை ஆபரணமாகத் தரித்து (ச்சிவசாரூப்பியராய் மகாசங்கார ங்கரூம்) இருந்து,—பின் கார் மலச் சங்கடம் ஆதங்கம் பற்று அறப் போய்த் திருவடியே கலப்பர் - பின்னர்க் கரிய ஆணவ மலத்தானுய துன்பமாகிய பொல்லாங்குத்தொடர்பு முழுது மொழிந்து திருவடிக்கண்ணே (இரண்டறக்) கலப்பர். ஏ-று

திருக்கோவையாரணைப்படைத்தேகம்பத்தேமகிழ்வோய்
திருக்கோவையாருளத்தோரன்பர்கூறிடச்சிறறம்பலத்
திருக்கோவையார்கரத்தால்வரைந்தாண்டசெல்வாவருள் கூ
திருக்கோவையார்படைவேட்கோவின்றுற்றுமென்சேல்விழி
[யே.

(இ - ள்.) திருக் கோவை ஆரணைப் படைத்து ஏகம் பத்தே மகிழ்வோய் - இலக்குமிக்கு நாயகனுகிய விஷ்ணுமூர் த்தியையும் பிரமதேவனையும் (உலகத்தினது தோற்றநிலைகளி ன் பொருட்டுத் தம்மினின்றும்) தோற்றுவித்துத் திருவேகம் பத்திற் களிகூர்ந்து வாழ்பவரோ,—உளத்துத் திருக்கோ வை யார் ஓரன்பர் கூறிட - மனத்தின்கண்ணே குற்றம் சிறிதும் பற்றுதாரும் ஒப்பற்ற அடியாருமாகிய மாணிக்கவாசகசுவா மிகள் சொல்ல—திருச் சிற்றம்பலக் கோவையார் கரத்தால் வரைந்து ஆண்ட செல்வா - (திருவாசகத்தோடு) திருச்சிற்ற ம்பலக்கோவையாரையும் திருக்கரத்தினுல் எழுதி அடிமைக் கொண்டருளிய சீரியரோ,—கூதிருக்கோ வை ஆர் படை வே ட்கோ இன்று என் சேல் விழி ஆற்றும் - குளிர்காற்றுக்கா (அன்றிக்) கூர்மை பொருந்திய பாணங்களையுடைய மன்மத னுக்கா இப்போழ்து எனது மீன்போலும் நோக்கினையுடைய

மடமகள் சகிப்பள்,—அருள் - (ஆதலால்) கருணை செய்தரு ளும். எ-று. இரண்டாமடியில் ஓகாரம் ஒழியிசை. [நற்றுயி ரங்கல்.] (அஅ)

விழுமந்தவாதவர்சார்பேநயந்துவிவேகங்கள
விழுமந்தவாதவவேனோர்மதங்களைமேறகொண்டங்கண்
விழுமநதவாதவமென்றுமைகாட்டிவிளக்கினைநல்
விழுமந்தவாதவர்வெற்பாகம்பாவென்விளம்புவனே.

(இ - ள்.) விழுமம் தவாதவர் சார்பே நயந்து விவேகங் கள் அவிழும் மந்த - (பெத்த) துக்கங்கெடாதவருடைய நண் பையே மகிழ்ந்து (கொண்டாடி) அறிவுகள் பறிபோய அபக் குவனே,—ஆ தவ ஏனோர் மதங்களை மேற்கொண்டு அங்கண் விழும் அந்த வாது - பெரும்பான்மையும் வேதவாகியரானா சமயங்களை வெல்லுதலிலே தலைப்பட்டு அதன்கண்ணே கருத்தழுந்திச் செய்யும் அத்தருக்கமானது—அவம் என்று மை காட்டி நல் விழுமம் விளக்கினை - பயனற்றதென்று (அ ப்பரபக்கத்தின்) குற்றத்தைப் புலப்படுத்தி (மலைவு தீர்த்துச் சுபக்கமாகிய சித்தாந்தசைவத்தின்) ஞானபாதச் சிறப்புப பொருளை உபதேசித்தருளினீர்,—தவா தவா வெற்பா கம்பா என் விளம்புவன் - (ஆதலால்) நாயகரோ மேருமலையாகிய வி ல்லையுடையவரோ திருவேகம்பநாதரோ (உமது கருணையைப பற்றி) அடியேன் யாது புகழ்ந்து கூறுவேன். எ-று. (அகூ)

புவனம்பவனங்கமண்ணழலாவன்புள்ளூர்களாகாம்
புவனம்பவனங்களாவமர்வோன்வினைபொய்மலநத
புவனம்பவனங்கணன்கம்பனென்றென்றுபோற்றிவிரும்
புவனம்பவனங்கனத்தனென்றேகொண்டபோதலையே.

(இ - ள்.) மண் புவனம் அழல் பவனம் கம் ஆவன் - பிருதிவி அப்புத் தேயு வாயு ஆகாயம் (ஆகிய பஞ்சபூதமும்) ஆகின்றவர்—புள்ளூர் களர் காம்பு வனம் பவனங்களா அமர்வோன் – புள்ளிருக்குவேளூர் திருக்களர் திருநெல்வேலியாகிய தலங்களை ஆலயங்களாகக் கொண்டு வீற்றிருப்பவர்,—வினை பொய் மலம் தபுவன் - (பக்குவான்மாக்கட்குக்) கன்மமும் மாயையும் ஆணவமுமாகிய (மும்மலங்களையும்) கெடுத்தருள்பவர்,—அம பவன் - அழகிய விச்சுவகாரணா,—அம் கணன் - அருட்கண்ணர்—கம்பன் - திருவேகம்பநாதர்—என்று என்று போற்றி விரும்புவன் - என்று பலமுறை (நாடியேன்) துதித்துச் சிந்திப்பன்,—அம்பு அவ் அனங்கன அத்தன் என்று கொண்ட போதனை - பாணமானது அந்த மன்மதன் பிதாவாகிய விஷ்ணுமூர்த்தியாகக் கொண்டருளிய ஞானமூர்த்தியை. எ-று. ஞானமூர்த்தியைத் துதித்துச் சிந்திப்பனெனக் கூட்டுக. மாயையாகிய காரணத்தை அதன்காரியமாகிய தனுவாதிமேல் வைத்துப் பொய்யென உபசரித்தார். என்றேயென்றதில் ஏகாரம் அசை. (௯௦)

போதுமினையம்பரோநடவாதிங்கும்பூம்பகழிப்
போதுமினையம்பரத்தைப்பொருமிடையார்வசையும்
போதுமினையம்பரிகம்பர்தார்புரிந்தாரினியோர்
போதுமினையம்பரவையின்வீரமும்பொன்றுகவே.

(இ - ள்.) ஐ அம்பரோ உம் பூம் பகழிப் போது இங்கு நடவாது போதுமின் - பஞ்சபாணங்களையுடைய மன்மதரோ உமது பொலிவுபெற்ற அம்புகளாகிய மலர்கள் ஈண்டுச் செல்லாது செல்வீராக,—மினை அம்பரத்தைப பொரும் இடையார் வசையும் போதும் - மின்னலையும் ஆகாசத்தையு

ம் போன்ற இடையையுடைய பெண்கள் அலர்தூற்றலும் அமையும்,—அரி இன் ஐ அம்பு கம்பா தார் புரிநதார் - விஷ்ணுமூர்த்தியை இனிய அழகிய பாணமாகக் கொண்ட திருவேகம்பநாதர் மாலை தந்தருளினார்—(ஆதலால்)—இனி ஓர் போதும் இனையம் - இனி ஒருபொழுதும் வருந்தமாட்டேம்,—பரவையின் வீரமும் பொன்றுக - கடலின் வலிமையும் மெலிந்தொழியக்கடவது. எ - று. திருவேகம்பநாதர் மாலை தந்தருளினார் ஆதலால் மன்மதனோ செல்வீராக பெண்கள் அலர்தூற்றலும் அமையும் இனி வருந்தமாட்டேம் கடலின வலிமையும் ஒழியக்கடவது எனக் கூட்டுக. [மாலைவிருபபுரைத்தல்.] (கூக)

சு

கவலைக்கரும்பரவப்பூம்பகழிக்குங்கன்னியர்நோக்
கவலைக்கரும்பரவேர்நகையல்குலுக்காசைகொண்டு
கவலைக்கரும்பரவைக்குள்விழாதுகருணைபெரு
கவலைக்கரும்பரமானந்தமீந்தனன்கம்பத்தனே.

(இ - ள்.) கவலைக் கரும்பர் அவப் பூம் பகழிக்கும் - (காம) நோயை (வளர்க்கும்) கருப்புவில்லையுடைய மன்மதனுரது வறிதாகிய புட்பபாணங்களுக்கும்—கன்னியர் நோக்கவலைக்கு அரும்பு அரவு ஏர் நகை அல்குலுக்கு - பெண்களது பார்வை வலைக்கும் (முல்லை) முகையும் பாம்பின் படமும்போன்ற தநத (பங்திக்கும்) நிதம்பத்திற்கும்—ஆசை கொண்டு கவலைக் கரும் பரவைக்குள் விழாது - மையல் பூண்டு துக்கமாகிய கரிய கடலின் வீழ்ந்து மூழ்காவண்ணம்,—கம்பத்தன் - திருவேகம்பவாணர்—கருணை பெருக அலைக்க அரும் பரமானந்தம் ஈந்தனன் - திருவருள் பெருக அலைத்தல் கூ

டாத பரமசுகத்தை (அடியேற்குத்) தந்தருளினர். எ - று. இரண்டாமடியில் அரவு ஆகுபெயர். (கூ௨)

கம்பாகம்பாநதிப்பாற்பூசைசெய்கவுரிக்கருணைக்
கம்பாகம்பாலித்தகோவேமகளிர்கடிதடநா
கம்பாகம்பாமொழிகண்கனென்றுனுன்கழலைமுறுக
கம்பாகம்பாகமுறுந்தமிழ்பாடுங்கடன்பணியே.

(இ - ள்.) கம்பா - திருவேகம்பநாதரே,—கம்பா நதிப் பால் பூசை செய் கவுரிக்கு அருள் நோக்கம் பாகம் பாலித்த கோவே - கம்பையாற்றின்கண்ணே (திருவடிகளைப்) பூசித்த உமாதேவியாருக்குக் கருணைப்பார்வையும் (வாம) பாகமும் அளித்தருளிய முதல்வரே,—மகளிர் கடி தடம் நாகம் மொழி கண்கள் பாகு அம்பு ஆம் என்று - பெண்களுடைய நிதம்பம் பாம்பின் படமாகும் வசனங்களும் நேத்திரங்களும் பாலின் சுவையும் பாணங்களுமாகும் என்று புனைந்துரையாது,—உன் கழலை முறுக்கம் பாகம் பாகம் உறும் தமிழ் பாடும் கடன் பணி - உமது திருவடிகளை (ப் புகழ்ந்து நாளிகேரபாகமாகிய) முறுகிய பாகமும் (கதலீபாகமாகிய) செம்பாகமும் பெற்ற தமிழ்ச்செய்யுள்கள் இயற்றும் முறைமையை (அடியேனுக்கு) அருள்செய்வீராக. எ - று. இக்ஷு பாகம் திராக்ஷாபாகமாகிய இரண்டையும் முதலினும் இறுதியினும் கூட்டி நான்கென வடநூலார் கூறுப. அவற்றுள் இடைநின்ற நாளிகேரபாகம் கதலீபாகமாகிய இரண்டுமே பெரும்பயனுடையனவென்பார் முறுக்கம்பாகம் பாகமுறுந்தமிழ் பாடுங்கடன்பணியென்றார். இக்ஷு கரும்பு. திராக்ஷா - முந்திரிகை. நாளிகேரம் - தெங்கு. கதலி - வாழை. (கூ௩)

பணியாதனந்தம்பரிசடியாரெதிர்ப்பட்டிடிற்செய்
பணியாதனந்தன்புகழநிற்பீரென்றுபாடிப்புத்தி
பணியாதனந்தநதுபசரியாதுகமபாவரவப்
பணியாதனந்தஞ்சமென்றழிவேனெப்படியுய்வனே.

(இ - ள்.) அடியாா எதிர்ப்பட்டிடில் அனந்தம் பரிசு பணியாது - தொண்டர்கள் கேர்பட்டாற் பலமுறை வணங்குதல் செய்யாதும்,—செய் பணி யாது அனந்தன் புகழ நிற்பீா என்று பாடிப் புத்தி பணி - (அடியேனுல) இயற்றத்தக்க குற்றேவல் யாது சேடனும் துதிக்கநிற்கும் மகான்களே யென்று புகழ்ந்து (சிவமாக) மதித்து (வினவி),—ஆதனம் தந்து உபசரியாது - ஆசனங்கொடுத்து வழிபடாதும்,—கம்பா அரவப் பணியா - திருவேகம்பநாதரே சர்ப்பாபரணரே—தனம் தஞ்சம் என்று அழிவேன் எபபடி உய்வன் - திரவியத்தையே பற்றுக்கோடாகக்கொண்டு கெடுகின்ற அடியேன் எவ்வண்ணம் பிழைப்பேன்! எ - று. மேலுமேலும் பொய்ப்பொருளை யீட்டமுயலாது கருத்தமைந்து இயன்றமாத்திரம் சற்பாத்திரத்தில் உபகரித்தலே உய்யுநெறியென்பது கருத்து. (கூச)

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டதேவன்றிருவடிவாழ்க.

☞ இப்போது திருமூலலையந்தாதியுரை

பதிப்பிக்கப்படுகின்றது.

... UDDADHYAYA

அன்பளிப்பு

MAHAMAHOPADHYAYA.
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.
TIRUVANMIYUR, MADRAS-41.

6714
MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
THIRUVANMIYUR, MADRAS-41
6714

திருச்சிற்றம்பலம்.

காழியந்தாதி

சீர்காழி

அருணாசலக்கவிராயர்

இயற்றியது

இது

சிதம்பரம்

வாமதேவ

முருகபட்டாரகரால்

பலபிரதிருபங்களைக்கொண்டு பரிசோதித்து,

சென்னபட்டணம்:

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

விக்கிரமஞு ஐப்பசிமீ. 1880

இதன்விலை அணா - க.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்.

காழியந்தாதி.

காப்பு.

சூழியந் தாதிக்குத் தாவென நிர்த்தஞ்செய் சோதியிதழ்
வீழியந் தாதிக்குத் தூதுசென் றோன்முன்னோர் வேந்தனரு
ளாழியந் தாதிகுத தாலீ யெனக்கங்கை யாறளித்தோன்
காழியந் தாதிகுக் காப்பாகுங் காழிக் கணபதியே.

நூல்.

மணிகண் டமேனி நெடுமாலும் வேதனும் வானுமொன்பான்
கணிகண் டவாணரு முய்யமை வாரிக் கடுவையள்ளி
யணிகண் டகாழி யரசே யெனையுன் னடிபரவப்
பணிகண டவல்வினை யெய்தாமெய்ஞ் ஞானப் பதம்பெறவே.

பதத்தரங் கத்தர் நயனார விந்தம் பரித்ததண்டா
யுதத்தரங் கத்த ரவம்புனை காழியில் யோகர்சென்னி
யிதத்தரங் கத்தர் குருலிங்க சங்கம மென்னுமும்மை
விதத்தரங் கத்தரென் பார்பணி கேட்பவண மெய்த்திருவே.

திருவம் பலங்களி கூரநின் ருடிய செல்வர்பன்று
ளுருவம் பலமுயங் காதருட் காழியி லுற்றவர்க்கே
தருவம் பலமென வாழ்குரு நாதர்பொற் ருண்மறவா
திருவம் பலமொழி நெஞ்சேயஞ் சேலினி யேதமுற்றே. (ங)

முற்று மதிக்கு முகம்வாடுங் கிள்ளையை மோந்துபல்கா
லொற்று மதிக்கு முரைசெய்ய நாளு முயிர்வருந்தச்
சுற்று மதிக்குந் தகியா யிரவைத் தொலைக்கவரு
மெற்று மதிக்கும தென்னெனுங் காழி யிறையவனே. (ச)

இறையவ னஞ்ச வயற்காழி யீச னெழுதருநான்
மறையவ னஞ்ச மணிமுடி வாங்கிய வள்ளல்கண்ட
நிறையவ னஞ்ச மமுதாய்ப் பருகிய நித்தன்விண்ணோழ்
குறையவ னஞ்சலி யாதளித் தானடி கும்பிடுமே. (ரு)

கும்பத் தனத்தி யொருபாகன் சூரிய கோடியொப்பாம்
விம்பத் தனத்தி யுரித்தபி ரான்வெள்ளி வெற்பெடுக்குங்
கம்பத் தனத்தி னெரித்தாளுங் காழிக் கடவுள்பொற்று
ணம்பத் தனத்தியக் கேசனன் ஞேரடி நம்புவனே. (சு)

நம்பா னலந்தர நின்றோர்வண் டாடு நறுங்கமலக்
கொம்பா னலங்கரித் தூர்காழி நாதர்தங் கொச்சையின்பா
லம்பா னலங்கழி யேசெக்கர் மாலை யடுத்தநிலா
விம்பா னலம்பொருட் கேகின ரூருக்கு வெண்பிறையே. (எ)

பிறைக்கண் ணனைமலர்ப் பூங்கோடு பாயப் பெருகமுத
நறைக்கண் ணனைவயற் பாய்காழி நாயக நான்சமனுங்
கறைக்கண் ணனையினிக் காணுதுன் சேவடி காணமண்மேன்
முறைக்கண் ணனைமுலை யுண்ணு தருளுன்ன முன்னுகவே.

முன்னந் தியான நிறத்தானை மூவர்க்கு முன்னவனை
நன்னந் தியான முகைத்தானைக் காழியி னுயகனைச்
சொன்னந் தியான மருஞ்சுதை நேர்கவி சொல்லிநெஞ்சே
யின்னந் தியானமுஞ் செய்யே மிருவினைக் கென்செய்வமே

செய்ய வனத்தன் றிகழ்காழி மேவுஞ் சிவனுலக
முய்ய வனத்தனை வேணிவைத் தோனுக் குவந்தமலர்
கொய்ய வனத்தன் புறுதரு வாயுருக் கொண்டவருந்
துய்ய வனத்தன் புகழருள் வாரிதி தோய்குவரே. (கo)

தோயம் பரவை முடிக்கணிந் தோர்தமிழ்த் தூதுகங்குல்
வாயம் பரவைமுன் சென்றோர்தென் காழியை வாழ்த்துநர்
லாயம் பரவை யுறுமிடை நீர்மையி தாகிலென்ன [போ
மாயம் பரவை வரைவாய்த் தனித்து மணந்ததுவே. (கக)

மணமண் டலங்கலந் தோளர்கங் காளர் மணியெயில்வான்
கணமண் டலந்தொடுங் காழியுள் ளோர்பதங் காணவல்ல
குணமண டலம்புவி மேலன்பர்க் காமன்றிக் கோளரவின்
பணமண் டலந்தொட்டு மேதுகண் டான்விழிப் பங்கயனே.

பங்கா ரணங்கை வருவோர் விடங்கண்டு பண்ணவர்தா
மங்கா ரணங்கையுண் ணுதண்ணுங் காழியி லத்தர்வெற்பிற்
பொங்கா ரணங்கைம் முடிநாகஞ் சூழப் புதையிருள்வா
யெங்கா ரணங்கை வடிவேலொ டெய்த லியல்பல்லவே. ()

பல்லவம் போது துணையடி யேசெங்கை பங்கயமே
நல்லவம் போது மிணைவிழி யேசிறு நாண்மதிதான்
வில்லவம் போது நுதலே சிறிதன்பு மேவினுமவ்
வல்லவம் போதுமென் றுள்காழி யீசர் வரைமகட்கே. (கச)

வரைக்கா வலவன் றவத்தால் வனசத்தில் வந்ததெய்வப்
புரைக்கா வலவ னுறைகாழி வாய்வெம் பரிக்குமனு
வுரைக்கா வலவன் கொடிமணித் தேர்கணத் தோட்டுகதேன்
விரைக்கா வலவன் மதியகந் தோயும் வியனகர்க்கே (கரு)

நகரா வணமறை யோர்காண நாவல நம்பியொன்றும்
பகரா வணம்படி யோலைகரு மேலும் பழமறையே
நிகரா வணங்கொண் டளித்தாய்தென் காழியி னீண்டமணிச்
சிகரா வணங்கறி யாவென்னை யாளவுஞ் செய்குவையே. ()

வையங் கனக மனைமக்க ளென்று மருண்டுவெறும்
பொய்யங் கனக மதித்தேனை யுன்னடி போற்றிநிற்கச்
செய்யங் கனக முதுவீ டருளொளி சேர்சிகரச்
சையங் கனகந் தரந்தோயுங் காழியிற் சங்கரனே. (கஎ)

சங்காழி யானைமுன் கொண்டோடு மாயவன் றன்முதலோர்
பொங்காழி யானை யுறும்போது தோணியிற் போந்தருள்செய்
யங்காழி யானையுற் றேவல்செய் யாம லகந்தையென்னும்
வெங்காழி யானை வருமேவல் கொள்ள மெலிந்தனனே. ()

மெலிக்குஞ் சரம்பெறு தென்றலங் காமனை வென்றறுகால்
கலிக்குஞ் சரந்திகழ் வாகையெம் மான்வள்ர் காழிவெற்பி
லொலிக்குஞ் சரமொன் றடுநாளிற் பேதை யுயிர்புரப்பான்
வலிக்குஞ் சரந்தொட்டு நின்றானன் னேயொரு மன்னவனே.

மன்னவ னந்த வமண்மூடுங் கூடலில் வாகைபெற்றோன்
சொன்னவ னந்த விசைத்தமி ழாய சுருதிகொண்டோன்
முன்னவ னந்த நவொன காழி முதல்வனெம்மா
னென்னவ னந்த னிகராய பேரறி வெய்துமன்றே. (உ0)

அன்றுவர் திக்கு மணித்தேர் நடாத்தண்ண லான்கமலர்
தின்றுவர் திக்கு நிரைமேயுங் காழிச் சிவபெருமா
னென்றுவர் திக்கு மடியாரைப் போற்றுவ மேழ்பிறப்புங்
கன்றுவர் திக்குவிண் ணோர்தமைத் திக்கென்று காணலமே.

அலங்கா ரணிமுடி யாரன்ப ருள்ளத் தருளுருவா
யிலங்கா ரணிபங்கர் காழியன் னீரிட ரெய்தலுள்ளங்
கலங்கா ரணியங் கடந்தீ ரினித்தண் கழுமலமு
மலங்கா ரணிமல ரோடையுங் கூடமு மாடமுமே. (உஉ)

மாடகத் தந்தி மணிவீணை யார்மக வான்பணியு
நாடகத் தந்தி யணிகாழி வாழ்சட்டை நாதர்வெற்பன்
கோடகத் தந்தி னுடங்கிடை யார்க்கன்பு கொள்ளவரி
யோடகத் தந்தி வனசமொப் பான தொளிமுகமே. (உ௩)

முகக்கணிச் சிக்குமெய்ம் மூவடி வானவர் மூரிவென்றி
தகக்கணிச் சிக்கு மலர்க்கைதந் தோர்பணந் தாளிற்செங்கை
யகக்கணிச் சிக்கு வளைந்தோர்தென் காழி யமலர்பொற்றாள்
புகக்கணிச் சிக்கு மணங்கடந் தோர்க்கில்லைப் புன்பிறப்பே.()

புன்னாகத் தாரகங் காளதென் காழிப் புனிதவுமை
முன்னாகத் தாரகஞ் சொல்வாய தக்கன் முகம்புகுநாள்
வன்னாகத் தாரகங் காரங் களைந்தருண் மாமணியே
யென்னாகத் தாரகந் தீர்ப்பா னிருந்தரு ளென்றைக்குமே. ()

என்றருந் தந்த முருத்தோர்வில் வேட்டுவ னெச்சிலன்பா
லன்றருந் தந்த மிலார்காழி வெற்பி லடிங்கவனாற்
குன்றருந் தந்த மணிகளொவ் வொன்று கொழுங்கதிர்போன்
மின்றருந் தந்த மணிவிரும் போமிலை வேலரசே. (உ௬)

காழியந்தாதி.

அரகங் கரிபங்க கங்கர் திரமேவன றனவரதம்
வரசங் கரிபுகழ் காழியர் வெற்பன் மணப்பொருட்டான்
முரசங் கரிமிசை யார்ப்பச் சொரிந்த முழுநிதிகாண்
பரசங் கரிய நெடுமெலர்க் கூந்தற் பணிமொழியே. (௨௭)

மொழியா வருந்திரு நீறிட மாறன் முதுகுநிமிர்த்
தழியா வருந்தநி யன்றுளொ டின்புற வாற்றினெதிர்
வழியா வருந்தமிழ் சொன்றுரைக் காழியில் வைத்தருள்கூர்
விழியா வரும்பவ மீட்டுமெய் தாதுனை வேண்டுவனே.(௨௮)

வேண்டா மலைய முறுகானெஞ் சேயென்று மேவுநிறை
நாண்டா மலைய மலைவதெல் லாமுரை நம்மைவினை
யீண்டா மலைய மொழித்தாளுங் காழி யிறைவர்தினஞ்
சேண்டா மலைய மருமுடி யார்தந் திருச்செவிக்கே. (௨௯)

திருக்கா தருண வொலிக்கருள் காழிச் சிவபெருமான்
சுருக்கா தருணமக் கீயும் பிரான்வரைச் சூழிருளின்
கருக்கா தருண வெயில்விரி காணிலெங் கன்னிதன்னை
யருக்கா தருண மிதுகாக்க வேண்டுநல் லன்புகொண்டே. ()

கொண்டலை யாறு முயன்றாருந் திங்களைக் கோட்டுவைக்குந்
தண்டலை யாறு மருவிய காழியர் தாள்பணிந்தேன்
பண்டலை யாறமை யாறுமற் றேனென் பரஞ்சுமக்கு
மண்டலை யாறு மினியாறும் வேதன் மலர்க்கரமே. (௩௧)

காத்தே வரையுங் கவிகொண்டு நாட்டினுங் காட்டினுஞ்சேர்
புரத்தே வரையும் புகழ்வீர் வருமுத்தி புத்தியென்றே
வரத்தே வரையுயர் தென்காழி நாதரை வன்றொண்டரா
தரத்தே வரையிருட் டேனை யோதுந் தமிழ்மறந்தே. (௩௨)

மறவா மனம்புக மன்னுயிர் [illegible] பா
ஊறவா மனம்புக் குயர்ந்தோன் முதுகெலும் பூணநின்னீற
இறவா மனம்புகழ் சேர்காழி வாணன் றிருவடியே
பெறவா மனம்புரிந் தாற்புத்தி யாமவன் பேரினையே. (௩௩)

பேரர வந்திரி சூலங்கை தாங்கிய பிஞ்ஞகவான்
காரர வந்திரி யாச்சோலைக் காழிக் கழுமலமா
மூரர வந்திரி நந்தீ வினையையென் றோதிநில்லாத்
தேரர வந்திரி வார்பெறு வார்கழுச் சேகரமே. (௩௪)

சேகரக் கங்கை யிறையோ னரக்கனைச் சீறுமுண்மை
யாகரக் கங்கை யளித்தோன்றென் காழிகண் டஞ்சலியா
மூகரக் கங்கை படைத்தும் படைத்திலர் மோனவருட்
சாகரக் கங்கை யுறுதுற்று வீடென்று சார்குவரே. (௩௫)

சாரா வரம்பை மதிகதி ராவி தபனன்விண்கால்
பாரா வரம்பை யிடத்தார்தென் காழிப் பரமரென்னி
னேரா வரம்பை யுளைநீத் தருளு நிமலர்பொற்றாட்
பேரா வரம்பையுற் றேனினி வேட்கை பிறிதில்லையே.(௩௬)

இல்லங் கமலை யிருக்கநல் லோருற் றிருக்கவென்று
நல்லங் கமலை வினைதீர்ந் திருக்கவு நாடினையேற்
செல்லங் கமலை யிடப்பாகர் காழியிற் சென்றுநெஞ்சே
வில்லங் கமலைகொண் டான்பேரி லொன்றை விளம்புகவே.()

புகலன் பரியங் கருநாண் மதுரைப் புரவலன்மு
னிகலன் பரியெனக் காட்டிய காழி யிறைவன்கொன்றை
யகலன் பரிசனத் தார்மலர்த் தாள்பணிந் தன்புசெய்யும்
புகலன் புரிபுலங் கூர்கூற் றினுக்குப் புயங்கிலனே. (௩௮)

இலம்பக மாயவ னுகத்தன் காழி யிறைகுருகா
சலம்பகமாயவன்சூர்மாயவேல்கொணடதந்தைதந்தை[கோர்
நலம்பக மாயவன் பாற்கொண்ட செய்கைமெய்ஞ் ஞானமிக
புலம்பக மாயவன் ரூன்பதி யென்று புகன்றிடுமே. (கூகூ)

புகவா சகம்புகழ் தென்காழி தன்னிற் புகுந்திறைநான்
முகவா சகமிசைத் தோதிநெஞ் சேபுண் முடிசுமந்த
நகவா சகம்புனை வோயெனிற் கோள்விடு நாண்மதியந்
தகவா சகங்கெடு மேலே தனக்கொரு சஞ்சலமே. (சுo)

சலசந் திரிகைக் கெழுபாத ரண்டமுஞ் சத்தியுமட்
கலசந் திரிகைக்கு நேர்செயுங் காழிக் கடவுள்வெற்ப
பலசந் திரிகைக் கெரிமூட்டும் வேட்டுவர் பைங்கொடியோ
நலசந் திரிகைக்கு வாடுமுன் பாலன்பு நல்குவதே. (சுக)

நல்லா ரவாரந் திகழ்காழி யாரடி நாண்மலர்மேற்
கல்லா ரவார மணிந்துகை கூப்பிக் கவுணியர்வாய்ச்
சொல்லா ரவார வுரையாத மக்களிற ரேட்டறுகம்
புல்லா ரவார முறும்பசு வாயினும் போதனன்றே. (சுஉ)

போதத்தி யாகந் தருங்காழி நாதனைப் பூங்கரத்தாற்
காதத்தி யாகங் கிழித்தபி ரானைக் கருதிலரேன்
மோதத்தி யாக வருமிடர் வாய்ப்பட்டு முன்புதக்க
னேதத்தி யாக மிழந்தாங் கிழப்ப ரிருந்தவமே. (சுங)

தவனம் படாவருந் தீப்பவ மாறிடத் தண்ணளிகூர்
சிவனம் படாமுலை பங்கனங் காழித் திருவனையாய்
கவனம் படாவிழி நின்பா லிலைவிற் கழைகுழைக்கு
மவனம் படாமன்னர் தேர்மீது வெள்வளை யார்த்ததுவே. ()

ஆரா தனைவரு மன்பர்தென் காழி யமலரச்சங்
கூரா தனைவரும் வாழநஞ் சுண்டவர் கோயிலெய்தா
வோரா தனைவருஞ் சூழாது கால னுறாதுபவஞ்
சேரா தனைவருந் தாதுய்யு மாறென்று தேர்குவனே. (௪௫)

தேரங் கவிக்கு மலர்செவி யாயத் திரிபுரத்தோர்
போரங் கவிக்கு நகையாய்தென் காழியிற் பூங்கடுக்கைத்
தாரங் கவிக்கு மகளிர்பொன் னாசையிற் சஞ்சலித்தெந்
நேரங் கவிக்கும் வினையேனைக் காககவு நின்கடனே. (௪௬)

கடலம் பரமங்கை பொன்முக னேர்தருங் காழியெந்தா
யடலம் பரமை யொருவேள்விக் கேகிய வாரமுதே
யுடலம் பரமென் றுனைநோக் கிலாவிழி யுற்றமலப்
படலம் பரமருந் தாலொழி யாதுன் பணியன்றியே. (௪௭)

பணிவல் லியந்தொழ நின்றாடுங் காழிப் பரமகொங்கை
மணிவல் லியம்பிகை தன்பாக வென்று மருவுங்கொல்லோ
வணிவல் லியங்கனை யாரிடத் தாசையி னாயிரத்தோர் [தே.
துணிவல் லியம்புயன் போற்றுநின் பால்வைக்கத் தோற்றுவ

தோற்றங் கரையா மதிற்காழி மாமலைத் தூயர்வைகை
யாற்றங் கரைய மணலேந்து நாயக ரக்கமணி
நீற்றங் கரையகந் தாழ்வாரைத் தாழ்பவர் நீண்டபுகழ்
மாற்றங் கரைய வருமா லயனண்டர் மன்னவனே. (௪௯)

மன்னந் திருப்புடை மாமரு தூரிற்பொன் வண்ணங்கொள்ள
வன்னந் திருப்புடை வேதிச்சித் தேச ரழைத்ததனான்
முன்னந் திருப்புடை மெய்சாய்க்குங் காழி முதலையுற்றாற்
சொன்னந் திருப்புடை யேவங்கு நல்கன் சுமநதுகொண்டே

சுமையச் சிலைவிடு தேர்க்குந் தனக்குஞ் சொரூபமில்லை
நமையச் சிலையளி நாண்வில்லி யென்செயு நாட்கதிர்சூ
ழிமையச் சிலைதனை முப்புர வேந்த ரெதிர்ந்தவந்நா
ளமையச் சிலைசெய்த காழியெம் மான்வரை யாரணங்கே. ()

வரையா யிரம்பணி தென்காழி மால்வரை வாணன்மூன் றூ
ருரையா யிரந்திர மின்மணி யானவ னூற்றுருகிப்
பரையா யிரந்த மநுவோது நங் தேசிகன் பத்தர்க்கருட்
கரையா யிரங்கி வருஞ்சென்ம வாரி கடப்பதற்கே. (௫௨)

கடமாதங் கம்பணி வெண்ணூவ லீசர் கனத்ததனை
தடமாதங் கந்திகழ் காழியர் செங்கலைத் தண்டமிழ்க்காய்
வடமாதங் கம்படச் செய்தளித் தோர்தம்மை வாழ்த்துமன்ப
ரிடமாதங் கம்புகு மோகற்ப காலங்க ளெய்தினுமே. (௫௩)

எய்தவ ரம்புர மெய்தாமல் வேலை யெரித்தயன்கங்
கொய்தவ ரம்புரம் வென்றதென் காழியர் கூடனகர்க்
கைதவ ரம்புர மாற்றவந் தாரென் கருத்தில்வைப்பார்
செய்தவ ரம்புரந் தந்தகன் வீறட்ட சேவடியே. (௫௪)

வடிவந் தனமென் றிறுமாந் துளீர்முன் வகுத்தவிதிப்
படிவந் தனமென் றுணரீ ரனந்தம் பழமறைநூன்
முடிவந் தனங்க ணருள்புரி காழி முதல்வனம்பொ
னடிவந் தனமறி யீரறி வீர்நர காலயமே. (௫௫)

ஆல விருக்க நிழற்சன காதிய ரன்புசெய்யக்
கோல விருக்க விடையோதுங் காழிக் குருபரனே
நால விருக்க மயில்பாக நெஞ்சிலுன் னூபுரத்தாள்
சால விருக்கவைப் பாரடிக் கீழெனைத் தான்வைக்கவே. ()

காழியந்தாதி.

6714

ஙவயஞ் சலந்தர ஞலழி யாதட்டு வாகைகொண்டு
செய்யஞ் சலந்தர மெண்ணுது தக்கனுந் தெய்வமென்றே
ரையஞ் சலந்தர மாற்றிய காழி யருமருந்தே
மெய்யஞ் சலந்தரக் கூற்றெய்து நாளில் வெளிநிற்பையே. ( )

பையா டனந்தன் புகழ்காழிப் பிள்ளைக்குப் பாலருளுங்
கையா டனந்தன மாய்க்கொண்ட கோன்றந்தகாதலெண்ணூர்
மெய்யா டனந்தன் மருகோன் வெறியயர் வெங்களத்தே
மையா டனந்தன் பொருட்டா லடுதன் மரபல்லவே. (ருஅ)

பலங்கற் பகமிடு வானுங் கமலமும் பாப்பணையும்
புலங்கற் பகவல்லி யார்க்கரு ளாரியன் புள்ளெடுத்த
விலங்கற் பகவன் வளர்காழி மாநகர் மேவியங்கே
யிலங்கற் பகனெடிப் போதிருப் போர்த மிருக்கைகளே. ( )

இருப்ப ரணங்கருத் தென்றே யரசுசெ யீசர்வெள்ளிப்
பொருப்ப ரணங்கொழித் தாள்காழி யார்வரைப் பூங்கிளிகா
டருப்ப ரணஞ்சும் புனமயில் காள்சென்ற தாரைசொல்வீர்
விருப்ப ரணம்புனை யாவெரிங் வேட்டுவர் மென்கொடியே.()

கொடியவென் பாரிடஞ்சூழ்கூத்தவேட்டுருக்கொண்டுமென்ன
னெடியவென் பாரிடஞ்சேரன்னமேயென்றநித்தவிண்ணோர்
கடியவென் பாரிடம் போற்றுந் தலைபுனை காழிக்கங்கை
முடியவென் பாரிடங் கொள்ளா வினைகெட முன்னுகவே.()

முன்ன விராவண மேவிய வேணியன் முத்தமிழ்க்காய்ப்
பின்ன விராவண நம்பிமுன் காட்டும் பிரான்கதிர்
யென்ன விராவணன் பாலருள் காழிய னேதிலர்பான்
மன்ன விராவண னம்பினர் பாலுறை வண்ணத்தனே. (சுஉ)

வண்ணந் தலைவரும் வாயில்வைத் தூதி வளர்புடவிக்
கண்ணந் தலைவரு மெய்தாமற் காத்தவர் காக்கநஞ்ச
முண்ணந் தலைவ ருமைபாகர் காழியை யோதுநெஞ்சே
யெண்ணந் தலைவரு மெண்ணரும் வீடு மெளிவருமே. (சுங)

வருமன் பரசமை யந்தோளி பங்கன் மதனைக்கண்ணாற்
பொருமன் பரசமை யங்கையன் காழிப் புரத்தருள்கூர்
கருமன் பரசமை யம்புகு தாதெனைக் காத்தருளுந்
தருமன் பரசமை யங்கண்டு போற்றத் தருமறிவே. (சுச)

அறியாப் படிவனைக் காழிப் பிரானையொ ராயிழைமுன்
செறியாப் படிதறி நின்றெழுந் தானைத் தினந்தமிழ்க்காய்
நெறியாப் படிமிசைக் காசுவைத் தானை நினைந்துசொலவீர்
குறியாப் படிதொடுத் தலவோரைப் பாடியென் கூடுவதே. ()

கூடலஞ் சங்கம் பெறுங்கவி தேருங் குழைச்செவியென்
பாடலஞ் சங்கம் பெருக்கவி தேர்ந்தருள் பாலிகருமோ
நீடலஞ் சங்கந் தகர்ப்பக் கருவென்று நித்திலங்கொண
டோடலஞ் சங்கம் பலகாட்டுங் காழி யொருமுதலே. (சுசு)

ஒருவான் பணிமுடி தாருக லிங்க முவந்திருத்தித்
திருவான் பணிசெய வாங்கேயவ் வெணகதிர் செங்கதிரைப்
பொருவான் பணியுவன் வைகலு மேத்தப் பொருவிடைமேல்
வருவான் பணியுர கத்தான்றென் காழி மலையண்ணலே.(சுஎ)

மலையம் புகலிக் கடுங்கா லுலாவ வளர்ந்தமுந்நீ
ரலையம் புகலித் திடவயர் வாளுயிர்க் கியார்துணைகாண்
சிலையம் புகலித் திருமா லெனப்பெற்ற சேவகநன்
னிலையம் புகலிப் பெருங்காழிக் கேகொண்ட நின்மலனே.()

6714

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-4

மலப்புற வம்பனை மெய்ம்மூக்கு நாச்செவி மாலை[illegible]
புலப்புற வம்புகும் வேடனை யாண்டருள் பூப்பதென்றாள்
கலப்புற வம்பிகை யோடெயில சூழ்கடற் காழியெனுந்
தலப்புற வந்தனி லேவீற் றிருக்கின்ற சற்குருவே. (௬௯)

குருகணிலைகைக்கைந்தெழுத்தோதுங்கிள்ளையைக்கொண்டிலவா
வருகணி கைக்குலத் தோரேவல் செய்யவும் வாயத்திடுமோ
வொருகணி கைக்கும் விளைதீரக் காழி யொருவன்பொற்றா
ளருகணி கைக்கெழு வோரேவல் செய்தில மாயினுமே (௭0)

ஆயகங் கந்தரஞ் சேர்மதிற் காழி யமர்ந்ததெய்வ
நாயகங் கந்தரன் பாங்காசி வாழ்விச்வ நாதனென்று
லேயகங் கந்தரங் கம்பகைக் கோதிய தென்னமின்னுந்
தீயகங கந்தர மாரற் குயிர்கிலை செப்பிடுமே. (௭௧)

செப்ப வருந்திவ சந்தொறு மோடித் திரிந்துபன்றி
யொப்ப வருந்தி யுடற்கன்பு வைப்பவ ரூழிநமன்
கைப்ப வருந்தி மெலிவார்நங் காழிக் கடவுட்கன்பு
வைப்ப வருந்தி மலரோன் விதியில் வருந்திலரே. (௭௨)

இலவ தரத்தி யொருபாக மாதவ ரீட்டுமகத்
தலவ தரத்தி தனைவென்ற காழித் தலைவமுன்னால்
வலவ தரத்தி னிலையெழுத் தான்மண் மறந்துவிண்மேற்
செலவ தரத்தி னெனைக்காப் பதுநின் றிருவடியே. (௭௩)

திருக்கங் கணஞ்சிலை நாணுகப் பூட்டித் திரிபுரத்தை
முருக்கங் கணம்ப னுறைகாழிக் கோயிலின் முன்புசெல்லார்
நெருக்கங் கணம்புனை யார்பணி யார்பணி நேர்ந்ததொண்டர்
வருக்கங் கணம்புகு தார்பிறந் தாலுதென் மண்ணிடத்தே. ()

இடக்கா சினிபணி யெம்பெரு மான்றிசை யெட்டுமெளங்
தடக்கா சினிபுடை சூழ்காழி வாழெந்தை யாடரவப்
படக்கா சினிவந்த நூபுரத் தாளைப் பணியிலுடல்
விடக்கா சினிவரு மோவரு மோமறு வேதனையே. (௭௫)

வேதா ரணிய மணவாளர் காழி விமலர்கொன்றைப்
போதா ரணிய மரும்பாதத் தன்பர் பொருளென்பரோ
மாதா ரணியம் புயத்தேந்து மாட்சியும் வானவர்பொற்
காதா ரணிய லரசாட்சி யும்பிற காட்சியுமே. (௭௬)

காணரும் பன்னகங் காட்டிய வல்குற் கரும்பனையார்
வீணரும் பன்ன முலைக்கிரங் காதருள் வேலையமு
தூணரும் பன்ன மிசைமா தவரு மொலிமறைநூல்
வாணரும் பன்ன வருங்காழி மாமலை வானவனே. (௭௭)

வான வரம்பன் பரிமேல் வரவெள்ளை வாரணமேன்
ஞான வரம்பன் வரவருள் காழியி னம்பர்வெற்பிற்
கான வரம்பன்ன கண்ணியைக் கண்டெய்துங் காளைவர
மான வரம்பன் முறைதருந் தேவர்க்கு மாற்றரிதே. (௭௮)

அரியுடை யக்க விணைத்தாளர் காழி யமலர்தென்ன
னெரியுடை யக்கவி யோதிய சேய்தொழு மீசர்வெற்பில்
விரியுடை யக்கவிர் சூழ்கான் வருமிவள் வேடர்தழை
வரியுடை யக்கவிர் மாலைமின் னீபுவி மாமன்னனே. (௭௯)

மாமா சுகந்த மணிமிடற் றாய்பொன் மலர்ந்தகொன்றைத்
தாமா சுகந்த மலர்ச்சோலைக் காழியிற் சங்கரனே
காமா சுகந்தவ னோக்கிய வாகையிக் கன்னிக்குண்மை
யாமா சுகந்த விரவலர் வாளி யலன்விடிலே. (௮௦)

விடிய வருநகதிர் சூழ்மதிற் காழி விமலர்வெற்பி
னெடிய வருந்ததி யனனார் மனைவயி னீடுமிரா
முடிய வருந்தி யிராதன்ப ரெயதினு மொய்ம்மதிபோற்
கடிய வருங்குடிச் சேவலுந் தாயர்வெங் காவலுமே. (அக)

காவடி வான முயர்காழி யீசர் கவுரிகொங்கைப்
பூவடி வான மணிமார்பர் வெற்பினிற் போர்புரிகைம்
மாவடி வானன்பி னூலேனல் காவன் மறந்துநிற்குந்
தீவடி வானங் கொடுந்தா யகத்திற் செறிக்குமன்றே. (அஉ)

செறிவா னரம்பையர் தங்கேள்வர் பூசிக்குந் தேமலரின்
பிறிவா னரந்த மணநீக்கு மென்றலை பேதையர்நல்
லறிவா னரம்புளர் வோர்பந் தெறிய வருநகனிகொண்
டெறிவா னரம்பயி லுஞ்சோலைக் காழி யிறையடிக்கே (அங)

அடியா வனசத்த வாரிதி மாலறி யாதனநீண்
முடியா வனசதத னூடரி தேனு முழுதறியம்
படியா வனசத்த னென்றிக ழாளென்னைப் பண்ணவருங்
கடியா வனசதத மார்தமிழ்க் காழிக் கறைக்கண்டனே.(அச)

கண்டலங் கான மலரே குருகணி கைச்சிறியார்
வண்டலங் கான மகிழ்புன்னை யேகங்குல் வந்தனரோ
விண்டலங் கான மருமல ரோன்றொழும் வேணியருட்
கொண்டலங் கானந்தக் கூத்தாடுங் காழிநங் கொற்றவரே. ()

கொற்றுருத திக்கு நெடிதுயிர்க் கும்பணிக் கோலர்பொன்னிச்
சொற்றுருத் திக்கு வளைக்கண்டர் காழியர் தோளையல்லான்
மற்றுருத் திக்கு மதியா வொருத்திக்கு மாதர்குழா
முற்றுருத் திக்கு வளைக்கின்ற வேள்வரி னுட்பகையே. (அசு)

உள்ளத் தருக்கு மழுக்கா றமன்றி யுறுதியென்றூக்
கள்ளத் தருக்கும் வெளிப்படு மோதென் கடலையங்கை
வள்ளத் தருக்கு முனிபோற்றுங் காழி வரதர்பொன்மான்
கொள்ளத் தருக்கும் வினைதீர்ப் பவர்தங் குரைகழலே. (அஎ

குரமா விலைசெய்த தென்காழி யீசர் குவட்டுமன்னர்
சரமா விலையுறக் கண்டோ மிலைமுன்கைக் கட்டியில்லைச்
சரமா விலையிவர் தாம்வேட்டஞ் செய்தது தானுமவர்
வரமா விலையன்றி யுண்டோ கரிநிரை மானிரையே. (அஅ)

மானகங் காள மணிப்புய னேதிரை வாரிதிபோ
லானகங் காள மொலிகாட்டுங் காழி யருமருந்தே
போனகங் காள மெனக்கொண்ட தேவவெப் போதுதமி
யேனகங் காள மொழிந்தொழி யாமுத்தி யெய்துவனே.(அகூ)

துவரத் தனையொளி வேணிப் பிரானையின் சொல்லமுதங்
கவரத் தனையன் றனக்கமு தந்தந்த காதலியா
ரிவரத் தனையுயர் காழியெம் மானையுற் றேவல்செய்யு
மவரத் தனைவரும் பெற்றார்பெற் றேனில்லை யவ்வரத்தே. ()

வரவாம் பலதனை யுற்றோர் வதன மதிக்கணிகா
யிரவாம் பலமலை தன்பாகர் காழி யிமயவெற்பிற்
குரவாம் பலபரி யன்பர்பொற் றேரிற் குறித்தசங்கத்
தரவாம் பலமெய்த லாலணங் கேமணந் தானெய்துமே (கூக)

எய்த்தவ ராக வினைக்குரு லைக்கமு நீங்குசெல்வ
முய்த்தவ ராகமஞ் சேர்காழி நாத ருணர்வுருன்ற
மெய்த்தவ ராக முடைய பிரானென்னை வேண்டிவந்தார்
பொய்த்தவராகவமஞ்சேன்வெஞ்சேற்கொடிப்போர்மதனே

மதவத் திரமக வைப்பெற்ற காரணர் வல்லியத்தோ
லிதவத் திரமெனக் கொண்டதென் காழி யிறைவர்வெற்பில்
விதவத் திரமத வேளெய்யும் போதன்பர் மென்மலர்த்தா
ருதவத் திரமனத் தன்பாமென் பாங்கி யொருத்தியுமே. (௬௩)

ஒருகா தரம்பெறச் சாய்ந்திறு மாந்தென் னுரைகளெல்லா
மிருகா தரம்பொரு வேலென்ற புல்லரை யேத்தறியே
னருகா தரங்கணி காட்டுநங் காழி யரனையுற்றேனை
றருகா தரந்தடுத் தேன்றொடுத் தேன்முத் தமிழ்சொல்லவே. ()

சொற்பனங் காயமென் றெண்ணியப் பாலவஞ் சூழ்பசுநூல
விற்பனங் காய விறைஞான மாமது மேவியபி
னற்பனங் காய மலராமென் னூர்க்கு முரைத்தருளா
நிறபனங் காய புகழ்க்காழி மாமலை நிற்பவனே. (௬௫)

நினைக்கடங் காத மயக்கந் தரவெற்ப நேரிழைபூந்
தனக்கடங் காத னிறைத்ததென் னூலென்ன சாற்றுவன்யான்
வனக்கடங் காதவன் மேனியில் வீச மலர்ந்தபுட்ப
வினக்கடங் காதங் கமழ்காழி நாத ரிருங்கிரிக்கே. (௬௬)

கிரிசர மன்றி யிருசர * மன்றிக் கிடைத்தவெம்போர்க்
கரிசர மம்புக வென்றருள் காழிக் கடவுளர்தா
மரிசர மம்புயத் தோன்பாக னுகவைத் தாண்டருளும்
புரிசர மங்கையர் மங்கல நாணைப் படைத்ததுவே. (௬௭)

படைக்கலங் காரந் தகன்காட்டு நாளுன் பதங்களுக்கே
யடைக்கலங் காரங் குரிமின்னல் யாக்கையென் றுய்ந்துவினை
யிடைக்கலங் காரஞ் சலிக்கருள் காழி யிறைநடத்து
நடைக்கலங் காரம் பெறுமூர்த்தி யாதி நரையிடையே. (௬௮)

---

* இருசரமாவன - வனசரம், நதிசரம்.

நரமா மடங்க லுரிசாத் தியசட்டை நாதவனந்
தரமா மடந்தை திருக்கோலக் காவிற் றவஞ்செயநல்
வரமா மடங்கலு மாலோடு தந்து மணஞ்செய்வித்த
பரமா மடந்தவிர்த் தாளென்னைக் காழிப் பராபரனே. (௯௯)

பரத முடிக்க நடஞ்செய்யுங் காழிப் பரமர்வைகு
மிரத முடிசசி கரத்தெதிர் நோக்கி யிறைஞ்சிமுன்னாள்
விரத முடித்த திருநக ரித்திரு மின்னொடன
வரத முடிக்கட் கரங்கூப்பி நிற்குமொர் மாமணியே. (௧00)

வாழி சிகர மலைச்சட்டை நாயகர் வானவரான்
வாழி சுருதியுங் காழியந் தாதியும் வாழிபொன்னி
வாழிதென் காழித் தலத்தன்பர் யாவரும் வாழியென்றும்
வாழிதென் கூடற் சிதம்பர நாத மகாமுனியே.

காழியந்தாதி முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்

MAHAMAHOPADHYAYA
V. SWAMINATHA IYER LIBRARY
ANMIYUR II MADRAS 41

உ

கணபதிதுணை.

விலவவனத்தந்தாதி

உரைபாடம்.

கோகிலாம்பிகைமாலை.

முத்துக்குமாரக்கடவுள் பஞ்சரத்தினம்.

இவை

புதுவை - கலவை சுப்பராயசெட்டியார்
தருமவித்தியாசாலைத்
தமிழ் உபாத்தியாயர்களு ளொருவராகிய
சுப்பு-இராமசாமிமுதலியாரால்
இயற்றி,
திருப்பாதிரிப்புலியூர் இயற்றமிழாசிரியர்
ம-ா-ா-ஸ்ரீ - க - ரா - சிவசிதம்பரமுதலியாரவர்கள்
முன்னிலையில் பரிசோதித்து,
புதுவை - தபெல்லியோம்
ம-ா-ா-ஸ்ரீ-சுப்புமுதலியாரவர்கள் முயற்சியால்

சென்னை
எம்ப்ரஸ் ஆப் இந்தியா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டன.

1884

B34

உ

சிறப்புப் பாயிரங்கள்

இஃது

புதுவை-கலவை சுப்பராயசெட்டியார்
தருமக் கல்விச்சாலைத் தமிழ்ப் பிரதமபண்டிதராகிய
ம - ா - ா - ஸ்ரீ,

சாமி. பொன்னுப் பிள்ளையவர்கள்

சொல்லிய

நிலைமண்டிலவாசிரியப்பா.

திருவளர்புரிசையந் திகழ்மாடகூடந்
தருவளர்நந்தனஞ் சங்கனம்பயில்வயல்
அனந்தருசாலை யனந்தநீர்கல்விக்
கனந்தருசாலைக் கவினறச்சாலை
நல்வளனுறவிவை நாளும்பொலிதரூஉம்
வில்வவனமாம் வியநகரதனில்
வானுலாஞ்சிகரியும் வனிதையருறுப்பைத்
தேனுலாநறுமலர் தெரிக்குமதான்று
படிந்தவர்வினையெலாம் பாறச்செய்துவிண்
படிதரச்செய்திடும் பண்பாராவியும்
ஆசையுளாருட னண்டர்மற்றெவரு
மாசையாப்பூசைசெய் தன்புறுகாட்சியு
மினனொளிமழுங்க விலகுசீரானைச்
சினகரமமர்ந்துச் செகமெலாம்புரக்க
மனமகிழ்ந்தருவரம் வழங்கிடுமெந்தையாந்
தனதனைத்தனதனுச் சந்தமுடையான்
றேமிலாத்தேவர்க டொடர்வருகாட்சியான்
காமீசற்கும் கவின்குயிலமைக்கும்
அந்தாதிமாலை யறைகெனத்தளிக்குச்
சந்ததந்தரும கர்த்தனுஞ்சார்ந்தவர்
புலக்கரம்பகற்றிப் போதநீர்தேக்கி
கலச்சிவப்பயிரா நாற்றினைச்சிந்தையி

ஞட்டியேயின்ப நாளுநுகர்ந்திடக்
கூட்டுமெய்ஞ்ஞானக் குரவன்மொழிதர
நூல்வழிப்பொருளி னுட்பமதுணர்ந்து
நால்வகைச்சொன்மலர் நன்காய்ந்தெடுத்தே
ஈரைங்குற்றமு மகற்றியிந்நெறியே
ஈரைங்கவினு மிலகுறயார்க்கு
மந்தாதிமாலையா வமைவுறத்தொடுத்தே
யந்தாதியம்மை யடியிற்சாத்தினனாற்
புதுவையத்திவரியே புனிதருலாவரும்
புதுவையம்பதியிற் பொருந்தியதூயோன்
கற்றோர்க்கிருகணன் கல்வியந்திருவினன்
பெற்றோர்பிறந்தார் பேணுசற்பாத்திரன்
திங்களாட் கண்ணியான் செஞ்சடைத்தேங்கிய
கங்காகுலத்தினன் கலைக்கடல்கடந்தோன்
சுப்பராயவேள் சுதனெனச்சொற்றிடும்
தப்பிலாராம சாமிநாவலனே.

இஃது

திருவாவடுதுறை யாதீன மஹாவித்துவான்

திரிசிரபுரம்

ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் மாணாக்கராகிய

சென்னைக் கவர்ன்மெண்டு

நார்மல் பாடசாலைத் தமிழ்ப்புலவர்

ம - ள - ள - ஸ்ரீ, சோடசாவதானம்

தி. க. சுப்பராய செட்டியாரவர்களியற்றிய

நேரிசையாசிரியப்பா.

மணிமெறிதரங்க வாரிதிபுடைசூழ்
திணிநிலவரைப்பிற் செறிதரச்சூழ்போய்ப்
பாந்ததிசைவிழுங்கும் பாயிருட்படலையை
விரிந்ததன்கரங்களான் மெலிவுபட்டவள்ளி
வாரிவாய்மடுத்துச் சீரிதிற்றேக்கெறிந்
தரிறபவுலாய்த்தரும் பரிதிமான

வல்லொளிமழுக்கும் வில்லொளிரார
நடுவட்கிடந்த வடுவின்மாமணிபோற்
சொல்வரம்பிகந்த பல்வளப்பொலிவாற்
சேணுடுவக்குஞ் சோணாடுமுதலிய
தமிழ்ச்சுவைதேக்கிய தன்மைசானாட்டுட்
குமைப்பிலாவறங்கூர் கொடுங்காலத்துந்
தன்வளஞ்சிறிதுந் தணப்பிலதாகி
மன்னியபசிப்பிணி வாய்க்கோட்பட்ட
பல்லுயிரொருங்கு படரினுந்தாங்குங்
குன்றுவளத்திற் பின்றுதோங்கி
நடுவாய்நிற்றலி னடுநாடென்னப்
பொலியுமிந்நாட்டுட் கலிதபவிளங்கும்
புதுவைநன்னகருள் விதுதவழ்ந்துறங்கும்
போகுயர்குடுமிச் சேகுசெறிதருநிறை
நைமிசவனமுத னலஞ்சால்வனங்கள்
மெய்மிகப்புளகித்து விரிகரங்கூப்பும்
வில்வவனத்துறை யல்லுறழ்மிடற்றுப்
பொன்வீழ்த்தன்ன புரிசடைக்கடவு
டன்புகழமைந்த சால்பினந்தாதியுங்
குலவருட்கடலாஞ் சோமாணிடப்பா
ணிலவுகுயிலம்மைமே னிகரில்பாமாலையு
மொருபெருங்குரவற் குரவுபூண்ட
வள்ளிலைநெடுவேல் வள்ளன்மீது
பஞ்சரத்தினமும் பாற்படுபுலவர்
நெஞ்சமுவப்ப நிலைபெறவுரைத்தன
னன்னவனியாரெனி லறையக்கேண்மின்
பொன்னின்வளஞ்சால் பொருப்பெனயாவருங்
காண்வரக்கற்ற மாண்பமைகல்வியன்
புண்ணியஞ்சான்ற தண்ணியநடையினன்
சுரநதிக்குலத்திற் றுரிசறத்தோன்றியோன்
பல்வகீருலகிற் பலசமயங்களுட்
சைவமேசிறக்கெனத் தானறிகற்றோன்
புகழுமப்புதுவைத் தகவுசானகரினன்
சுப்புராமசாமி
யொப்பில்குணத்தி னொருவன்றானே.

இஃது
ஷை மீனாட்சி சுந்தரம்பிள்ளை யவர்கள்
மாணாக்கரி லொருவராகிய திருப்பாதிரிப்புலியூர்
இயற்றமிழாசிரியர்
ம-ா-ா-ஸ்ரீ,
க. ரா. சிவசிதம்பரமுதலியாரவர்கள்சொல்லிய

வெண்பா.

வில்வவனக்குயிற்கோர் மேதகுபாமாலையந்தச்
செல்வவனக்குயிலைச் சேர்ந்தவல—மல்கு
மொருசேவற்கந்தாதி யுற்றுரைத்தான்சுப்புத்
திருராமசாமிவல்லோன் றேர்ந்து.

இஃது
கும்பகோணம் பழனிமுத்தையர் குமாரர்
சிவகுருநாதஐய ரவர்களியற்றிய

விருத்தம்.

அந்தாதியிலாக் காமீசனந்தாதலர்த்தாட்கந்தாதி
சிந்தாகுலமாலைச்செருக்குந் தெய்வக்குயிற்குத்திருமாலை
பைந்தார்நீபம்புனைவாற்குப் பஞ்சரத்நம்பணித்தனிந்தான்
எந்தையென்பார்க்கிலெங்காத்தானி ராமசாமியியலுறவே.

இஃது புதுப்பாளையம்
ம-ா-ா-ஸ்ரீ,
அ. பெரியசாமிப் பிள்ளையவர்க ளியற்றிய
எழுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

திருவளர்வில்லைக் கோவிலாம்பிகைக்குஞ்
செப்பருந்தொண்டர்கள் பரவு
மருவளர்திருக்கா மீஸ்வரர்தனக்கு
மாலையந்தாதிக ளுரைத்த—

திருவளர்புதுவைச் சுப்பராயப்பேர்ச்
சறகுணன் றவச்சுதன் கங்கை
குருவளாகுலத்தி ராமசாமிப்பேர்
கொண்டநாவலன் புவிக் கினிதே.

துஃஇ

புதுவை

கலவை சுப்பராயசெட்டியார்

தருமக கல்விச்சாலைத் தமிழுபாததியாயர்

ம-ா-ா-ஸ்ரீ.

உ-சு-மாணிக்கப்பிள்ளையவர்கள் சொல்லிய.

கலிவிருத்தம்.

ஐந்திரத்தின மாலையொடந்தாதி
விந்தையார்வில்லை யந்தலமேவுறுங்
கந்தனற்குயில் காமீசர்மூவாகருந
தந்தனன்ராம சாமிப்புலவனே.

இஃது ஷை கலவை சுப்பராயசெட்டியார்

கல்விச்சாலைத் தமிழுபாத்தியாயர்

ம-ா-ா-ஸ்ரீ,

கு-இரத்தினப்பிள்ளையவர்கள் சொல்லிய

கட்டளைக் கலித்துறை.

அந்தாதிசைவரி பாடும்பொழில்வில்லை யாககர்வாழ்
அந்தாதிகோலைத் தாய்குன்றாய வடியலரில்
அந்தாதிமாலை விருத்தமலங்க லணிந்ததிரு
அந்தாதிசையமைடன் தான்ராமசாமி யதிகுனன்றே

சிவமயம்.

வில்வவனத்தந்தாதி.

உரைபாடம்.

விநாயகர் காப்பு.

கட்டளைக்கலித்துறை.

திருமாதுறை வில்வைக் காமீசர் வாரிசச் சேவடிக்கே
பருமாதுலகம் புகழவந்தாதி யணிகுவனால்
பருமாதுளங்கனி பாசாங்குசமும் பரித்தவுணக்
கருமாதுவைதத வலம்புரியானையைக கைதொழுதே.

(இதன்பொருள்.) திருமாது உறை வில்வை காமீசர் வா
சம சேவடிக்கு-இலக்குமியானவள் வாசஞ்செய்கின்ற வில்
வையென்னும் தலத்தி லெழுந்தருளிய திருக்காமீசரது தா
மரையாகிய சிவந்த திருவடிக்கு, அரு மாது உலகம் புகழ
அந்தாதி அணிகுவன்-அருமையாகிய பிரியத்தைத் தருகின்ற
உலகமானது புகழும்படி அந்தாதியென்னும் பிரபந்தத்
தைச் சாத்துவன், பரு மாதுளங்கனி பாசாங்குசமும்
பரித்து - பருத்த மாதுளம்பழத்தையும் பாசாங்குசமுதலிய
வற்றையுந் தரித்து, அவுணன் கரு மா துவைத்த வலம்
புரியானையை கைதொழுது - இராக்கதனாகிய கறுத்த கெச
முகாசுரனை வதைத்த வலம்புரி விநாயகனை வணங்கி, ஆல்-
அசைநிலை. ஏகாரம்-ஈற்றசை, யான்-தோன்றா எழுவாய்,
அணிகுவன்-பயனிலை, அந்தாதி-செயப்படுபொருள்.

முருகக்கடவுள் துதி.

தருமந்தழைத்த புகழ்வில்லை மேவிய தற்பரன்மேல்
அருமந்தவின்றமி ழந்தாதிசொல்ல வலர்கடம்பு
மருமந்தணிற்றரிக்கும் முருகாவென் மனத்திருந்து
பொருமந்தப் புத்தியை நீக்கிநல்வாக்கருள் புண்ணியனே.

(இ - ள்.) தருமம தழைத்த புகழ் வில்லை மேவிய தற பரன்மேல் - தருமமானது தழைத்திராநின்ற கீர்த்தியினையுடைய வில்லையென்னுந் தலத்தி லெழுந்தருளிய சிவபெருமான்மீது, அருமந்த இன் தமிழ் அந்தாதி சொல்ல அலர கடம்பு - அருமருந்தென்ன வினிமையாகிய தமிழினாலே யந்தாதியென்னும் பிரபந்தத்தைச் சொல்ல கடப்பமலர மாலையை, மருமந்தனில் தரிக்கும முருகா என் மனத்திருந்து - மார்பினிடத் தணியப்பெற்ற முருகக்கடவுளே அடியேன் மனதினிடத்திருந்து, பொரும் மந்தப்புத்தியை நீக்கிநல்வாக்கு அருள் புண்ணியனே - கெடுக்கா நின்ற மந்தவறிவை நீக்கி நல்ல மதுரமானவாக்கைப் புண்ணியசொரூபனே கிருபைசெய்வாயாக, நீ-தோன்றா எழுவாய். அருள-பயனிலை. வாக்கு-செயப்படுபொருள்.

திருவக்கறை யாதீனம் கல்விமடத்தி
லெழுந்தருளியிருக்கும
ஸ்ரீ - மெய்ஞ்ஞானதேசிகர் துதி.

சடிலங்களைக்கறை நீக்கியடியர்க டம்பொருட்டால்
படியின் மெய்ஞ்ஞான முனிவனெனவந்த பாண்டரங்கன்
அடியவன் வல்வினை யேகவருள்செய்த வத்தனுரைப்
படிவில்லையீச னந்தாதி பகர்ந்தனனே.

(இ - ள்.) சடிலம் களக்கறை நீக்கி அடியர்கள், தம்பொருட்டால் சடாபாரத்தையும் விஷகண்டத்தையு மன்பர்கள் நிமித்தமாக வகற்றி, படியில்மெய்ஞ்ஞான முனிவனென வந்த பாண்டரங்கன்-பூமியில் மெய்ஞ்ஞான தேசிகனென்று சொல்லும்படி யவதரித்த சிவபெருமான், அடியவன் வல்வினை ஏக அருள்செய்த அத்தன்-அடியேனது தீவினை நீங்கும்படி கிருபைசெய்த கடவுளினது, உரைப்படி வில்லை

ஈசன் அடியில் அந்தாதி பகர்ந்தனன் - கட்டளைப்படி வில்வையென்னுந் தலத்தி லெழுந்தருளிய திருக்காமீசரது பாதத்திலணிய அந்தாதியென்னும் பிரபந்தத்தைச் சொல்லினன், ஏகாரம் - ஈற்றசை.

நூல்.

சீரண்டர் போற்றுமெழில் வில்வைமேவிய செம்மலனைப்
பேரண்டமீன்றவள் பாகனைப் பேதையென் பீழைவினை
யெரண்டச்சூழ லெறிமாருதத்தினை யேற்றிநெஞ்சே
நாரண்டவாழ்த்திப் பணிவா யருள்செய்வர் நன்குனக்கே.

(இ-ள்.) சீர் அண்டர் போற்றும் எழில் வில்வை மேவிய செம்மலனை - சிறப்புவாய்ந்த தேவர்கள் துதிக்கின்ற அழகுபொருந்திய வில்வையென்னுந் தலத்தி லெழுந்தருளிய சிவபெருமானானவரும், பேர் அண்டம் ஈன்றவள் பாகனை - பெரிய வண்டங்களைப் பெற்றவளாகிய உமாதேவியாரை யிடப்பாகத்தில் வைத்தவரும், பேதையென் பீழைவினை யெரண்டச்சூழல் எறி மாருதத்தினை - பேதமையையுடைய வெனது துன்பத்திற் கேதுவாகிய வினையாகிற வாமணக்குக் காட்டை முறித்துத் தள்ளும் பெருங் காற்றானவருமாகிய சிவபெருமானை, ஏற்றி நெஞ்சே நாரண்ட வாழ்த்திபணிவாய் அருள்செய்வர் நன்குனக்கு - மனமேஎதிர் கண்டுதரிசித்து தயின்பு அன்பு பொருந்தத் துதித்து வணங்குவாய் கிருபை செய்வார் அதுனக்கு நன்மையாகும், ஏகாரம்-ஈற்றசை. ()

செய்யவ னந்தரி யாழியற்காவிடந் நின்றசெம்மால்
வெய்ய வனந்தழற் கூட்டிடும் வீபர்ச்சு வில்வடிகொள்
மெய்ய வனந்தங்கு வளகச்சீர் வில்லை மேயவனின்
றுய்ய வனந்தரு தானெ யெஞ்ஞான்று தொழுதுய்வனே.

(இ-ள்.) செய்யவன் நந்து அரி ஆழியற்கா விடம் நின்ற செம்மால் - செவ்விதானவன் சங்கினங்களை யடித்துக் கொண்டோடுகின்ற பாற்கடலை யிடமாக வுடைய திருமாலுக்காக வாலகால விஷத்தைப் புசித்த கடவுளே, வெய்ய வனம் தழற்கு ஊட்டிடும் வீபர்ச்சு வில்லடிகொள் மெய்ய-வெவ்விதாகிய காண்டாவனத்தை யக்கினிபகவானை உண்

பிளக்கச்செய்த அர்ச்சுனனது வில்லடியைக்கொண்ட திரு மேனியையுடையவனே, அனம் தங்கு உவளகம் சாவில வை மேயவ-அன்னப்பறவைகள் வசிக்கின்ற வாவிகளாசூழ் ந்த சிறப்பையுடைய வில்லையென்னுந் தலத்தி லெழுந்தரு ளிய சிவபெருமானே, நின் தூய்ய வனந்தருத் தாளை எஞ்ஞா ன்று தொழுது உய்வன்-பரிசுத்தமாகிய வழுக்குபொருந்திய உன்திருவடியை எக்காலம் வணங்கிப் பிழைப்பன், ஏகாரம்- ஈற்றசை. (௬)

உய்யத்தருக்கணஞ் சூழ்வில்லைநாதனையொண்கதைவாட்
கய்யத்தருக்கணை வாழிதந்தோனறனைக் கண்டுதொழு
வய்யத்தருக்கணல் வானோர்க்குமேற்பதம் வாய்க்குமிது
மெய்யந்தருக்கணஞ் சிந்திரியங்களை வென்றநெஞ்சே.

(இ-ள்.) உய்ய தருக்கணம் சூழ வில்லை நாதனை-பிழை க்க விருட்சக்கூட்டங்கள் சூழ்கின்ற வில்லையென்னும் பதியி லெழுந்தருளிய கடவுளானவரும், ஒள் கதை வாள் கை அத்தருக்கு அணல ஆழி தந்தோன்றனை-பிரகாசம பொருந்திய கதையும் வாளையுந் தாங்கிய கரங்களையுடைய திருமாலுக்குச் சக்கரத்தைக் கொடுத்தவருமாகிய சிவபெ ருமானை, அ தருக்கு அண அஞ்சிந்திரியங்களை வென்ற நெஞ்சே கண்டு தொழு-அந்தச் செருக்குப்பொருந்திய பஞ் சேந்திரியங்களைச் செயித்த மனமே தரிசித்துவணங்க, வைய யத்தருக்கு அணல் வானோர்க்கு மேற்பதம் வாய்க்கும இதுமெய் - பூவுலகி லுள்ளவர்களுக்கு அரசனுகி தேவர்க ளுக்கு மேலாகியபதவி கிடைக்கும் இந்தக்காரிய முண்மை.

நெஞ்சாரவானவர் வாழ்த்துறும்வில்லை நிமலனைநீள்
அஞ்சாரலாருங் கலைவெற்பனைமுன் னாழியெழு
நஞ்சாரருட்கட லைக்குணக்குன் றினை நாதனையே
மஞ்சாரமாதர் மயக்கொழித்தேத்தி வணங்குவிரோ.

(இ-ள்.) நெஞ்சார வானவர் வாழ்த்துறும் வில்லை நிம லனை-மனம்பொருந்தத் தேவர்கள் வாழ்த்துகின்ற வில்வை யென்னும்பதியி லெழுந்தருளிய சிவபெருமானானவரும், நீள் அம் சாரல் ஆரும் கலைவெற்பனை - நீண்ட அழகிய மலைப்பக்கம்பொருந்திய கைலாசகிரியையுடையவரும், முன்

ஆழியெழு நஞ்சு ஆர் அருட்கடலை குணக்குன்றினை ஈதலை-முற்காலத்தில் சமுத்திரத்தி லுண்டாகிய விடத்தைப்புசித்த கிருபா சமுத்திரமானவரும் குணமலையானவருமாகிய கடவுளை, ஏமஞ்சார் அ மாதர் மயக்கு ஒழித்து ஏத்தி வணங்குவிர் - இன்பம்பொருந்திய அந்தமடவார்களது மயக்கத்தை நீக்கி துதித்து வணங்குவீர்கள், ஏ-அசை. (ச)

வணங்கரியானய னிந்திரன் மற்றுளவானவரும்
வணங்கரியானெழின் மாடங்களார்வில்லை வாழும்பிரான்
வணங்கரியானனன் றந்தைமுந்தும்புர வானடைக்கா
வணங்கரியாக்கி யடிமுடிவைத்துய்ம்மின் மானிடரே.

(இ - ள்.) வணங்கரியான் அயன் இந்திரன் மற்றுள வானவரும் வணங்கரியான் - கரிய நிறமுடைய திருமாலும் பிரமனும இந்திரனும் மற்றுமுண்டாகிய தேவர்களும் வணங்குதற்கருமையானவனும், எழில் மாடங்கள் ஆர் வில்லை வாழும் பிரான் - அழகுபொருந்திய உப்பரிகைகள் சூழ்ந்த வில்லையென்னும் பதியில் வாழுகின்ற கடவுளானவரும், வணம் கரியானனன் றந்தை-வளப்பம்பொருந்திய யானைமுகக்கடவுளுக்குப் பிதாவானவரும், முந்தும் புர வான் அடை காவணம் கரியாக்கி அடி முடி வைத்துய்ம்மின் மானிடரே-ஆகாயத்தையடைத்துச் செல்லாநின்ற திரிபுரமாகிய நகைப்பந்தரை நகைத்தெரித்தவருமாகிய பரமசிவனது திருவடிகளை மாந்தர்களே சிரத்திலணிந்து பிழைப்பீர்களாக. (ரு)

மானிடமாகமுன் கோடிதவஞ்செய்து வந்துநெஞ்சே
தானிடமாப்பொரு ளேவற்கு நைந்தனை தண்ணிமையத்
தேனிடமாரவைத்தோன்வில்லைச்சேர்ந்திலைசெம்பொன்
பேனிடமாட்டிலை வீட்டிலைதோற்றும்பெருங்கருவே. [சிறப்

(இ-ள்.) மானிடமாக முன் கோடிதவஞ்செய்து வந்து நெஞ்சே - மனமே மானிடப் பிறப்பாக முற்காலத்தி லநேகந் தவஞ்செய்து பிறந்தும், இடம் மா பொருள் ஏவற்கும் நைந்தனை-வீட்டிற்கும் பெருமைபொருந்திய திரவியத்துக்கும் ஏவலாளருக்கும்வருந்தினை, தண் இமையத்தேன் இடமாரவைத்தோன் வில்லை சேர்ந்திலை-குளிர்ச்சிபொருந்திய

பருவதராசன்பெற்ற தேனனைய சொல்லையுடைய வுமா தேவியாரை யிடப்பாகத்தில்வைத்த சிவபெருமானெழுந் தருளிய வில்லையென்னும் பதியை யடையவில்லை, செம பொன் சிறு பேன் இடமாட்டிலை தோற்றும் பெருங்கரு வீட்டிலை - திரவியததைச் சிறியபேனவ்வளவு கொடுத்த தேயில்லை செனிககுமிகுாத பிறப்பை யழிக்கவில்லை, எ-அசை. (௬)

கரும்பானங் கங்கரிந் துள்ளாவிகுன்றக் கடைக்கணித்தான்
அரும்பானங் கங்கரி யார்க்கும் பொழில்வில்லை யம்பதியில்
வரும்பானங் கங்கரி சேறுது தாழ்ந்திட வைத்துநல்லா
தரும்பானங்கங்கரிப்பான் வேண்டிநண்ணுதல் தக்கதன்றே.

(இ-ள்.) கரும்பான் அங்கம் கரிந்து உள்ளாவி குன்ற கடைக்கணித்தான் - மன்மதன் றேகமானது சாமபராகக் கரிந்து கடத்திினுள்ளே யிராநின்ற வான்மா குறைந்துபோகக் கடைக்கண்ணினாற் பார்த்தவன், அரும்பான் அங்கங்கு அரி ஆர்க்கும் பொழில் வில்லைய்யம்பதியில் - அரும புகடோறும் அவ்வவ்விடங்களில் வண்டுகள் சத்திசகுஞ் சோலைகள் சூழ்ந்த வில்லையென்னும்பதியில், வரும்பால் நம் கம் கரிசு எறுது தாழ்ந்திடவைத்தும் - எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமான் நமது சிரம் குற்றமானது அடையாது தம்மை வணங்கும்படிக்கு நமக்குண்டாக்கிவைத்தும் நாமப்படி வணங்காமல், கங்கு அரிப்பான் - நமது சிரத்தை கழுகு அரிக்கும்படி, நல்லார் தரும்பானம் வேண்டி நண்ணுதல் தக்கதன்று - மாதர்கள் கொடுக்கு மதர்பானத்தை விரும்பி யுவளைச் சேருதல் தகுதியன்று, எ-அசை. (எ)

கன்னலங்கார மட்டவார்விழிதன காசிதந்த
மென்னலங்காரவயில்செண்டுபூங்குமிழேர்செய்முத்தென்
றன்னலங்கார வுரைப்பதல்லால் வில்லை யன்னறனைப்
பன்னலங்காரணி கண்டவென்றேனிலை பாவிநெஞ்சே.

(இ-ள்.) கன்னு அலங்காரம் மட்டவார் விழி தனம் காசி தந்தம்-பொருந்திய சிங்காரத்தையுடைய மாதர்களது கண்களும் கொங்கைகளும் நகைக்கும் பற்களும், என்னு அலங்கு ஆரம் அயில் செண்டு பூங்குமிழ் ஏர்செய் முத்து

என்று-நினைக்கின்ற வசையுமாலையணிந்த வேலும் புட்பச் செண்டும்குமிழம்பூவும் அழகையுடைய முத்துக்களும் என்று, அன்னல் அங்கு ஆர உரைப்பதல்லால்-பெருமையாக வவவிடத்தைப் பொருந்தச் சொல்லுவதல்லாமல், வில்லை அன்னல்தனை பண் நலம் காரணி கண்டவென்று ஓதிலை பாவிநெஞ்சே - வில்லையென்னூர் தலத்தி லெழுந்தருளிய சிவபெருமானை இசையுடனே நன்மையாக விடத்தைத் தரித்த கண்டனேயென்று சொல்லவில்லை பாவியாகிற மனமே. (அ)

சேரமன்னன்செய்த பூசைக்குகந்தவ செய்யவில்லை
பூரமன்னன்புதந் தாளென் றுரைத்திலி ரோதிடுங்கண்
ணூரமன்னம்புசி யாதுண்டுவீணி னடிக்கினம
னூரமன்னப்பொங்கு கோபத்துச் சார்பொழு தார்கதியே.

(இ-ள்.) சேரமன்னன் செய்த பூசைக்கு உகந்தவ-சேரமான் பெருமாள்செய்த பூசைக்குச் சந்தோஷித்தவனே, செய்ய வில்லையூர - செவ்விதாகிய வில்வைப் பதியையுடையவனே, மன்னு அன்பு தந்து ஆளென்று உரைத்திலிர்-நிலைபெற்ற பத்தியைக்கொடுத் திரக்ஷிப்பாயென்று துதித்திரில்லை, ஓதிடும் கண்ணூரம் அன்னம் புசியாது உண்டு வீணில் நடிக்கில்-சொல்லாநின்ற கள்ளுநீரைச் சாதம்புசியாதுண்டு வீணாக கூத்தாடினால்,நமனூர் அம்மன்ன பொங்கு கோபத்து சார்பொழுது ஆர்கதி - இயமன் சமுத்திரத்தைப்போற் கொதிக்குங் கோபத்தோடு வருஞ்சமயத்தில் எவருங்கட்காதாரம், எ-ற்றனை. (கூ)

கண்டனஞ்சேர் செய்களார் வில்லைவாழுங் கரியநிறக்
கண்டனஞ்சேலென்று நல்லடியார்களைக் காத்தவனேர்
கண்டனஞ்சேல்செண்டு கொண்டவள்காணக்கனகவவைக்
கண்டனஞ்சேருதிர்தரவென்ற நிர்த்தனைக்காணக்கண்ணே.

(இ - ள்.) அனம் கண்டு சேர்செய்களார் வில்லைவாழும் கரியநிறம் கண்டன் - அன்னப்பறவைகள் பார்த்துச் சேருகின்ற வயல்நிலங்கள் பொருந்திய வில்லைப்பதியில் வாழுகின்ற கரியநிறத்தையுடைய் கண்டத்தையுடையவன், அஞ்சேலென்று நல்லடியார்களை காத்தவன் - பயப்படாதீர்

கொன்று நல்லடியார்களை யிரக்ஷித்தவன், ஏர் கனை தனம் சேல் சென்று கொண்டவள் காணை-அழகுபொருந்திய கனை கழலும் கொங்கைகளும் சேற்கெண்டைகளையு மலர்சசெனை ககளையு முவமையாகக்கொண்ட பார்வதிதேவியார காணும படி, கனகவணவக்கண் தனஞ்சே குதிர்தாவென்ற நிர்த்த னம காணை கண்ணே-பொன்னமபலத்தினிடத்துத் தனஞ் சேகுதிர்தாவென்ற தாளத்துடன்செய்தநடனத்தைதக கனை களே தரிசிப்பீராக. (௧௦)

காணத்தரங்கத் துயின்றோனயன்மக வான்களித்துப்
பேணத்தரங்க நடிப்பவர் வில்லையிற் பிஞ்ஞகனார்
மானத்தரங்கத்துப் பெண்ணைவைத்தோர்தம வனசமலர்த்
தாணத்தரங்கன்ம சன்மந்தனக்கது சத்தியமே.

(இ-ள்.) காண தரங்கம் துயின்றோன் அயன் மகவான் களித்து பேண் அத்து அரங்கம் நடிப்பவர்-இயாவருங்கா ணும்படி பாற்கடலிற் பள்ளிகொண்ட திருமாலும் பிரம னும் இந்திரனு முவகைகொண்டு விரும்பும எல்லையாகிய பொன்னமபலத்தினிடத்து நிருத்தம் புரிபவர, வில்வையில் பிஞ்ஞகனார் மான் அத்தர்-வில்வைப்பதியி லெழுந்தருளியி ருக்கும் பிஞ்ஞகனென்னு நாமமுடையவர் மாட்சிமைபொ ருந்திய கடவுள், அங்கத்து பெண்ணை வைத்தோர்தம வன சமலர் தாள் நத்து-தேகத்தி லுமாதேவியாரை வைத்தவரது தாமரைமலர்போன்ற திருவடியை யர்ச்சிப்பாயாக, அரம் கன்மசன்மந்தனக்கு அது சத்தியம்-அவ்விச்சையே வினை யால்வரும்பிறவிக்கு அரமாகும்இது உண்மை, ஏ-அசை. (௧௧)

சத்தியத் தன்பொழிற் சூழ்வில்லை வாழ்பவன் றனழியா
நித்தியத் தன்னரு ளாளி னுடன்பட சேமித்தின்னே
அத்தியத்தக்கை யெழுப்பெண்ணைமாலை யமைத்துமடல்
பத்தியத்தம்மலை மென் றாரமன் றிற் புகருவனே.

(இ-ள்.) சத்தி அத்தன் பொழில்சூழ் வில்லை வாழ்ப வன்-பார்வதி தேவியாருக்கு நாயகன் சோலைகள்சூழ்ந்த வில்லையென்னுந் தலத்தில் வாழுகின்றவன், அழியா நித்தி யத்தன் அருளாளி நீடன் படம் சேமித்து இன்னே - எக் காலும் அழிவில்லாத வச்சுதன் திருவையால் விபூதியுடனே

படத்தைச் சித்தஞ்செய் திப்போதே, அத்து இயம் தகனை ஏழ பெண்ணை மாலை அமைத்து மடல்-கிரமமுள்ளவாத்தியமாகிய பமபையொலி கோஷிக்கப் பனைமடலினுல் குதிரையை யுண்டாக்கி மடலே, பத்தி அததம் நலமென்றுயர மன்றில்பகருவன் - அன்பாகவத்தரட்சத்திரம நன்மையென்றுயேறிச்செலுத்தச் சபையிறசொல்லுவன், ஏ-அசை.

பகரவரியபொன் மன்றுணடஞ்செய் பதமெனெஞ்சில்
புகரவரியற்புதங்கொளச் செய்யெழில் பொங்கு வில்லவை
நகரவரிய மிடுதுடையென்பிழை நாடல்கண்டாய்
அகரவரியக கரங்கண்முன்போல வமர்பவனே.

(இ - ள்.) பகரவரிய பொன்மன்றுள் நடஞ்செய் பதம் எனெஞ்சில் - சொல்லுதற்கரிதாகிய கனகசபையில் திருநடஞ்செயகின்ற தேவரீர் திருவடி என்மனதில, அரவு அரி அற்புதங்கொள புக செய் - சேஷசயனத்தையுடைய திருமால் ஆச்சரியங்கொள்ளும் வண்ணம் புகும்படி கிருபை செய்வாயாக, எழில்பொங்கு வில்லைநகர வரி அமிடுதுடை - அழகுமிகுந்த வில்லைநகரத்தையுடையவனே பாதிக்கின்ற வாபத்துக்களை நீக்கு, என் பிழை நாடல் - என் குற்றத்தை நோக்காதே, அகரவரி அக்கரங்கள் முன்போல அமர்பவனே - அகரவெழுத்தானது எழுத்துக்களுக்கு முதன்மையானதுபோல விருக்கின்றவனே, கண்டாய்-அசை. (கக).

அவசங்கடங்கொளக்காலன்சினங்கொண்டணுகினெஞ்சே
நவசங்கடர்த்துவெண் முத்தீன்றலவிடு நன்செய்களும்
துவசங்கடங்கூன் முற்றமுஞ்சூழ்ந்து துலங்குவில்லவைச்
சிவசங்கடர்தொலைத்த தாள்வாயென்றஞ்சக் கருசெயிலே.

(இ-ள்.) நெஞ்சே கடம் அவசங்கொள காலன் சினங்கொண்டு அணுகில்-மனமே முறைமையாக் மதிமயக்கங்கொள்ள யமன் கோபங்கொண்டென்னை நெருங்கில், நவம் சங்குஅடர்த்து வெண்முத்தீன்று உலவிடும நன்செய்களும்- புதிதாகிய பணிலங்களானவை நெருங்கி வெண்மையாகிய முத்துக்களைப்பெற்றுத் திரிகின்ற நன்செய் நிலங்களும், துவசங்கள் தங்கும் நன்முற்றமும் சூழ்ந்து துலங்கு வில்லை சிவ-கொடிகள்பொருந்திய நல்ல வுப்பரிகைகளுஞ்

சூழ்ந்து விளங்காநின்ற வில்லையென்னுந் தலத்து மெழுந் தருளிய சிவபெருமானே, சங்கடந்தொலைத்து ஆள்வாயெ ன்று அஞ்சக்கரம் செபி-துன்பத்தைநீக்கிக் கிருபையோ டளிப்பாயென்று பஞ்சாக்கரத்தைச் செபிப்பாய், ஏ-ஈற்ற சை (கச)

அஞ்சக்கரத்தநல் வில்லைக்கரச வரக்கருளம்
அஞ்சக்கரனை யொறுத்தவன் பூசைக் ககமகிழ்ந்தே
அஞ்சக்கரத்தை யளித்தோயெனை யிவ்வலர்மதியால்
அஞ்சக்கரமென வாட்டனன்றோசொ லருளண்ணலே.

(இ-ள்.) அஞ்சக்கரத்த நல் வில்லைக்கு அரச-பஞ்சாக்க ரத்தையுடையவனே நல்ல வில்லையென்னுந் தலத்துக் குத் தலைவனே, அரக்கர் உளம் அஞ்ச கரனை ஒறுத்தவன பூசைக்கு அகமகிழ்ந்தே அம் சக்கரத்தை அளித்தோய்- இராக்கதர்களது மனமானது நடுங்கும்படி கரனென்னுமர க்கனைச் சங்கரித்த திருமாலினது பூசைக்குச் சந்தோஷித்து அழகிய சக்கராயுதத்தைக் கிருபை செய்தவனே, எனை இ அலர் மதி ஆலமென சக்கரமென வாட்டல் நன்றோ சொல அருளண்ணலே-அடியாளாகிய வென்னை யிந்தப்பரந்த சந் திரன் விடத்தைப்போலவுஞ் சூறைக் காற்றைப்போலவும வருந்தச்செய்குதல் நல்லதோ கிருபாமூர்த்தியாகிய சுவாமி சொல்லுக. (கரு)

அன்னையுநீகுரு வப்பனொடன்னையு நீயெனவே
யென்னைநுற்றெல்லு மிரவுநின்றேத்து மெனக்கிரங்காய்
நன்னையும்பர்க்கரு நல்லமுதேநவிந் தேபவத்தியான்
மன்னைநுத்தெய்த்திட னிற்கழுசோ வில்லைவாழ்சுடரே.

(இ-ள்.) அன்னையுநீ குரு அப்பனொடு அன்னையுநீ என -இயான் வழிபடுகடவுளுநீ ஆசாரியனுநீ அப்பனொடு [illegible]று, என்னைநுற்று எல்லும் இரவுநின்று ஏத்தும் [illegible] இரங்காய் - வினைத்துப்பகலிலு மிரவிலுந் துதிக்கு பேனுக்கு மனமிரங்குவாய், உம்பர்க்கு நன்னல் அருநல் [illegible] நவிந்தே பவத்து இயான் - தேவர்களுக்குக் கிட்டு கருமையாகிய நல்ல வமிர்தமே மெலிந்தே பிறவித் [illegible] லடியேன், மன் சுழுத்து எய்த்திடல், நிற்கு அழ

சோ வில்லை வாழ் சுடரே-பூமியில் அநுத்தினத்தல் தேவீ ருக்கு அழகாகுமோ வில்லையென்னூர் தலத்திலெழுந்தரு ளிய ஞானதீபமே. (கசு)

சுயம்பிறகாசர் எழில்வில்வையீசர் துணைவரைமேல்
சுயமபிறகாலெனச் சென்றரவிந்தங் கலந்தசெல்வி
பயம்பிறகாதநன் மார்க்கமதாய்வரப் பக்குவமா
வியமபிறகாலெங்குஞ் சென்றிசைதேடு மெழிற்குருகே,

(இ-ள்.) சுயம்பிறகாசர் எழில் வில்லை ஈசர் துணைவரைமேல்-இயற்கை யொளியுடையோர் அழகிய வில்லையென்னூர் தலத்தி லெழுந்தருளிய சிவபெருமானினது நீண்ட மலையின்மீது, சுயம காலென சென்று அரவிந்தம கலந்த செல்வி - தடாகத்தினிடததிற் காற்றைப்போலச் சென்று போய் தாமரை மலரிற்சேர்ந்த இலக்குமியையொத்த பெ ணணுக்குப், பயம் பிறகாத நன்மார்க்கமதாய் வர பக்குவமா இயம்பு - அச்சமான துண்டாகாத நல்லவழியாக வருமபடி பக்குவமாகச் சொல்லு, இறகால் எங்கும் சென்று இசை தேடும் எழில் குருகே-சிறகினு லெவ்விடத்தும் பறந்துபோ யுணவைத் தேடுகின்ற வழகியநாரையே, பிற - அசைநிலை. பிறக்காதவென்றது - எதுகை நோக்கிப் பிறகாத வென் றூற்றுத் தொகுக்கபபட்டது. (கஎ)

கேதனந்தங்குநன் முற்றங்கள்சூழ்ந்து ளிளரும்வில்லை
நாதனந்தம்வினை தீர்த்தருள்வோன்வரை நன்னுமன்பர்
மாதனந்தண்டுத லில்லாமற்றேடி வருகுவனென்
றேதீனந்தஞ்சொலிப் போனவர்வந்தில ரேந்திழையே,

(இ-ள்.) கேதனம் தங்கு நல் முற்றங்கள் சூழ்ந்து இளரும் வில்லைநாதன் - துவசங்கள் பொருந்திய நல்ல வுபரிகைகள் சூழ்ந்து விளங்காநின்ற வில்வையென்னும் பதியி லெழுந்த ருளிய சிவபெருமான், நந்தம் வினை தீர்த்து அருள்வோன் வரை நன்னும் அன்பர்-நம்முடைய தீவினையை நீக்கி கிருபைசெய்பவனுமாகிய கடவுளது மலையிலிருக்கும் நாய கா, மாதனம் தண்டுதலில்லாமல் தேடி வருகுவனென்று - மகத்தாகிய திரவியத்தைத் தடையில்லாமற் சம்பாதித்து வருவேனென்று, ஏது அந்தம் சொலி போனவர் வந்தி

MAHAMAHOPADHYAYA

னர் எந்நிலைமையோ-அனந்த காரணங்களைச் சொல்லிச சென்றவர் பாக்கியே வரவில்லை. (௪௮)

வந்தனந்தந்தண்டர்கோன் பூசைசெய்வில்லைவாழ்பரனைப்
பந்தனந்தந்தனில் வந்தருளென்று பரவல்விட்டுத்
தந்தனந்தந்த மெனநடிப்போர்தமைச் சார்ந்தவாகள்
சந்தனந்தந்தனம் பூசுவர்சீதந் தலைவிதியே.

(இ-ள்.) வந்தனம் தந்து அண்டர்கோன் பூசைசெய் வில்லை வாழ் பரனை - இந்திரன் வணக்கஞ்செய்து அர்ச்சித்த வில்லையென்னுந் தலத்தில் வாழுகின்ற சிவபெருமானை, பந்தம் நந்து அந்தனில் வந்தருளென்று பரவல விட்டு-பாசபந்தமானது கெட்டுப்போகுங் காலமுடிவில் எழுந்தருளிவந்து கிருபைசெய்வாயென்று வணங்குதலைவிட்டு, தந்தனந்தந்தமென நடிப்போர்தமை சார்ந்து அவாகள்-தந்தனந்தந்தமென்ற தாளத்துடன் நிருத்தஞ்செய்யும் பரதையர்களைச்சார்ந் தடிமடவாரகளது, சந்தனம தந்தனம் பூசுவர் சீ தந்தலைவிதியே - கொங்கைகளிடத்தில் சந்தனத்தைப் பூசாநிற்பர் சீ யிதென்ன காரிய மவாகள் தலைவிதியிருந்தபடியாம். (௪௯)

சீதந்தருந்தண்டலையோங்கிய வில்லைச் செல்வரொற்றைச்
சீதந்தருக்குஞ் செவ்வேளுக்குந் தந்தைதற் சேவிக்கநச்
சீதந்தருக்கொழித் தைந்தவிப்போர்க்கொரு திண்கதியாஞ்
சீதந்தருளுவர் நெஞ்சேநீ யவ்வணஞ் செய்யையின்னே.

(இ-ள்.) சீதந்தரும் தண்டலை ஓங்கிய வில்லை செல்வர்-[illegible] பொருந்திய சோலைகளோங்கி யிராநின்ற வில்லை [illegible]தகாயகர், ஒற்றை சீதந்தருக்கும் செவ்வேளுக்கும் [illegible] தந் சேவிக்க நச்சி தந்தருக்கு ஒழித்து ஐந்தவிப் [illegible] ஒரு திண்கதியாம் சீ தந்தருளுவர் - சிறப்புபொ [illegible] ஒன்றாகிய கொம்பையுடைய விநாயகமூர்த்திக்கும் [illegible] அவருக்கும் பிதாவானவர் தம்மை வணங்கவிரும் [illegible] தங்கள் செருக்கைக்கெடுப் பஞ்சேந்திரியங்களை விடயங் [illegible] செல்லவொட்டாமல் அடக்கவல்லவர்க் கொப்பற்ற [illegible] சம்பத்தைக் கிருபைசெய்வர், நெஞ்சே நீ [illegible] இன்னேசெய்யை-மனமே நீ யவ்வலகையாக [illegible] செய்வாயாக. (௫௦)

வில்வவனத்தந்தாதி.

இடப்பாகமாருமை யானேசர் வில்லையரேத்தமன்றில்
நடப்பாக மாலபணி வேங்கையுங்காணச்செய் நாயகனார்
படப்பாகமாருத வூணரவால்முன் படுவிடத்தை
அடப்பாகமாரமு தாக்கிக்கொண்டோனெக் காதரவே.

(இ-ள்.) இடப்பாகமார்உமையாள் நேசர்-இடதுபாகத்திலிருக்கும் உமாதேவியாருக்கு நேசமானவர், வில்லையர்-வில்லைப்பதியையுடையவர், மன்றில் ஏத்த நடப்பாகமால்பணி வேங்கையும் காணச்செய் நாயகனார்-கனகசபையில் அடியார்கள் துதிக்க திருத்தவழகு பெருமைபொருந்திய பதஞ்சலியாரும் வியாக்கிரபாதரும் தரிசிக்கச்செய்த முதன்மையானவர், படப்பாகம ஆருதம ஊண் அரவால முன் படு விடத்தை அடு அப்பாகமார் அமுதாக்கிக்கொண்டோன் எனக்கு ஆதரவு-படப்பாம்பை சிரத்திலேயுடைய காற்றை யுணவாகக்கொண்ட சாப்பத்தினால பண்டைக்காலத்தில் பாற்கடலிலுண்டாகிய ஆலகால விடத்தைப் பாகமபண்ணிய வந்தப் பக்குவப்பட்ட வமுதாகக்கொண்ட சிவபெருமானே கண்டீர் அடியேனுக்குப் பற்றுக்கோடாகவுள்ளவர், ஏ-அசை. (உ௯)

ஆதரவில்லையென் றேங்கித் துதிப்பவர்க் காரருள்செய்
பூதரவில்லியர் வில்லையில் வாழ்பவர் பொற்கங்கையா
மாதரவில்லச் சடிலர்முன் மாதவர் வேள்விவந்த
நீதரவில்லமருங் கரத்தேந்து செம்மேனியரே.

(இ-ள்.) ஆதரவு இல்லையென்று ஏங்கி துதிப்பவர்க்கு ஆர் அருள்செய் பூதரவில்லியர்-வேறோராதாரமு மில்லையென் றேக்கமுற்றுத் துதிசெய்தவடியார்களுக்கு நிறைந்தவருளைச் செய்கின்ற மகமேருகிரியை வில்லாகவுடையவர், வில்லையில் வாழ்பவர் பொன் கங்கையாம் மாது அரவு இல்லம் சடிலர்-வில்லையென்னுந் தலத்தில் எழுந்தருளியிருக்குங் கடவுள் அழகிய கங்கையாகிற பெண்ணுக்குஞ் சர்ப்பத்துக்கும் வீடாகிற வேணியையுடையவர், முன் மாதவர் வேள்வி வந்த நீதரவு இல் அமரும் கரத்து ஏந்து செம்மேனியர்-முற்காலத்தில் தாருகாவன விருடிகள் செய்த யாகத்திலுண்டாகிய தீயை யநுப்பவுதனைப் பிரகாசம்பொருந்திய கையிலேயிடத்திற்றாங்கிய சிவந்தமேனியுடையவர், ஏ-அசை. (௩௰)

செங்கரும்பாரஞ் சொரிவில்வைநாதனைச் சேர்ந்தணைபாக
கொங்கரும்பாரத் தனத்தியைவாட்டுங் கொடியமதி
மங்கரும்பாரதை விட்டேகநல்ல வளமுடையீர்
இங்கரும்பாரவி வந்திடச்சேவ லிசைத்திலென்னே.

(இ-ள்.) செங்கரும்பு ஆரம்சொரி வில்வைநாதனைசேர்ந் தணையா-சிவந்தகரும்புகள் முத்துக்களை யுதிர்க்கின்றவயல் கள்சூழ்ந்த வில்வையென்னும்பதியி லெழுந்தருளிய சிவபெ ருமானைப்பொருந்தியணையாத, கொங்கரும்பு ஆர் அத்தனத் தியை வாட்டும் கொடியமதி - கொங்குமுகைகளையொத்த வந்தக்கொங்கைகளையுடைய பெண்ணை வாட்டுகின்ற கொடு மையாகிய சந்திரனானது, மங்கு அரும் பாரதைவிட்டு ஏக நல்லவளமுடையீர்-கெடுதலில்லாத பூமியைவிட்டுப்போக நல்ல வழமையுடைய பாங்கிகளே, இங்குரவி அரும்பா வந் திட சேவல் இசைத்தில் என் - இவ்விடத்தில் சூரியனுதித் தவரச் சேவலானது கொக்கரித்ததில்லை யாதுகாரணம், ஏ-அசை. (௨௩)

இலங்கர்வேலனை யீன்றவன்வாழ்வில்வை யோர்வரையோ
தலங்கரத்தல் செய்யாதுரைப்பா யொருதையலுக்கோ
வுலங்கழும்மெழு கொத்துளம்வாடியிங் கொல்கின்றாய்
தொலைங்கழ்நற்றவ முற்றோய்நிற்கேது துயருறவே.

(இ-ள்.) இலங்கர் வேலனை யீன்றவன் வாழ்வில்வையோர் வரை போதலை-இலைபோன்ற வேலாயுதத்தையுடைய முரு கக்கடவுளைப் பெற்றவனாகிய சிவபெருமான் வாழுகின்ற வில்வையென்னுந் தலத்திலிராநின்ற வழகியமலையினிடத் துச் சென்றதை, நீ கரத்தல் செய்யாது உரைப்பாய் ஒரு தையலுக்கோ-நீ மறைக்காமற் சொல்லுவா யொரு பெண் ணுக்காகவோ, உலங்கழும்மெழுகொத்து உளம வாடி யிங்கு ஒல்கி நின்றாய்-உலைக்களத்தி லிருக்கின்ற மெழுகைப்போல மனது வாட்டமுற் றிவ்விடத்திற்றுவண்டின்றாய், தொலை கிகழ் நற்றவம் உற்றோய் நிற்கு ஏது துயருறவு - பூர்வத்தில் செய்துள்ள நல்ல தவத்தையுடையவனே யுனக்குத் துன் பஞ்சம்பவித்ததேது, ஏ-அசை. (௨௪)

வேதவனத்த னெழில்வில்லைவாழும் விமலனற்சு
வேதவனத்தன் றொழும்பரனென்னிலின் மேவுநதய
வேதவனத்தடை யின்றிச்செய்வேனெற்கு வேறொருனை
வேதவனத்தங்க வுண்பேன் வரச்சொல்லை மெலலியலே.

(இ-ள்.) வேதவனத்தன் எழில் வில்லை வாழும் விமலன் - வேதாரண்ணியத்தையுடையவன் அழகிய வில்லையென்னும்பதியில் வாழுகின்ற பரிசுத்தமானவன், நல் சுவேத அனத்தன் தொழும பரன் என்னிலில் மேவும் தயவு ஏது - நல்ல வெண்மையாகிய வம்சவாகனத்தையுடைய பிரமன் வணங்குகின்ற கடவுள் எனதுவீட்டில் வருகின்ற தயவென்ன, அவனம் தடையின்றி செய்வேன் எற்கு வேறொரு னைவு ஏது-அலங்கரிததலில் தடையில்லாமல் அலங்கரித்துக் கொள்ளுவே னினியெனக்கு வேறேயொரு துன்பமில்லை, அ அனம் தங்க உண்பேன் மெல்லியலே வரச்சொல்லை - அந்த அன்னம் உடலிற்றங்கப் புசிப்பேன் பெண்ணே வரச சொல்வாயாக. (உரு)

சொல்லியநணப விடைகொங்கை கண்டிலை சேர்ந்தவெனை
நல்லியலாகத் தணிப்பதுமிவ்வகை யோநயந்து
பல்லியமென்று மிசைக்குமவில்லைப்பரன் பண்டனலாப்
புலலியகாமஞ் சுடுமென்றலோகம பொறுத்தனனே.

(இ-ள்.) சொல்லிய நண்ப இடை கொங்கை கண்டிலை - என்க் காறுதல் சொல்லிய நேயனே நான் குறிப்பித்த தலைவியின் இடையையுந் தனங்களையுமநீ குறித்தறிந்தாயில்லை, சேர்ந்தவெனை நல்லியலாக தணிப்பதும் இவ்வகையோ - வாட்டமுற்றிருக்குமென்றனை நல்லதன்மையவாகவிரும்பித் தணிக்கின்றது இத்தன்மைதானோ, பல்லியம் என்றும் இசைக்கும் வில்லை பரன் - பல வாத்தியங்களெப்போதுங் கோஷிக்குஞ் சிறப்பினையுடைய வில்லையென்னுந் தலத்தி லெழுந்தருளிய சிவபெருமான், பண்டு அனலா புல்லிய காமம் சுடுமென்று அலோகம் பொறுத்தனன் - முற்காலத்தி லக்கினியாகச்சேர்ந்து காமவிகாரமானது கொளுத்துமென்றல்லவோ கங்கையைத் தாங்கிக்கொண்டிருந்தனன், எ-அசை. (உசு)

வில்வவனத்தந்தாதி.

பொறுத்தவித்தார மிருநகவில்லன் புகழையெல்லாம்
நிறுத்தவித்தாரணி யோர்மகிழ்வில்லை நிமலன்வெற்பிற்
கறுத்தவித்தாரணி கூந்தலகலாநனை யாமன்மெய்வேர்
வுறுத்தவித்தாரங் குடைந்தாயொருசுனையொண்டொடியே.

(இ-ள்.) பொறுத்த வித்தாரம் மிரும் நகவில்லன் - சர்வத்தையுந் தாங்கின விசாலமிகுந்த மேருகிரியை வில்லாக வுடையவன், புகழையெல்லாம நிறுத்த இத் தாரணியோர் மகிழ் வில்லை நிமலன் வெற்பில் - கீர்த்தியையெல்லாம நிலைக்கச்செய்த விந்த வுலகிலுள்ளோர் மகிழ்கின்ற வில்லையென்னுந்தலத்தி லெழுந்தருளிய கடவுளினது மலையில், கறுத்து அவி தார் அணி கூந்தல் கலை நனையாமல் மெய் வேர்வு உறுத்த - கறுத்துத் தைலமும மாலையுமணிந்த வளகமும வஸ்திரமும் நனையாமல் தேகத்தில் வியர்வையுண்டாக, வித்தாரம் ஒண்டொடியே ஒருசுனை குடைந்தாய் - பெருமையாகப் பிரகாசமுள்ள வளையல்களை யணிந்தவளே ஒரு சுனையிடத்தில் ஸ்நானஞ்செய்தா யிது புதுமையே. (உஎ)

தொடியாகநாகந் தரித்தவவான்றொழு தூயவெள்ளைப்
பொடியாகநாக வுரிதனைப்போர்த்திடும் புண்ணியனே
மிடியாகநாகந் துரத்திடத்தேக மெலிந்துநைந்தேன்
கடியாகநாகப் பொழில்வில்லைமேவிய காரணனே.

(இ-ள்.) தொடியாக நாகம் தரித்தவ வான்றொழு தூய வெள்ளைப் பொடி ஆக - கங்கணமாகச் சர்ப்பத்தைத் தரித்தவனே வானுலகத்தோர் வணங்கத்தக்க விபூதியையணிந்த தேகத்தையுடையவனே, நாக வுரிதனை போர்த்திடும் புண்ணியனே - யானையினது தோலைப்போர்வையாகத் தரித்த புண்ணியசொரூபனே, மிடியாகு அ நாகம் துரத்திட தேகம் மெலிந்து நைந்தேன் கடி - தரித்திரமாகிய வந்தக்குரங்கு துரத்திக்கொண்டுவரத் தேகமான இளைத்து வருந்தினேனதனைக்கடிந்துவிடு, ஆகம் நாகம் பொழில் வில்லை மேவிய காரணனே - ஆச்சரிய மாகாயத்தளவளாவிய புன்னைமரமாகிய சோலைசூழ்ந்த வில்லையென்னுந் தலத்தி லெழுந்தருளிய காரணனே. (உஅ)

காரணனாரணன் கஞ்சத்திருவைக் களித்துரம்வை
நாரணன்பூரண மாயறியாப்பர னண்ணுமவில்லைவப்
பேரணன்மாரண மில்லாதவன்புகழ் பேசவெள்ளை
வாரணன்சீரண வாழ்விமமையேபெற வந்திடுமே.

(இ - ள்.) காரணன் ஆரணன் கஞ்சத்திருவைகளித்து உரம வை நாரணன் - காரணமானவன் பிரமன் தாமரை மலரி லெழுந்தருளிய விலகக்குமியை மார்பினிடத்து வைக்கும் திருமாலிவர்கள், பூரணமா அறியாப்பரன் நண்ணும வில்லை பேரணல்-நிறைவாக வறியக்கூடாத சிவபெருமான் சீாபொருந்திய விலவையென்னுந் தலததி லெழுந்தருளிய பெரியகடவுள், மாரணமிலலாதவன் புகழ் பேச வெள்ளை வாரணன் சீர் அண அ வாழ்வு இமமையே பெற வந்திடும் - அழிவில்லாதவன் கீர்த்தியைச்சொல்ல விந்திரனது செல்வம்பொருந்திய அந்த வாழ்வான இப்பிறப்பிலே தானே வந்துசேரும், ஏ-அசை. (உகூ)

வந்தருச்சித்த சகலாங்கசுந்தரி வாழ்த்தலுக்கு
வந்தருச்சிததிக டந்தருள்செய்வில்லை வள்ளனிற்கார்
வந்தருசசித்தத்தை யொத்திடுதோவரு கின்றதுகி
வந்தருச்சித்தஞ் செயநற்கலையணி வண்டிருவே.

(இ-ள்.) வந்து அருச்சித்த சகலாங்கசுந்தரி வாழ்த்தலுக்கு உவந்து-கிட்டி பூசைசெய்த சகலாங்கசுந்தரியினது துதிககுச் சந்தோஷித்து, அருசித்திகள் தந்தருள்செய் வில்லை வள்ளல்- அருமையாகிய சிததிகளைக் கிருபைசெய்த வில்லையென்னுந்தலத்தி லெழுந்தருளிய சிவபெருமானது, நிற்கு ஆர்வந்தரு சித்தத்தையொத்திடும் தேர் வருகின்றது-உனக்கன்பைத் தருகின்ற மனதையொத்த ரதமானது வருகின்றது, நிவந்து அருச்சிதஞ்செய நல் கலை அணி வண் திருவே-உயர்ந்த வணக்கஞ்செய்ய நல்லவஸ்திரத்தை யணிந்துகொள் வளப்பமாகிய இலக்குமியே. (௩௦)

திருக்கணஞ்சேர்நுத லார்வில்லையீசர் திகழ்வெண்பொடி
மருக்கணஞ்சேர்விழி யீரொற்றிடாமல் வகையற்றந்தேச
தருக்கணஞ்சேர்ந்ததென் றேயசக்தன்னைத் தடிந்துவிட்டா
ருருக்கணஞ்சேத முறுமோவிதென்ன மதியுமக்கே.

(இ-ள்.) திரு கண் அம சேர் நுதலார் வில்லை ஈசர் திகழ் வெண்பொடி-சிறந்த நேத்திரத்தை யழகாக நெற்றியிலுடையவரும் வில்லையென்னுந்தலத்தி லெழுந்தருளிய வருமாகிய கடவுளினது விளங்காநின்ற திருநீற்றை, மருங்கு அணை நஞ்சு ஏர் விழியீர் எற்கு இடாமல் வகையற்று அந்தோ-பக்கத்தில் பொருந்திய விடத்தையொத்த வழகிய கண்களையுடைய பாங்கிகளே யெனக் கிடாமல வகையில் லாமலேயோ, தரு கணம் சோர்ந்ததென்று அசந்தன்னை தடித்துவிட்டால்-மரத்திலிருக்கும் பிசாசம பிடித்துக்கொண்டதென் றாட்டை வெட்டிப்போட்டால், உருக்கணம சேதமுறுமோ உமக்கு இதென்னமதி-தேகத்திற் பொருந்தியகாங்கை நீங்கிப்போகுமோ வுங்களுக்கிதென்னபுத்தி, ஏ-ஈற்றசை. (௧௧)

மதியாறுசூடும் பிரான்றிகழ்வில்வ வனத்தினெஞ்சே
சதியாறுதன்னிற் செலாதின்று நீசென்று சார்ந்திறைதாள்
துதியாறு வெம்பகை யுட்டீருஞ்சன்மந் தொலையுநல்ல
ததியாறுதலெந்த நாளுமுண்டுதன்மை தக்கசெய்தே.

(இ-ள்.) மதி ஆறு சூடும் பிரான் திகழ் வில்வவனத்தில் நெஞ்சே-சந்திரனையுங் கங்கையுந்தரித்த கடவுள் விளங்காநின்ற வில்வவனமென்னுந்தலத்தில் மனமே, சதியாறு தன்னில் செலாது இன்று நீ சென்று சார்ந்து இறைதாள் துதி-சதிமார்க்கத்தில் நடவாது இப்போது நீ போய்ச்சார்ந்து சிவபெருமான் றிருவடிகளைத் துதிப்பாய், வெம்பகை உள தீரும் சன்மம் தொலையும் நல்லததி-கொடிய பஞ்சேந்திரியங்களாகிய பகைகளுனக்குள்ளே தீர்ந்துவிடும் பிறப்பறுப்போமிது நல்லசமையம், ஆறுதல் எந்நாளுமுண்டு ஈதுன்மை தக்க செய்து-எக்காலமும் மோய்வுண்டு இதுண்மையானகாரியம் தக்கவையான பத்திபுரிந்து, ஏ-அசை.()

செய்தவத்தாலண்டர் தங்களைவாதிக்குந் தீங்குறுசூர்
நய்தவத்தாலொரு சேயினைத்தந்தவ னூர்வில்லை
அய்தவத்தாறுறு மார்க்கந்தனித்தர்த் தகங்குலினில்
மெய்தவத்தாரொடு மிடவந்ததற்குனைத் தாண்மெல்லியே.

(இ-ள்.) செய் தவத்தால் அண்டர்தங்களை வாதிக்கும் தீங்
கூறு சூர-செய்கின்ற தவத்தினால் தேவர்களை வாதஞ்செய்த
கொடுமையாகிய சூரபன்மன், நய் தவ தாளொரு சேயினை
தந்தவன் நாடும் வில்லை அய்-ஐந்துகுன்றத் தாளொருபிள்
ளையைத் தந்தவனாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும்
வில்லையென்னுந் தலத்திலிருக்கிற தலைவன், தவத்தாறு
றும் மார்க்கம தனித்து அர்த்தகங்குலினில் - காறைபொ
ருந்தியவழியில் தனியாக வர்த்தராத்திரியினில், தவ மெய்
தாள் நொந்திட வந்ததற்கு ஐந்தாள் மெல்லி-மிகவுஞ் சரீ
ரமும் பாதமும நோகவந்ததற்கு வருந்தினாள் பெண்ணான
வள், ஏ-அசை. (௯௩)

மெல்லியகஞ்சனும விண்டுவுநீமதி விண்மணிநீ
துல்லியவெல்லியு மல்லியுநீபல தோற்றமுநீ
மல்லியவாகம நீமறைநீசொலு மந்திரநீ
யல்லியம்பூந்தட மார்வில்லைநின் றிடு மற்புதனே.

(இ-ள்.) மெல்லிய கஞ்சனும் விண்டுவும் நீ மதி விண்ம
ணிநீ - மிருதுவாகிய தாமரைமலரிலிருக்கும் பிரமனுந் திரு
மாலுந் தேவரீர சந்திரசூரியர்களுந் தேவரீர், துல்லிய எல்
லியும் அல்லியு நீ பலதோற்றமுநீ-சுத்தமான இரவும் பக
லுந் தேவரீர் பலகாட்சியுந் தேவரீர், மல்லிய ஆகமநீ
மறைநீ சொலும் மந்திரம்நீ-வண்மையாகிய வாகமங்களுந்
தேவரீர் சதுர்வேதங்களுந் தேவரீர் ஓதத்தக்க மந்திரங்களா
னவையுந் தேவரீர், அலலியம் பூந்தடமார் வில்லை நின்றி
டும் அற்புதனே - அகவிதழ்களோடுங்கூடிய வழகியமலர்
வாவிகள்சூழ்ந்த வில்லையென்னுந் தலத்தி லெழுந்தருளிய
வற்புதமானவரே. (௯௪)

நினைவைத்தருதி யுனதிணைப்பாதத்தை நெஞ்சினுன்ன
நினைவைத்தருமயன் பூசித்திடக்கதி நேரருள்வோய்
நினைவைத்தருணம தன்செய்கின்றான்சற்று நின்றிருக்கண்
நினைவைத்தருசொற் பொலிமேவுவில்லையில் நின்மலனே.

(இ-ள்.) உனதிணைப்பாதத்தை நெஞ்சினுன்ன நினைவை
தருதி-தேவரீரதுபயதிருவடிகளை மனதில் தியானிக்க
நினைப்பைக் கொடுப்பாய், நினைவைத்து அரும் அயன் பூசித்
திட கதி நேர் அருள்வோய் - தேவரீரைவைத்து அருமை

பாகிய பிரமன் பூசைசெய்ய மோட்சத்தை நேராகக் கிரு பைசெய்தவனே, நில் நைவை தருணம மதன் செய்கின் ஞன் சற்று நின்திருக்கண் நினை-நிலைத்ததனைபத்தைச சம யத்தில் மன்மதன்செய்கின்ஞன் கொஞ்சமுனது திருநேத் திரத்தால் நோகரு, வைத்தருசொறபொலி மேவு வில்லை யில் நின்மலனே - வைககோல் தரப்பட்ட செற்பொலிகள பொருந்திய வில்லைப்பதியி லெழுந்தருளிய பரிசுத்தமான வனே. (௬௫)

மேவியகந்த விசித்திரமாக்கவி வீணர்கணமேற்
கூவியநந்தனுங் கொணடாடசசொல்லிக குலைந்துநல்ல
சீவியகந்தத் திரிந்துநின்றேனெழிற செங்கமல
வாவியகந்தங்கு சீர்வில்லையாயென் மலமகற்றே.

(இ - ள்.) மேவி அநந்த விசித்திரமா கவி வீணாகள் மேல்-சென்று அநேக சித்திரங்கள்பொருந்திய பாமாலை யை யுஞத்தார்கண்மீது, கூவி அநந்தனும கொணடாட சொல்லி குலைந்து-சதித்து ஆதிசேடனும புகழவுரைத்து வருந்தி, நல்ல சீவியம நந்த திரிந்துநின்றேன்-நல்ல பிழைப புககெடதிரிந்து நிற்கின்றேன், எழில் செங்கமல வாவி அனம் தங்கு சீர் வில்லையாய் என் மலமகற்றே-அழகிய செந்தாமரை மலர்கணிறைந்த தடாகத்தில் அமசப்பறவை கள்பொருந்திய சிறப்பினையுடைய வில்லையென்னூர் தலத திலெழுந்தருளி யிருக்குஞ் சிவபெருமானே யெனது மும்ம லங்களையும களைக. (௬௬)

மலமாற்றிடுமுத்த மாகதிசூழ்வில்லை வாழ்பரமர்
சலமாற்றிடாத முகமுனைப்பாசடை தன்சிரமேற்
குலமாற்றிடக்கிள்ளி வீசயன்ருக்குங் குணத்தரொன்ற
ணலமாற்றவிற்புன் கவிக்குமுவர்தரு ணைக்குவரே.

(இ-ள்.) மலமாற்றிடும் மா முத்தநதி சூழ் வில்லை வாழ் பரமர் - தன்னிடத்துவந்து ஸ்நானஞ்செய்பவர்களது மும் மலத்தையும் நீக்கும் பெருமைபொருந்திய முத்தநதியானது சூழ்கின்ற வில்லையென்னுந்தலத்தில் வாழுகின்ற கட வுள், சலம் ஆற்றிடாத முக முனம் பாசடை தன்சிரமேல்- சாபத்தைத் தணிக்காத் குரங்கானது முற்காலத்தில் பகிய

விலேகளைத் தனது தலையின்மீது, குலம் ஆற்றிட கிள்ளி வீச மன்னுக்கும் குணத்தர்-கூட்டமாகப் பொறுக்கக் கிள்ளியெறிய வரசனாகச் செய்விக்குங் குணத்தையுடையவர், என்றன் நலம் ஆற்றல் இல் புன் கவிக்கும் உவந்து அருள் நல்குவர்-எனது நன்மையும் ஞானமுமில்லாத வற்பமான செய்யுளுக்குஞ் சந்தோஷித்துக் கிருபைசெய்குவர், ஏ-அசை. (௬௭)

நல்வவரம்பெறு வானரசிங்க நயந்தருச்சித்
தொல்லவரம்பெருந் தண்ணருள்பெற்ற வொளிகொள்வில்
வல்லவரம்பெருக் கார்சடையாரொரு வண்டமைழயை[வை
வெல்லவரம்பெனக் கொண்டுதிரிதல் வெகுசிறப்பே.

(இ-ள்.) நல்லவரம் பெறுவான் நரசிங்கம் நயந்து அருச்சித்து - நல்லவரத்தையடைய நரசிங்கமானது விரும்பிப் பூசைசெய்து, ஓல்ல வரம் பெரும் தண்ணருள் பெற்ற ஒளி கொள் வில்லை வல்லவர் - கைகூட் மேன்மையான பெரிய தண்ணிய வருளையடைந்த கீர்த்திவாய்ந்த வில்லையம்பதியில் எழுந்தருளிய வல்லமையுடையவரும், அம்பு எருக்கு ஆர் சடையார் ஒரு வண்டழையை - கங்கையு மெருக்கும் பொருந்திய சடையினையுடையவருமாகிய கடவுள் ஒன்றாய் வளப்பமாகிய தழையை, வெல்லவரு அம்பென கொண்டு திரிதல் வெகுசிறப்பு-வெல்லவராநின்ற அம்பென்றுசொல்லிக் கையிற்கொண்டு திரிகின்றது வெகு சிறப்பாயிருக்கின்றது, ஏ-அசை. (௬௮)

கொடிமீனவன்கரங் கொண்டைந்துபாணன்கொடியவெம்
படிமீனவாக வந்தானெனக்குயில் பன்னினபைந் [போர்
தொடிமீனவனெனக் கூடலிற்போய்மணந்துன்னிச்சொல்
[லும்
படிமீனவன்னிப் பொழிலாரும்வில்லைப் படிக்தவற்கே.

(இ-ள்.) கொடிமீன் அவன்கரங்கொண்டு ஐந்துபாணன் கொடிய வெம்போர் - மீனக்கொடியையுடைய வலிமையாகிய கையிற்கொண்டு பஞ்சபாணத்தையுடைய மன்மதன் வெவ்விதாகிய யுத்தத்தை, படிமீ கவம் நக வந்தானென குயில் - பூமியின்மீது நாதனம் விளங்கச்செய்ய வந்தானென்று குயில்களானவை, பைந்தொடி மீனவனென கூடலிற்

போய் மணந்து உன்னி - பசியவளையல்களை யணிந்த பார்வதி தேவியாரைப் பாண்டியனென்று சொல்லும்படி மதுரைக்குச் சென்று விவாகஞ்செய்துகொண்டு,உன்னி சொல்லும்படிமீன் அவனிப்பொழில் ஆரும் வில்வை படிந்தவற்கு பன்னின - நினைத்துச் சொல்லும்படியான அந்த வன்னிமரங்கள் நட்சத்திரமண்டலம்வரையி லளாவிய வில்வவனமென்னுந்தலத்தி லெழுந்தருளிய கடவுளுக்குச் சொல்லின, ஏ- அசை, (௯௯)

வில்லங் கடுக்கை நதிவேய்ந்தவன்வில்லை விண்ணவன்கை
வில்லங் கடுக்கை யிருவாளிவைத்தவன் வேண்டவுடன்
வில்லங் கடுக்கையிற் கொண்டுண்டவனை விரைந்துதொழ
வில்லங்கடுக்கையில் லாச்சீருநண்ணி விளங்கநெஞ்சே.

(இ - ள்.) வில்லம் கடுக்கை நதி வேய்ந்தவன் - வில்வமுங் கொன்றைமலரையுங் கங்கையையுஞ் சடாபாரத்திற் றரித்தவனும், வில்லைவிண்ணவன் - வில்லையென்னுந் தலத்தி லெழுந்தருளிய சிவபெருமானும், கை வில அங்கு அடுக்கு ஐ இரு வாளி வைத்தவன் வேண்ட உடன் - கையினிடத் தித்தனுவும் அவ்விடத்து அடுக்கிய வழகிய பெருமைபொருந்திய பாணத்தையும் வைத்தவனாகிய திருமால் துதிக்கவுடனே, வில் அம் கடு கையிற்கொண்டு உண்டவனை விரைந்துதொழ - ஒளிபொருந்திய கடலிற்றோன்றியவிடத்தைக் கையினால் வாங்கிப் போசித்தவனுமாகிய கடவுளைத் துரிதமாய் வணங்க, இல்லங்கள் துக்கு இல்லா சீரும் நண்ணி விளங்க நெஞ்சே - வீடுகளுங் கீழ்மைத்தனமில்லாத சீரையும்பொருந்தி விளங்குவாயாக மனமே. (௱)

ஏகம்பத்தானைநல் வில்லையில்வாழ்கின்ற வீசனையன்
பாகம்பத்தானை யுரியானென்றுன்னிப் பணிந்தெழுந்து
ஏகம்பத்தானைத் தொழுதேத்திடாதவர் நாய்நரியின்
றேகம்பத்தானைத் தெடுத்துவனத்திற் றிரிகுவரோ.

(இ-ள்.) ஏகம்பத்தானை நல் வில்லையில் வாழ்கின்ற ஈசனை அன்பா - திருவேகம்பமென்னுந் தலத்தையுடையவரும் நல்ல வில்லையில் வாழுகின்றவருமாகிய சிவபெருமானைப் பத்தியாக. ஏம்பக்க அனையுரியானென்று உன்னி பணிந்து

எழுந்து-கட்டுத்தறியை யுடைய யானைத்தோலைப் போர்த்தவனையென்று நினைந்து வணங்குகின்று, நாகம்ப ஐந்தெழுத்து ஓதிடாதவர் நாய் நரியின் - நாத்தழும்ப பஞ்சாக்கரத்தைச் செபிக்காதவர்கள் நாய்நரிகளின், தேகம் நைந்து பத்தா எடுத்து வனத்தில் திரிகுவர்-சடலம்வருந்திப் பத்துதரமாகவெடுத்துக் காட்டில் திரிகுவர், ஏ-அசை, தன்-சாரியை தானென்று நீட்டல் விகாரமாயிற்று. (௬௧)

திருவம்பரவு மெழில்வில்லை வாழ்பவன் றீங்குறுசூர்
கருவம்பரவுத லில்லாதயில்விட்ட கந்தன்றந்தை
மருவம்பரவுத லில்லாதவென்னை வலிந்துதன்பொற்
பெருவம்பரவிந்தத் தாடொழவைத்ததென் பேசுவனே.

(இ-ள்.) திருவம் பரவும் எழில் வில்லை வாழ்பவன்-இலக்குமியானவள் புகழுமழகையுடைய வில்லையெனுந்தலத்தில் வாழுகின்ற சிவபெருமான், தீங்குறு சூர் கருவம் பரவுதலில்லாது அயில்விட்ட கந்தன தந்தை - கொடுமையையுடைய சூரபன்மனது சனனம் விரியாது வேலாயுதத்தைச் செலுத்தின குமாரக்கடவுளுக்குத் தகப்பன், மருவு பரவுதலில்லாத என்னை-பொருந்திய வணங்குதலில்லாத வடியேனை, வலிந்து தன்பொற் பெரு வம்பு அரவிந்தத்தாள் தொழவைத்தது என்பேசுவன் - தடுத்து தனது பொன்போன்ற மிகுந்த வாசனையையுடைய தாமரையாகிய திருவடியை வணங்கும்படி வைத்ததை யென்னசொல்லுவன், ஏ-அசை, அம்-சாரியை. (௬௨)

பேசிலருடருந் தில்லைகுடந்தை பிரமபுரங்
காசிநற்காளத்தி யண்ணாமலைதந்திக காக்கடவூர்
ஆசிலருங்கச்சி கூடன்மருதூ ரரசவனந்
தாசிமிருந்த கமலைவில்லைப்பரன் றானங்களே.

(இ-ள்.) வில்லை பரன் தானங்கள் - வில்லையென்னும் பதியி லெழுந்தருளிய சிவபெருமானது தலங்கள், பேசில் அருள் தரும் தில்லை குடந்தை பிரமபுரம் - சொல்லுமிடத்திற் கிருபைசெய்யுஞ் சிதம்பரம் குடமூக்கு சீர்காழி, காசி நல் காளத்தி அண்ணாமலை தந்திக்கா கடவூர் ஆசில் அரும் கச்சி கூடல் மருதூர் அரசவனம் தாசிமிருந்த கமலை-வாரா.

ஏந்திழையாளையோர் பாகத்தில்வைத்தவ னென்னுமன்
போந்திழையாயரு ளென்றவர்க்கீயும் புராரியமர் [பால்
சார்ந்திழையார்முற்ற மார்வில்வைநாதன்பின் சார்ந்திடுபெண்
காந்திழையாமற் சுரந்தண்மையாருக கார்துளித்தே.

(இ-ள்.) ஏந்திழையாளை ஓர்பாகத்தில் வைத்தவன் என்னும் அன்பால் - தாங்கிய வாபரணத்தையணிந்த வுமாதேவியாரை யோர்பாகத்தில்வைத்த கடவுளானவரும் நினைக்கின்ற பத்தியினால், போந்து இழையா அருளென்றவர்க்கு ஈயும் புராரி அமர் - வந்து கிருபையைச் செய்வாயென்றவர்களுக் கருணைக்கொடுக்குந் திரிபுரதகனருமானவ ரெழுந்தருளிய, சாந்து இழை ஆர் முற்றமார் வில்வை நாதன்பின் சார்ந்திடுபெண் - சுண்ணச்சாந்துபூசியிருக்கின்ற வரிய வுபரிகைகளையுடைய வில்வேசன்பின்னால் சென்ற பெண்ணானவள், காந்து இழையாமல் சுரம் தண்மை ஆருக கார் துளித்து-கருவடைந் திளைக்காமல் பாலைநிலமானது மழைவருஷித்துக் குளிர்ச்சியாயிருக்க, ஏ-அசை. (௫௮)

காரானைத்தோலி னுரியானையன்பர் கருதுதில்லை
யூரானைத்தோய முறுசடையானை யொளிருகொன்றைத்
தாரானைத்தோத்திரத் துக்குவப்பானைச் சதுர்பெருகு [யே.
சீரானைத்தோரண வாய்வில்வையானைவைத் தேன்சிந்தை

(இ-ள்.) காரானை தோலின் உரியானை அன்பர் கருது தில்லையூரானை-கரியநிறமுள்ள யானையினது தோலைப்போர்த்தவனை அடியார்கள் தியானிக்குஞ் சிதாகாசத்தையுடையவனை, தோயமுறு சடையானை ஒளிரு கொன்றைத்தாரானை தோத்திரத்துக்கு உவப்பானை - கங்கைபொருந்திய சடாபாரத்தையுடையவனை விளங்குகின்ற கொன்றை மலர்மாலையையுடையவனை அடியார் துதிக்குச் சந்தோஷிக்கின்றவனை, சதுர்பெருகு சீரானை தோரணவாய் வில்வையானை சிந்தைவைத்தேன்-சதுர்மிகுந்த சிறப்பாகிய விடபவாகனத்தையுடையவனை தோரணங்கணிறைந்த வாயிலையுடைய வில்வைப்பதியையுடையவனை மனத்தி லெழுந்தருளப்பண்ணினேன், ஏ-அசை. (௫௯)

வைத்தவனங்க னின்றவில்வைத்தேவனை வந்தித்தாா
வைத்தவனந்தடைந் தன்னெருனார்ந்திங்கு வாழ்வனசன்

வைத்தவனந்துடை யான்றொழுதேத்து வளத்தைநந்தி
வைத்தவனந்தலில் லாததிருவை மதித்தனமே.

(இ - ள்.) வைத்த வனங்கள் நிறை வில்வைத்தேவனை-தழையும்படி வைத்த நந்தவனங்க ணிறைந்திராநின்ற வில்வைப்பதியி லெழுந்தருளிய கடவுளை, வந்தித்து ஈவை தவனம் துடை தண்ணருள் ஆர்ந்து இங்குவாழ்-வணங்கிக் குற்றமாகியவாசையைநீக்கு குளிர்ச்சிபொருந்தியவருளைப்பெற்றிவ்விடத்து வாழ்வாயாக, வனசன் வை தவ நந்துடையான் தொழுதேத்து வளத்தை - பிரமனும் பழிப்புகெடச் சங்கையுடைய திருமாலும் வணங்கித் துதிக்காநின்ற வளப்பத்தை, நல் சிவை தவம் நந்தலில்லாத திருவை மதித்தனம் - நல்ல வுமாதேவியாரது தவத்திற்குகந்து கெடுதலில்லாம லிடப்பாகத்தில்வைத்த சிறப்பை மதித்தனம், ஏ - அசை. (௯0)

திருவாதிரைத்தினமஞ்சனங்கொள்கின்றசெல்வன்வில்லை
மருவாதிரைக்கங்கை சூடும்பிரானடி வாழ்த்தவுடன்
கருவாதிரையறச் செய்திடுவான்கொடுங் காலனுயி [னே.
ரொருவாதிரையென் றொலிகழற்கால்கொண் டுதைத்தவ

(இ - ள்.) திருவாதிரைத்தினம் மஞ்சனங்கொள்கின்ற செல்வன்-திருவாதிரை நட்சத்திரநாளில் அபிஷேகங்கொள்ளுஞ் செல்வத்தையுடையவன், வில்லை மருவா திரைகங்கை சூடும் பிரான் அடி வாழ்த்த-வில்வைப்பதியில் பொருந்தி யலைகளையுடைய கங்கையைத் தரிக்கும் கடவுளது திருவடியைத் துதிக்க, உடன் கரு வாதை இரை அறச்செய்திடுவான்-உடனே சனனமாகிற வாதினைதிருப்பை நீங்கும்படி செய்வான், கொடும் காலன் உயிர் ஒருவா திரையென்று ஒலி கழல் கால்கொண்டு உதைத்தவன்-கொடிய வியமனை தான்மா நீங்கும்படி கடவென்றுசொல்லச் சத்திக்கும் வீரகண்டாமணியையுடைய திருவடியைக்கொண் டுதைத்தவன், ஏ-அசை. (௯௧)

வன்னஞ்சுகந்துண்ட மாவில்வைவாணற்கு மாதுதன
கன்னஞ்சுகனைபனி நீருகவாடிக் கலுழ்ந்தொரிரா [வ்விரம்
பன்னஞ்சுகமென் றிருந்தனனென்றென் பண்பையெ
உன்னஞ்சுகநீயிப் போதேபறந்துசென் றோதுவையே.

(இ-ள்.) வன்னஞ்சு உகந்து உண்ட மா வில்லை வாணர்க்கு - வலிமையுள்ளவிடத்தைச் சந்தோஷித்துப் பொசித்த பெருமைபொருந்திய வில்லையம்பதியில் வாழுங் கடவுளுக்கு, மாது தன் அகன் நஞ்சு கண்பனிநீருக வாடி கலுழ்ந்து ஓர் இரா - பெண்ணானவள் தனது மனதுவருந்தி கண்களிடத் திடைவிடாது நீரைச்சிந்தி வாட்டமுறறழுதோ ரிரவானது, பன்னு அஞ்சு உகமென்று இருந்தனளென்று என்றன் பண்மை யெல்லாம்-சொல்லு மஞ்சுகமாயிருக்குதென் றிருந்தாளென்று எனது தன்மையையெல்லாம, உன்னு அஞ்சுகம் நீ இப்போதே பறந்துசென்றோதுவை-நினைகத்தக்க கிளிப்பிள்ளையே நீ யிககணமே பறந்துபோய் சொல்வாயாக, ஏ-அசை. (௫௨)

பறந்திருக்குஞ்சடை யானையுமையவள் பாகத்தனைச்
சிறந்திருக்கும்புகழ்ச் செல்வனைவில்லையிற் சேர்பரனை
மறந்திருக்கும்பவ மாறத்துதிக்க வகையற்றந்தோ
திறந்திருக்கும்மட வார்க்கழிவோரை யிகல்சித்தமே.

(இ-ள்.) பறந்திருக்கும் சடையானை உமையவள் பாகத்தனை - விளங்கியிருக்குஞ் சடையையுடையவனும் பார்வதிதேவியாரை யிடதுபாகத்தில் வைததவனும், சிறந்து இருக்கும் புகழ் செல்வனை வில்லையில் சேர்பரனை - சிறப்புற்றிருக்கு மிருக்குவேதமும புகழப்பட்ட செல்வத்தையுடையவனும் வில்லையென்னும்பதியி லெழுந்தருளியிருக்கின்றவருமாகிய சிவபெருமானை, மறம் இருக்கு பவம் மாற துதிக்க வகையற்று அந்தோ - கொலையுமாறுபாடுஞ் சனனமு நீங்கும்படித் தோத்தரிக்க வகையில்லாமலேயோ, திறம் இருக்கு மடவார்க்கு அழிவோரை சித்தமே இகல் - வலுமையாகிய தன்மையுடைய மாதர்களுக்காக மனமழிகின்றவர்களை மனமே பகைப்பாய். (௫௩)

இகலற்றிடச்சித் தசன்பூசைசெய்வில்லை யீசனல்ல
பகலுற்றணையம்பு காலவரன்மன்றைக்கலக் கும்பரமன்
புகலற்றுவேலொரு தேத்தொழுதற்பதம் புக்குவரோ
மிகலற்றிடை விரயத்திலாழ்குவர் மெய்ம்மெய்ம்மையே.

(இ-ள்.) இகலற்றிடச்சித்தசன் பூசைசெய் வில்லை ஈசன் - பகைநீங்கும்படி மன்மதன் அர்ச்சித்த வில்லைப்பதியி லெ

ழுந்தருளிய கடவுளானவரும், நல்ல பகல் அல் தணல் அம்பு கால் வான் மண ஆ கலக்குமபரமன்-நல்லபகலு மிருளு மகக்னியுஞ் சலமும காற்று மாகாயமும் பூமியுமாகக் கலந்திரா நின்றவருமாகிய சிவபெருமானை, புகலற்று வேறொரு தே தொழுதால் பதம் புக்குவரோ-அடைக்கலம புகாமல் வேறே யொருதெய்வத்தை வணங்கினல் பதவியிற் சேர்வார்களோ, மிகு அலல் தடுக்க நிரயத்தில் ஆழ்குவர் மெய்ம்மெய்மை-மிகுந்த துன்பந்தடுத்துநிற்க நரகததிலமிழ்வார்களுண்மை யுண்மை, ஏ-அசை. (ருச)

மெய்யைச்சதமென வெண்ணிப்பல்பொருள் வேர்வைமிக
மெய்யைச்சதம்பொய்மை யென்றுரைத்தீட்டிவிலைமடவார்
மெய்யைச்சதமென் றெணிக்கெடுவாரவில்லை மேயவனே
மெய்யைச்சதமுயா வொன்றறியாதம் விதியிதுவே,

(இ-ள்.) மெய்யை சதமென எண்ணி பலபொருள் வேர்வை மிக - தேகத்தை நிலையென்றுநினைத் தநேக திரவயங்களை வியர்வையான ததிகரிக்க, மெய்யை சதம் பொய்மை என்று உரைத்து ஈட்டி விலைமடவார் - உண்மையையெல்லாம் பொய்யென்றுசொல்லிச் சம்பாதித்துப் பரத்தையரது, மெய்யை சதமென்று எணி கெடுவார் வில்லை மேயவனே - சொல்லை யுறுதியென்று நினைத்துக் கெட்டுப் போவார்கள் வில்லைப்பதியி லெழுந்தருளிய சிவபெருமானே, மெய் ஐச்சு அதம் உயர்வு ஒன்று அறியார்தம் விதி இதுவே - மெய்யெழுத்து உயிரெழுத்து இழிவு மேம்பாடு ஆகிய விவைகளிலொன்று மறியாதவருடைய முறைமையிவ்வளவேயாம். (ருரு)

விதிக்குமரிக்குமெட் டாப்பரன்சொல்லருமெய்யன்பர்செய்
துதிக்குமரிக்கும் வினையேன்பலுவற்குஞ் சொல்லியுடன்
கதிக்குமரிக்கு முமையாட்குமன்புற நற்கதியை
விதிக்குமரிக்குலஞ் சேர்பொழில்சூழ்வில்லை வித்தகனே,

(இ-ள்.) விதிக்கும் அரிக்கும் எட்டா பரன் சொல்லரு மெய்யன்பர் செய் - பிரமனுக்குத் திருமாலுக்கு [illegible]டாத சிவபெருமான் சொல்லுதற்கரிதான உண்மை[illegible] வடியார்கள் செய்கிற, துதிக்கும் அரிக்கும் வினையேன் பலுவற்கும் சொல்லி-தோத்திரத்துக்கும் கெடுக்கவின்ற வினை

யையுடைய வடியேன்செய்த பாமாலைக்கும் புகழ்ந்து, உடன் நதிக்குமரிக்கும் உமையாட்கும் அன்புற நல் கதியை- உடனே கங்காதேவியாருக்கும் பார்வதிதேவியாருக்கு முவகையுண்டாக நல்ல பதவியை, விதிக்கும் ஆரிக்குலம் சோ பொழில் சூழ் வில்லை வித்தகன்-வண்டுக்கூட்டங்கள்பொருந்திய சோலைகள்சூழ்ந்த வில்வையம்பதியி லெழுந்தருளிய கடவுள் நிச்சயிக்கும், ஏ-அசை. (ருகூ)

வித்தந்தியானமன் பர்க்கருள்வோனெழில் வில்லையனை
கைத்தந்தியான்றந்தை சுந்தரனேத்திடக் கார்சூழலில்
அத்தந்தியான விருள்சென்றதன்பொன் னடிமலரன்
பைத்தந்தியானு முயச்செய்வன்வேதப் பரம்பொருளே.

(இ-ள்.) வித்தம் தியானம் அன்பர்க்கு அருள்வோன் எழில் வில்லையன் - ஞானமுஞ் சிந்தனையு மடியார்களுக்குக் கிருபைசெய்கின்றவரும் அழகுபொருந்திய வில்வைப் பதியையுடையவருமாகிய கடவுள், ஐங்கை தந்தியான் தந்தை சுந்தரன் ஏத்திட கார்சூழல் இல்-ஐந்துகைகளையுடைய யானைமுகக்கடவுளுக்குப் பிதாவானவரும் சுந்தரமூர்த்தி நாயனார் துதிசெய்ய கரிய கூந்தலையுடைய பரவையரது வீட்டிற்கு, தியான அத்தவிருள் சென்ற தன்பொன் அடிமலர-கொடுமையுள்ள பாதிராத்திரியிற் றூதாகச்சென்ற தனது பொன்போன்ற பாதமலரிடத்து வைககும், அன்பை தந்து இயானும் உயச்செய்வன் வேதப்பரம்பொருள் - பத்தியைக் கொடுத்து அடியேனுங் கடைத்தேறச்செய்வான் மேலாகிய பரம்பொருளாகவு முள்ளவன், ஏ - அசை. (ருஎ)

வேதனையேதர வென்றனைச்சூழ விரும்புமுன்றன்
காதனையேதர மொன்றறியாவினை யேகயவோர்
நிதனையேதர மாக்காவெனவயன் செப்புமவில்லை
நாதனையேதரப் பூச்சாத்திநின்று நவின்றனனே,

(இ-ள்.) ஏ தரமொன்று அறியாவினையே - நிராதரமறியாத நல்வினையே, வேதனையே தர என்றனைச்சூழ விரும்பும் உன்றன் காதல் கை-துன்பத்தையேகொடுக்க வென்னைச் சூழ்ந்துகொள்ள விச்சிக்கு முன்னுடைய வாசையையொழித்துவிடு, கயவோர் நீதனைக்கொளுதது, தனையே தரமா காவெனவயன் செப்பும் - தன்னையே கிரம

யாக விரட்சிப்பாயென்று பிரமன் சொல்லித்துதிக்கும்,
வில்லை நாதனையே தரு அ பூச்சாததி நின்று நவின்றனன்-
வில்லைப் பதியி லெழுந்தருளிய சிவபெருமானையே மரத்தி
ல் நக்கு மநதமலர்களா லருச்சித்து நிலையாக நின்று துதித்த
வன், ஏ - அசை. (௫அ)

நின்றவனங்கி மலையுருவாய்நெடு நாளளவுஞ்
சென்றவனங்கிரு நற்பரிகொண்டுமுன் றென்னனுழை
ஒன்றவனங்கிழித் தோடுஞ்செய்சூழ்வில்லை யோங்குமெம்
மன்றவனங்கிளர் தாள்பாடச்சென்ம வழக்கறுமே. [மான்

(இ - ள்.) அங்கிமலையுருவாய் நெடுநாளளவும் நின்றவன்-அக்கினிமலை வடிவாக வநேககாலம்வரையில் நிலையாக நின்றவன், அங்கு இரு நற்பரி கொண்டு முன் தென்னனுழை சென்றவன்-அவ்விடத்துப் பெருமைபொருந்திய நல்ல குதிரைகளை நடத்திக்கொண்டு முற்காலத்திற் பாண்டியனிடத்திற் போனவன், ஒன்ற வனம் கிழித்து ஓடும் செய் சூழ் வில்லை ஓங்கும் எம்மான் - பொருந்தச் சலமானது கிழித் தோடுகின்ற வயல்நிலங்கள் சூழும் வில்லைப்பதியி லெழுந்தருளிய வெமது கடவுளது, மன்ற வணங்கிளர் தாள் பாட சென்ம வழக்கறும் - மிகவு மழகுவிளங்காநின்ற திருவடிகளைத் துதிக்கப் பிறப்பாகிற வழக்கு நீங்கும், ஏ-அசை.

அறுகாறுதிங்க ளணிந்தவன்வில்லை யரனடியை
அறுகாறுதிகழு நாய்க்கிளையாகின்ற வாகத்திச்சை
அறுகாறுசன னக்கடறுண்டி யறைவரிய
அறுகாறுதிண்பொழில் சூழ்கயிலைக்கதி யண்ணுவையே.

(இ-ள்.) அறுகு ஆறு திங்கள் அணிந்தவன் வில்லை அரன் அடியை - அறுகையும் ஆற்றையுஞ் சந்திரனையுந் தரித்த கடவுளும் வில்லைப்பதியி லெழுந்தருளி யிருக்காநின்றவருமாகிய சிவபெருமானுடைய பாதத்தை, அறுகால் துதி கழுநாய்க்கு இளையாகின்ற ஆகத்து இச்சை அறு காறுதி-ஆறு காலமுந் துதிப்பாய் கழுக்கும் நாய்க்கு மிரையாகின்ற தேகத்தினாசையை யகற்று காறியுமி, சனனக்க[illegible] தாண்டி அறைவரிய அறுகால் து திண்பொழில் சூழ் கயிலைக் கதி அண்ணுவை-சனனசாகரத்தை நீங்கி சொல்லற்கரிய

(இ-ள்.) சீரலைவாய் அமர் செந்தனை பெற்றவன் - திருச்சீரலைவாயென்னும் பதியி லெழுந்தருளியிருக்கும் முருகக்கடவுளை யீன்றவன், செம் முத்தம் மிஞ்சு ஈர அலை வாய் கடல் சூழ் புவி போற்ற திகழும் வில்லை சீர் அலை வாய்ந்த சோரன் - செவ்விதாகிய முத்தங்கள் மிஞ்சாநின்ற குளிர்ந்த வலைகளையுடைய சமுத்திரஞ்சூழ்ந்த வுலகத்தார் துதிக்க விளங்காநின்ற வில்லைப்பதியில் சிறப்பானது கெடுதலில்லாமல் பொருந்திய கடவுளது, சேவடி சிந்தை வைத்தேன் சீர் அல் ஐ வாய் நமன் அஞ்சுவன் சேட்டையும் தேடிலன் - திருவடியை மனதில் வைத்திருக்கின்றேன் சதாயுதத்தையு மிருண்ட நிறத்தையு மழகாகவாய்ந்த வந்தகனுமவனை பயப்படுவன் மூதேவியுஞ் சேடாள், ஏ-அசை. (௬௫)

தேடுந்தவத்தர்க்கு மெட்டாகதிவந்தி சேரவந்த
ஈடுந்தவத்தற்குத் தாவெனக்கேட்டவர் நாளுமன்றில்
ஆடுந்தவத்தர் குராண்மரமார்வில்லை யண்ணலன்றிப்
பாடுந்தவத்தற்குத் தொண்டனென்றோதப் பணிந்திலனே.

(இ-ள்.) தேடும் தவத்தர்க்கும் எட்டா கதி வந்தி சேர - தேடுகின்ற தபசிகளுக்கு மெட்டக்கூடாத மோக்கத்தை மலடியானவளடைய, அந்நாள் து தவ தற்கு தாவென கேட்டவர் நாளும் மன்றில் ஆடுந்த அத்தர் - அக்காலத் திணைவாகிய பிட்டமுதை மிகவுந் தனக்குக்கொடுவென்று கேட்ட கடவுள் நான்தோறும் பொன்னம்பலத்தில் திருத்தஞ்செய்யாநின்ற அந்த சிவபெருமான், குரால்மரம் ஆர் வில்லை அண்ணலன்றி பாடும் த அத்தற்கு தொண்டனென்றோத பணிந்திலன் - குரால் விருட்சங்கள்பொருந்திய வில்லைப்பதியி லெழுந்தருளிய கடவுளையல்லாம லழிந்துபோகும் பிரமனது தந்தையாகிய திருமாலுக்கு அடியானென்று சொல்லும்படி பலனையும் பணியமாட்டேன், ஏ-அசை. (௬௬)

பணிவெங்கைகண்டிட மன்றுணடஞ்செய்த பண்ணவநல்
அணிவெங்கைசூழ்வில்லை வாழ்புரவைம்பொறி யாலழிந்து
திணிவெங்கையன்றனை மூன்கரும்புட்டருள்செய்ததுபோல்
தணிவெங்கைசேர்ந்த வளித்திடுவாயென் தீயாகிடுமே.

(இ-ள்.) பணி, வெங்கை கண்டிட மன்றுள் நடஞ்செய்த பண்ணவ - பதஞ்சலியும் வியாக்கிரபாதரும் தரிசிக்கக் கன

கசபையில் நிருத்தம்புரிந்த கடவுளே, நல் அணி வேங்கை சூழ் வில்லை வாழ்பர - நல்ல வழகாக வேங்கைமரங்கள் சூழுகின்ற வில்லைப்பதியில் வாழுஞ் சிவபெருமானே, ஐம் பொறியால் அழிந்து திணி வேம் கையன்றனை முன் சுரும் புட்கு அருள்செய்ததுபோல்-பஞ்சேந்திரியங்களினால் கெட்டு பலத்தோடுவேகும வஞ்சகனை முற்காலத்தில் கரிக்குருவிக்குக கிருபைபுரிந்ததுபோல, தணிவு ஏங்கைநீங்க அளித திடுவாய் எந்தயாநிதியே - தணிவாக ஏக்கம்நீங்கக் காப்பாற் றுவா யெங்கள் தயாளமுள்ள திரவியமே. (௬௭)

நிதியேகதிதரு நின்மலனேபழி நேரத்தென்னன்
றதியேகதிக்கவந் தாள்சுயம்பேதொண்டர் சூழும்வில்லைப்
பதியேகதிக ழுமையாள்தலைவ பரதவிக்க
விதியேகதியென் றுனைத்தொழுவேற்கும் விளம்புவையே.

(இ - ள்.) நிதியே கதி தரும் நின்மலனே - திரவியமே மோக்ஷத்தைக்கொடுக்கும பரிசுத்தவானே, பழி நேர தென்னன் துதியே கதிக்க வந்து ஆள் சுயம்பே - பழிசம்பவிக் கப் பாண்டியன் செய்யுந் தோத்திரமானது சிறக்க வெழுந் தருளிவந்து கிருபைசெய் திரக்ஷிக்குஞ் சுயம்புவானவனே, தொண்டர் சூழும் வில்லைப்பதி ஏக திகழ் உமையாள் தலைவ - அடியார்கள் சூழுகின்ற வில்லைப்பதியி லெழுந்தரு ளிய வொப்பற்றவனே விளங்காநின்ற பார்வதி தேவியா ருக்கு நாயகனே, பரதவிக்க கதியென்று உனை தொழுவே ற்கும் விதியே விளம்புவை-வருந்த வடைக்கலமென்று தே வரீரை வணங்குகின்ற வடியேனுக்கு மூழ்வினைவந்தணுகுமா விதைச் சொல்வாயாக, ஏ - அசை. (௬௮)

விளக்கடுக்கைக்கங்கைசூடும்பிரான்வில்லைமேவுபெம்மான்
வளக்கடுக்கண்டன் மலைமங்கைபாகன் மலரடியை
யுளக்கடுப்பாறத் துதித்திலிர்தாயி லுதாரந்தனி
லளக்கடுப்பார்மெய்ம்மை வைத்திருமந்தக னண்டிடட்டே.

(இ-ள்.) விளம் கடுக்கை கங்கை சூடும் பிரான் வில்லை மேவு பெம்மான் - விளவுங் கொன்றையுங் கங்கையுஞ் சடா பாரத்தில் தரிக்குங் கடவுளும் வில்லைப்பதியி லெழுந்தரு ளிய பரமனும், வளம் கடு கண்டன் மலை மங்கை பாகன்

மலரடியை-வளமையாகிய சமுத்திரத்திலுண்டான விஷத்தைக் கண்டத்தில் வைத்தவரு முமாதேவியாருக் கிடப்பாகத்தைக் கொடுத்தவருமாகிய சிவபெருமானது மலர்போன்ற பாதத்தை, உளம கடுப்பு ஆற துதித்திலிர - மனத்திற் பொருந்திய வருத்தந்தணிய துதிக்கமாட்டாதவர்களே நீங்கள், தாயின் உதரந்தனில் அளம் கடுப்பா மெய்யை அந்தகன் ஆண்டிட வைத்திரும-தாய்வயற்றில் நெருங்கிய சொலிக்கின்றமெய்யை யியமனுளும்படி வைத்திருங்கள், எ-அசை. (கூகூ)

அந்தகனஞ்ச வுதைத்தவவில்லை யரதிரையார்
அந்தகனஞ்சங் குடித்திச்சுரரை யளித்தவனே
அந்தகனஞ்சங் குனக்களித்தேனினி யாரணனுல்
அந்தகனஞ்சட லஞ்சிட்டியாதெற் கருளுவையே.

(இ-ள்.) அந்தகன் அஞ்ச உதைத்தவ வில்லை அர-இயமன் பயப்படும்படி யுதைத்தவனே வில்லைப்பதியி லெழுந்தருளிய சிவபெருமானே, திரையார் அந்த கல் நஞ்சங்குடித்து சுரரை அளித்தவ-சமுத்திரத்தில் அந்த கல்லென்றசத்தத்தோடுவந்தவிடத்தையுண்டு தேவர்களை யிரக்ஷித்தவனே, நேயந்தக நஞ்சு உனக்கு அளித்தேன் இனி ஆரணனல்-அன்பைத் தகுதியாகவருந்தித் தேவரீருக்குக் கொடுத்தேனினிமேல் பிரமனுல், அந்தம் கனம் சடலம் சிட்டியாது எற்கருளுவை - அழகிய கனத்ததேகத்தைப் படைக்காமலிருக்கும்படி யடியேனுக்குக் கிருபைசெய்வாய், எ-அசை. (எ0)

அண்டங்கடாவுஞ் சிகிரிகளோங்கி யணிசெய்வில்லைக்
கண்டங்கடாருங் கடவுளைப்போற்றிக்கன் மந்தொலைத்தால்
தண்டங்கடாத்திரி சூலத்துடன்வருஞ் சண்டனுயிர்
கொண்டங்கடாது வதைபுரியான்புகழ் கூடிடுமே.

(இ-ள்.) அண்டங்கள் தாவும் சிகிரிகள் ஓங்கி அணிசெய் வில்லை - அண்டங்களை யளாவுகின்ற கோபுரங்களோங்கி யழகைச்செய்கின்ற வில்லைப்பதியி லெழுந்தருளிய, கண்டம் கடு ஆரும் கடவுளை போற்றி கன்மம் தொலைத்தால் - கழுத்தில் விடம்பொருந்திய சிவபெருமானைத் துதித்துப் பூர்வகன்மத்தை நீக்கினுல், தண்டம் கடா திரிசூலத்து உடன்

வரு சண்டன் - கதை எருமைக்கடா திரிசூலம் இவைகளு டன் வராநின்ற வியமன், உயிர் கொண்டு அங்கு அடாத வதை புரியான் புகழ் கூடுமே - ஆன்மாவைப் பிடித்துக் கொண்டுபோ யவ்விடத்துச் செய்யத்தகாத வதையைச் செய்யமாட்டான் கீர்த்தியுண்டாகும், எ-அசை. (௭௧)

புண்ணியகண்ணிரு நான்குடையோனரி போகிவிண்ணோர்
நண்ணியகண்ட பரிபூரணனென நாத்தழும்ப
வெண்ணிபகத்தில்வைத் தேத்திடுநாத வெழில்செய்வில்லை
யண்ணியகங்கா தரநின்சரணுக் கடைக்கலமே.

(இ-ள்.) புண்ணிய கணணிருநான்குடையோன் அரி போகி விண்ணோர் - புண்ணியனே யெட்டுக்கண்களையுடைய பிரமனுந் திருமாலு மிந்திரனுந் தேவர்களும், நண்ணி அக ண்ட பரிபூரணனென நாத்தழும்ப - பொருந்தி யெங்குநி றைந்த பரிபூரணனேயென்று நாவானது தழும்பேற, எண் ணி அகத்தில் வைத்து ஏத்திடும் நாத-நினைத்து நெஞ்சத்திருத் தித் துதிக்குநாதனே, எழில்செய் வில்லை அண்ணிய கங் காதர நின்சரணுக்கு அடைக்கலம் - அழகுபொருந்திய வில் வைப்பதியி லெழுந்தருளிய கங்காதரனே நின்றிருவடிக் கடைக்கலம், எ-அசை. (௭௨)

அடைக்கலந்தாவெனத் தொண்டர்களேத்துறு மண்ணல்வி
நடைக்கலந்தாவலொடுகற்குமன்னமுநாளுமின்னே [ல்லை
தொடைக்கலந்தாளசை யாதணையேமதன் சோபமுற்றுக்
கிடைக்கலந்தாதைந்து பாணந்தொடுத்தனன் கேள்வியற்றே.

(இ-ள்.) அடைக்கலம் தாவென தொண்டர்கள் ஏத்துறும் அண்ணல் வில்லை - புகலிடங் கொடுவென்றடியார் கடுதி க்கநின்ற சிவபெருமானெழுந்தருளிய வில்லைப்பதியிலிரா நின்ற, நடை கலந்து ஆவலொடு கற்கும் அன்னமும் நாளும் மின்னே - நடையைச்சேர்ந்தாசையோடு கற்றுக்கொள்ளா நின்ற வன்னப்பறவையும் வெட்கமடையும்படியான பெண் ணே, தொடைக்கலம் அசையாது அணையேம் மதன் சோப முற்று - ஆபரணங்க ளசையாமல் சேரவில்லை மன்மதன் சோபங்கொண்டு, கிடைக்கு அலந்தாது கேள்வியற்று ஐந்து பாணமும் தொடுத்தனன் - கிடைத்தற்குவருந்தாது கேள்வி

யில்லாமல் பஞ்சபாணங்களையுந் தொடுத்தனன், தான், ஏ - அசை. (எகூ)

அற்றந்தருதலி லந்தணர்கூடி யருமறைகள்
கற்றந்தருப்பை முதற்கொண்டுவேள்வி களிப்புறவே
சுற்றந்தரும மிகச்செய்யும்வில்வைச் சுரவெனைநோய்
குற்றந்தருமனைப் போல்வாட்டுதின்னருள் கூர்வித்தனே.

(இ-ள்.) அற்றந்தருதலில் அந்தணர் கூடி அருமறைகள்-சோர்வில்லாத வேதியர்கள் ஒன்றாகச்சேர்ந்தருமையாகிய வேதங்களை, கற்று அம் தருப்பைமுதற்கொண்டு வேள்வி களிப்புற-வாசித்தழகிய தருப்பை முதலியவையுங்கொண்டு யாகத்தைச் சந்தோஷமாக, சுற்றம் தருமம் மிக செய்யும் வில்வை சுர-பந்துக்களுந்தருமமுமதிகரிக்கச்செய்கின்றவில்வைப்பதியிலெழுந்தருளிய சிவபெருமானே, எனை நோய் குற்றம்தருமனைப்போல் வாட்டுது இன்னருள் வித்தனே கூர்-அடியேனை வியாதியானது தீவினையாகிய குற்றத்துக்காக யமனைப்போல் வருத்துது ஞானசொரூபியே அதுநீங்கும்படியாகவினியகிருபையைச் செய்வாயாக, ஏ - அசை. (எச)

வித்தகமத்தக மார்விழியா வில்வை விண்ணவபா
வித்தகமத்த கரியுரியாயென மெய்யன்பர்கூ
வித்தகமத்த மலர்சாத்திடும்பர வீண்மதன்செர்
வித்தகமத்த மனையேவிலென்செயு மெல்லியளே.

(இ-ள்.) வித்தக மத்தகமார் விழியா வில்வை விண்ணவ-ஞானசொரூபியே நெற்றிக்கண்ணையுடையவனே வில்வைப்பதியி லெழுந்தருளிய கடவுளே, அகம் பாவித்து மத்தகரியுரியாயென மெய்யன்பர் கூவி - மனதில் பாவனைசெய்து மதயானையின் றோலையுடையவனேயென் றுண்மையானவடியார்கள்துதித்து, தக மத்தமலர் சாத்திடும் பர - தகுதியாக வூமத்தமலரா லர்ச்சிக்கப்பட்ட பரனே, வீண்மதன் செர்வித்து அகமத்தம் மனை ஏவில் மெல்லியள் என்செயும்-வீணனமாரனகங்கரித்துக் குடங்கையிலிராநின்ற தாமரைமலர்ப்பாணத்தையேவிடில் பெண்ணுணவ ளென்னசெய்வாள், ஏ-அசை. (எரு)

மெல்லியலாகு முமைபங்கவில்லையின் மேவுமைய
சொல்லியலாசங்க நின்றவதென்னன் றுதிக்குகந்து
மலலியலார்கரி வென்றவவிம்மை மறுமையிலு
நல்லியலானெனச் சொல்லச்சுகமரு ணாயகனே.

(இ-ள்.) மெல்லியலாகும் உமை பங்க வில்லையில் மேவும் ஐய-பெண்ணாகின்ற வுமாதேவியாரைப் பாகத்தி லுடையவனே வில்லைப்பதியி லெழுந்தருளிய கடவுளே, சொல்லியல் ஆர் சங்கம் நின்றவ தென்னன் துதிக்கு உகந்து - புகழாநின்ற விலக்கணம்பொருந்திய சங்கததிலிருந்தவனே பாண்டியனது தோத்திரத்துக்குச் சந்தோஷித்து, மல் இயலார் கரி வென்றவ இம்மை மறுமையிலும்-வலுமையையுடைய நடைபொருந்திய யானையைச் செயித்தவனே யிப்பிறப்பிலும் மறுபிறப்பிலும், நல்லியலானென சொல்ல சுகம் அருள் நாயகனே - நல்ல குணமுடையவனென்று சொல்லுமபடியான சுகத்தைக் கிருபைசெய்வாய் கடவுளே, ஏ - அசை. (எசு)

நாயகராமெனச் சிற்சிலதேவரை நாடித்தர்க்கம்
தீயகராகச்செய் பேதைகளேமுனஞ் சீறிநஞ்சு
பாயகராசலம் போல்வரவெம்மான் பருகிலனேல்
மாயகராவ ரறிவிர்வில்லையனை வந்தியுமே.

(இ-ள்.) நாயகராமென சிற்சிலதேவரை நாடி தர்க்கம்-தலைவர்களென்று சிலசிலதேவர்களைச்சேர்ந்து வாதம், தீயகராக செய் பேதைகளே முனம் நஞ்சு சீறி - கொடிய மனமுடையவராகச்செய்கின்ற வறிவீனர்களே முற்காலத்தில் விஷமான தெதிர்த்து, பாய் அ கராசலம்போல் வர எம்மான் பருகிலனேல் - பரவியந்த யானையைப்போலவர வெமது சிவபெருமான் பொசிக்காவிட்டால், மாய் அகராவர் அறிவீர்-அத்தேவர்களிறக்குந் தேகமுடையவர்களாவதை யறிவீர்கள் ஆதலால், வில்லையனை வந்தியும்-வில்லைப்பதியிலெழுந்தருளியிருக்குஞ் சிவபெருமானை வணங்குவீர்களாக, ஏ-அசை. (எஎ)

வம்பணிகொங்கைத் திருநாயகனை மலரயனை
அம்பணிகொங்கை யலர்சூடியதனை தாகம்வைத்தோன்
செம்பணிகொங்கைப் பொழில்வில்லைநாதன் றிருவடியை
நம்பணிகொங்கையர் பெற்றதுபோலரு ணன்னுவையே.

(இ-ள்.) வம்பு அணி கொங்கை திரு நாயகனை மலரயனை-இரவிக்கைகயைத் தரிக்கும் தனங்களையுடைய விலக்ஷுமிக்கு மணாளனாகிய திருமாலையும் பிரமனையும், அம் பணி கொங்கு ஐ அலர் சூடிய தனது ஆகம் வைத்தோன்-கங்கையையுஞ் சர்ப்பத்தையும் வாசனைபொருந்திய வழகிய கொன்றைமலையும் தரித்ததனதுதேகத்தில்வைத்தவன், செம பண் ஈ கொங்குப்பொழில் வில்லை நாதன் திருவடியை நம்பு-செவ்விதாகிய ராகத்தைப் பாடுகின்ற வண்டுகள் பொருந்திய கொங்குமலர்ச்சோலைகளையுடைய வில்லைப் பதியிலெழுந்தருளிய சிவபெருமானது திருவடியை நம்புவாயாக, அணி கொங்கு ஐயர் பெற்றதுபோல் அருள் நண்ணுவை-அழகிய கொங்குநாட்டரசனாகிய சேரமான்பெருமாள் அடைந்ததுபோலக் கிருபையைப்பெறுவாய், ஏ-அசை. (எஅ)

அருமாதவஞ்செறி ஞானிகளென்று மமரும்வில்லைப்
பெருமாதவஞ்செழுந் தீக்களித்தோன்செயம்பெற்றிடவான்
வருமாதவஞ்செக தோற்றானையங்கத்தில் வைத்தவநீ
தருமாதவஞ்செய வொட்டாதளிப்பைகண் டாணளித்தே.

(இ-ள்,) அரு மா தவஞ் செறி ஞானிகள் என்றும் அமரும் வில்லை பெருமா-அருமையாகிய மிகுந்த தவம்பொருந்திய ஞானவான்கள் சதாகாலமு மமர்ந்திருக்கின்ற வில்லைப்பதியிலெழுந்தருளிய தலைவனே, தவம் செழும் தீக்கு அளித்தோன் செயம்பெற்றிட வான்-காண்டாவனத்தைச் செழுமையாகிய வக்கினிபகவானுக்குக் கொடுத்தவனாகிய வர்ச்சுனன் வெற்றிகொள்ள வாகாயத்தில், வரும் ஆதவம் செகம் தோற்றானை அங்கத்தில் வைத்தவ-உதிக்குஞ் சூரிய கிரணம் பூமியில் தோற்றாதிருக்கச்செய்த திருமாலைத் தேகத்தில்வைத்த சிவபெருமானே, நீதரு மாது அவஞ்செய ஒட்டாது கண்ணளித்து அளிப்பை-கொடுமைசெய்யு மூதேவியானவள் கெடுதிசெய்யாதிருக்கும்படிக்குக் கிருபாநோக்கஞ்செய்து அடியேனையிரட்சிப்பாயாக, தான், ஏ-அசை.

கண்டுகைத்திட்டாநற் சொல்லிக்கிடந்தந்த கர்த்தன்வில்லை
கண்டுகைத்தட்டி யிருக்கின்றவள்ளல் கழல்களிற்றன் [க்
கண்டுகைத்தில்லா தெடுத்தருச்சித்திட்ட கண்ணற்குக்கைக
கண்டுகைத்திண்டிரு வாழிதந்தானைக் கருதுமினே.

(இ-ள்.) கண்டு கைத்திட்ட நல் சொல்லிக்கு இடம் தந்த கர்த்தன் - கற்கண்டுங் கசந்த நல்ல சொல்லையுடைய வுமாதேவியாருக் கிடப்பாகத்தைககொடுத்த கடவுள், வில்லைவ கண்டு கைதட்டி இருக்கின்ற வள்ளல் கழல்களில் - வில்வைப்பதியைப்பார்த்துக் கையைக்கொட்டி யெழுந்தருளியிருக்குஞ் சிவபெருமானது திருவடிகளில், தன் கண் துகைத்தில்லாது எடுத்து அருச்சித்திட்ட கண்ணற்கு-தனதுவிழிகளை வருத்தமில்லாதிடந்து பூசைசெய்த திருமாலுக்கு, கைகண் துகை திண் திரு ஆழி தந்தானை கருதுமின் - கையினிடத்துப்பொருத்தவுடனே பலமபொருந்திய சிறந்த சக்கரத்தைககொடுத்தவனை நினையுங்கள், ஏ - அசை. (அ0)

கருவாயசங்கு பெறுமுத்தநாரை கருவெனவே
மருவாயசம்பெற வேயடைகாக்கும வயலவில்லைமூ
வுருவாயசம்புனைந் தேவீற்றிருநகரநல் லுத்தமனே [யே.
திருவாயசம்பத் துறசெய்துனன்பாக்குள் சேர்விப்பை

(இ-ள்.) கரு வாய் அ சங்கு பெறும முத்தம் நாரை கருவெனவே - சூல்வாய்ந்தவந்த சஙகுகளானவையீன்ற முத்துக்களை நாரைகள் முட்டைகளெனவே, மருவு ஆயசம் பெறவே அடை காக்கும் வயல் வில்வை - பொருந்தியிளைப்புண்டாகவே யடைகாக்கின்ற வயல் நிலங்கள் சூழ்ந்த வில்வைப்பதியில், மூவுருவாய் அசம்புனைந்தே வீற்றிருக்கும் நல் உத்தமனே - திரிமூர்த்திவடிவாகி சந்நிதிபேடகஞ் செய்துக்கொண்டே யெழுந்தருளியிருக்கும் நல்ல வுத்தமகுணமுடையவனே, திருவாய சம்பத்துற செய்து உன்னன்பர்கருள் சேர்விப்பை - திருவாகிய செல்வமடையச்செய்தடியேனை யுன்னடியவர்களுக்குள் சேர்த்துக்கொள், ஏ-அசை. (அக)

சேருந்தரும குணபாலன் பூசனை செய்தவில்லை
யாருந்தரும வடிவாகியபர னன்பர்கட்குச்
சீருந்தருமலி யூருந்தருபவன் சீர்புகன்றுற்
பேருந்தரும னயன்வேலைதீரப் பிறப்பிவனே.

(இ-ள்.) சேரும் தருமகுணபாலன் பூசனை செய்தவில்லை-வந்துசேர்ந்த தருமகுணபாலனென்பவன் பூசைசெய்தவில்வைப்பதியில், ஆரும் தருமவடிவாகிய பரன்-எழுந்தரு

ளிய தருமசொரூபியாகிய கடவுள், அன்பர்கட்கு சீரும் தரு மலி ஊரும் தருபவன் சீர் புகன்றால் - அடியார்களுக்குச் சீரும் விருக்ஷங்களிறைந்த நகருங்கொடுக்கின்ற சிவபெரு மானது சீரைச்சொன்னால், பேரும் தருமன் அயன் வேலை தீர பிறப்பு இவணே-இயமன் பிரமனிவர்களுக்குச் சிருட்டி ப்புப் பட்சிப்பாகிய வேலையில்லாமல் சனன மிப்போதே நீங்கும். (அ௨)

வண்ணப்பசுங்கிளி மென்மொழியாளொடும் வந்தடியேன்
எண்ணப்பயன்படு காட்சிதந்தாளெழி லீசமுனங்
கண்ணப்பருக்கரு டந்தவவாரூ ரொனக்களித்து [னே.
மண்ணப்பரும்புற் றிடங்கொண்டுவாழ்வில்லை வானவ

(இ-ள்.) வண்ணம் பசும் கிளி மென்மொழியாளொடும் வந்து - வளப்பமாகிய பசுமைபொருந்திய கிளியையொத்த மிருதுவாகிய சொல்லையுடைய பார்வதிதேவியாரோடு மெ ழுந்தருளிவந்து, அடியேன் எண்ணம் பயன்படு காட்சிதந் தாள்-அடியேனுடைய கருத்தாகிய பிரயோசனப்படுங்கா ட்சி கொடுத்தாள்வாய், எழில் ஈச முனம் கண்ணப்பருக்கு அருள் தந்தவ-அழகியவீசனே முற்காலத்தில் கண்ணப்ப நா யனுருக்குக்கிருபையைக்கொடுத்தவனே, ஆரூரென களித்து மண் அப்பு அரும் புற்றிடங்கொண்டு வாழ் வில்லை வான வனே-திருவாரூரைப்போல வுவகைகொண்டு மண்ணாலப் பியவருமையான புற்றிடமாக விருந்துவாழுகின்ற வில்லை ப்பதியையுடைய சிவபெருமானே. (அ௩)

வில்லையந்தாதி யெனுமாலைசாத்தினன் மென்பதத்தில்
நல்லையந்தாதிக ழும்மலரோய்மறைநண்ணுபொருள்
சொல்லையந்தாதி யெனக்கேட்டவல்ல சுதனைத்தந்தோய்
பல்லையந்தாதிற் றிகழ்வில்லைமேய பரமகொள்ளே.

(இ-ள்.) வில்லையந்தாதியெனும் மாலைசாத்தினன் மெ ன்பதத்தில் - வில்லையந்தாதியென்றுசொல்லும் பாமாலை யைமிருதுவாகிய திருவடியிலணிந்தேன், நல்லையம் தா திகழும் மலரோய்-நல்ல வுலகத்தைச் சிருட்டித்துவிளங்கும் பிரமனே, மறை நண்ணு பொருள் அந்தாதி சொல்லை யென கேட்டவல்ல சுதனை தந்தோய் - வேதமுதலாகிய பிரணவத்தில் பொருந்திய வர்த்தத்தை யாதியோடந்த

மாகச் சொல்வாயென்று வினவின வல்லமைபொருந்திய புத்திரனாகிய முருகக்கடவுளை யீன்றவனே, பல்வையம் தா தில் திகழ் வில்லை மேய பரம கொள் - அநேகரதங்கள் பொன்போலப் பிரகாசிக்கின்ற வில்லைப்பதியி லெழுந்தரு ளிய சிவபெருமானே யங்கீகரித்துக்கொள், எ-அ. (அச)

கொள்ளிடஞ்சூழும் புகலியர்கோன்கவி கூறவருள்
கொள்ளிடஞ்சேருமை யாடனப்பால்கொடுத்தோய்முதிரை
கொள்ளிடஞ்சால்வளப்புன்செயுநன்செயுங் கூடும்வில்லை
கொள்ளிடஞ்சீலநம் பாவென்னையாளக் குறிப்பையின்றே.

(இ-ள்.) கொள்ளிடம் சூழும் புகலியர்கோன் கவி கூற - கொள்ளிடநதியானது சூழுகின்ற சீர்காழியின் கண்ணவத ரித்த சம்பந்தசுவாமிகள் திருமுறையாகிய தேவாரப்பதி கங்கள்பாட, அருள்கொள் இடஞ்சேர் உமையாள் தனப் பால் கொடுத்தோய்-அருளே வடிவமாகக்கொண்ட விடது பாகத்திலிராநின்ற பார்வதிதேவியாரது திருமுலைப்பாலைக் கொடுக்கச் செய்தவனே, முதிரை கொள் இடு அம் சால் வளம் புன்செயும் நன்செயும் கூடும்வில்லை - துவரையுங் கொள் முதலியதானியங்களும் விதைக்கத்தக்க வழகிய வளப்பமிகுந்த புன்செய் நிலங்களும் நன்செய் நிலங்களுஞ் சூழுகின்ற வில்லைப்பதியை, கொள் இடம் சீலநம்பா இன் றே என்னையாள குறிப்பை - இடமாகக்கொண்டருளிய சீலனாகிய நம்பனே யிப்போதே யடியேனை யாட்கொள்ளக் கிருபாநோக்கம் வைப்பாய். (அரு)

குறித்தநற்றென்னவனுக்கூடறன்னிற்செங் கோற்செலுத்
[தித்
தெறித்தநற்கைதடிந் திட்டவன்வாழ்வில்லை சேருநம்ப
வெறித்தநத்தம்புரி வேலுக்குமையல்செய் மெல்லியலி
னெறித்தநங்கண்ட வுடன்மனங்கண்டில னின்றனனே.

(இ-ள்.) குறித்த நல் தென்னவனு கூடல் தன்னில் செங் கோல் செலுத்தி-நிச்சயித்த நல்ல பாண்டியனாக மதுரையி லரசாக்ஷிசெய்து, தெறித்து அனல் கை தடிந்திட்டவன் வாழ் வில்லை சேருநம்ப - பாய்ந்து அக்கினிபகவானுடை யகையை வெட்டினவனாகிய சிவபெருமான் வாழுகின்ற வில்லைப்பதியிற் சேர்ந்திராநின்ற நேயனே, வெறித்து

சிவசங்கராவரு ளென்றன்பரேத்த றிகழ்வில்லைசேர்
பவசங்கராரெழிற் கூடற்றலைவ பழவினையால்
அவசங்கராப்பற்று குஞ்சரம்போற்கொண் டலைந்தனின்ப
தவசங்கரானைதந் தோயருள்வாய்நின் றனிக்கதியே.

(இ-ள்.) சிவசங்கரா அருளென்று அன்பர் ஏத்தல் திகழ் வில்லை சேர்பவ - சிவசங்கரனே கிருபைசெய்வாயென் றடியார்கள் துதிசெய்தல் விளங்குகின்ற வில்லைப்பதியி லெழுந்தருளியிருக்கின்றவனே, சங்கர் ஆர் எழில் கூடல் தலைவ-சங்கத்தார்கள் நிறைந்துள்ளவழகையுடைய மதுரையில் பாண்டியனாகவந்தவனே, பழவினையால் கரா பற்று குஞ்சரம்போல அவசங்கொண்டு அலைந்தேன் நின்பதவசம-பூர்வவினையினால் முதலை வாயில் பிடிபட்டயானையைப்போலப் பரவசங்கொண்டு பிறவிக்கடலிலலைவுற்றேனினது திருவடிவசத்தில், கரானைதந்தோய்நின் றனிககதி அருள்வாய்-துதிக்கையையுடைய யானைமுகக்கடவுளைப்பெற்ற சிவபெருமானே நினதொப்பற்றகதியைக் கிருபை செய்யவேண்டும், ஏ-அசை. (௯௧)

கதிரவன்றேர்ப்பரி தாவப்பொழிலிற் கனிகளதிர்ந்
துதிரவன்மந்தி கறித்தெறிந்தாடிடு மொப்பில்வில்லைக்
கெதிரவன்மீக வருவாயமர்ந்த விறையவற்கூ
னதிரவன்னக்கொடு நஞ்சாமறிந்திடு நன்மொழியே.

(இ-ள்.) கதிரவன் தேர் பரி தாவ பொழிலில்-சூரியனிரதத்திற்கட்டிய குதிரைகள்பாய சோலைகளிலிராநின்ற, கனிகள் அதிர்ந்து உதிர வல் மந்தி கறித்து எறிந்து ஆடிடும் ஒப்பில் வில்லைக்கு - பழங்களதிர்ச்சிகொண்டு சிந்தவவைகளை வலிமையுள்ள குரங்குகள்கடித்து வீசிவிளையாடுகின்ற நிகரில்லாத வில்லைப்பதியில், எதிர் அவன்மீக வருவாய் அமர்ந்த இறையவற்கு ஊனது இரவன்ன கொடு நஞ்சம் அறிந்திடு நன்மொழியே-தோன்றுகின்றவந்தப் புற்றுருவமாக வெழுந்தருளிய சிவபெருமானுக் குணவானது இருளையொத்த கொடியவிடமாம் தெரிந்துக்கொள் நல்லவசனத்தையுடையமாதே. (௯௨)

நற்சோலககாவளைதக் கிள்ளைவிடாதளி நாண்மலரின்
முனகோலககாவம ருமமலைவபோல்வில்லை முன்னவனே
பொற்கோலக்காவுறை யென்னரசேதுட்ட புத்திவிட்டு
நிறகோலக்காவென் றடுத்தேன்விடாதரு ணிட்களனே.

(இ-ள்) நல் சோலம காவளைத கிள்ளை விடாது அளி நாள் மலரின் முன்கோலம கா அமரும-நல்லவழகிய சோலையை க கிளிப்பிள்ளைகள்விடமாட்டாது வண்டுகளன்றலரும்புட் பங்களின்முன்னே தழுவுதல்செய்துவலியோடுபொருந்தும், அவைபோல் வில்லை முன்னவனே - அவைகளைப்போல் வில்லைப் பதியிலெழுந்தருளிய முதன்மையானவனே, பொன் கோலக்காவுறை என்னரசே துட்ட புத்திவிட்டு-இலக்குமீகரமுள்ள திருக்கோலககாவென்னூர் தலத்திலெழுந்தருளிய வெனதரசே யற்பபுத்தியைவிட்டுவிட்டு, நிற்கு ஓலம காவென்று அடுத்தேன் விடாதருள் நிட்களனே- தேவரீருக்கபையம் காப்பாற்றுவாயென்று சேர்மதேன் நிட்களவடிவானவனே கைவிடாது கிருபைசெய்வாயாக, (௬௯)

களங்கரியார்பொழில் சூழ்வில்லைவாழ்கின்ற கர்த்தரவை
குளங்கரியாக வரிபுலிகாணக் குனித்தவர்பால் [க்
விளங்கரியாரணேற் கொண்டோரொற்கோதினர் மேவலர
களங்கரியாதவர் சொள்கைகண்டேயுரை காரிகையே.

(இ-ள்.) களங்கரியார் பொழில் சூழ் வில்லை வாழ்கின்ற கர்த்தர்-கண்டங்கறுத்தவர் சோலைகளசூழ்ந்த வில்லைப்பதியில் வாழுகின்றகடவுள், அவைக்குள் அம கரியாக அரி புலி காண குனித்தவர் பால்-சபைக்குளழகிய சாக்ஷியாக பாமபாகிய பதஞ்சலியும் வியாக்கிரபாதருந்தரிசிகக கிருத்தஞ் செய்பவர் பக்கத்தில், விளங்கு அரி ஆரணன் கொண்டோர்-விளங்குகின்ற திருமாலையும் பிரமனையுங்கொண்டவர், எற்கு ஓதினர் மேவலர் அகளங்கர் காரிகையே இயாதவர்கொள்கை கண்டே உரை - எனக்கு வருகிறேனென்று சொல்லிப் போனவர்வரவில்லை களங்கரகிதர் பெண்ணே யவர்தன்மையென்ன வதையறிந்து சொல்லுவாயாக. (௭௰)

ஏகாதிபத்தியம் பூண்டுய்க்கவந்த வெலிதனக்கும்
ஏகாதிபத்தியம் பூண்டலகாள விளிதளித்தோ

ஏகாதிபத்தியம் பூண்டுறவோர்தமக் கீவளித்தே
ஏகாதிபத்தியம் பூண்டுன்னும்வில்லை யிலங்கரனே.

(இ-ள்.) ஏகா திபத்து இயம்பு ஊன் துய்க்கவந்த எலித னக்கும் - ஏசனே திபத்திலிடத்தில் சொல்லப்பட்ட வுணவாகிய நெய்யைக்குடிக்கவந்த வெலிக்கும், ஏகாதிபத்தியம் பூண்டு உலகாள இனிது அளித்தோயே-ஏகச்சக்கராதிபத்தியந்தரித்துலகத்தையாளும்படிக்கு நன்மையைக்கொடுத்தவனே, அதிபத்தி அம் பூண் துறவோர்தமக்கு ஈவு அளித்து கா - மிகுந்தபத்தியுஞ் சிறப்பாகத் திருவேடந்தரித்ததுறவோர்தமக் குதவுதலையுங்கொடுத் தென்னை யிரக்ஷி, இபத்து இயம் பூண் துன்னும வில்லை ஏகாது இலங்கு அரனே- யானைமேன்முழங்கும் பேரிகை தனக்காபரணமாக நெருங்கப்பெற்ற வில்லைப்பதியில் நீங்கிப்போகாமல் விளங்காநின்ற சிவபெருமானே. (கரு)

அங்காரப்பாறரு மாய்நீப்பினும்பிள்ளை யாயைவிடா
திங்காரமாம்பலைத் திங்கள்விட்டாலுமல் வேய்மலர்தான்
சிங்காரமாயடுக் கும்மலைபோல்வில்லை சேர்பரனே
உங்காரஞ்செய்துவிட் டாலுமவிடேனுன்னை யுத்தமனே.

(இ-ன்.) அங்கு ஆர பால் தரும் ஆய் நீப்பினும் பிள்ளை ஆயைவிடாது-அவ்விடத்துப்போதுமான முலைப்பாலைக்கொடுக்குந்தாயானவள் நீக்கிவிட்டாலுஞ் சேயானது தாயைவிடமாட்டாது, இங்கு ஆர் அம் ஆம்பலை திங்கள்விட்டாலும் அ வேய் மலர்தான் சிங்காரமாயடுக்கும் - இவ்விடத்திற் பொருந்தியவழகையுடைய வல்லியைச் சந்திரன்விட்டுவிட்டாலுமந்தப் பொருந்தியமலரானது அலங்காரமாக வதைச்சேரும், அவைபோல் வில்லை சேர் பரனே - அவைகளைப்போல வில்லைப்பதியிலெழுந்தருளிய கடவுளே, உங்காரஞ்செய்துவிட்டாலும் உன்னை விடேன் உத்தமனே-உம்மென்றுரப்பிவிட்டாலும்தேவரீரை விடமாட்டேன் உத்தமசொரூபனே.

உத்தமவத்தி யுரியாயிங்கென்றுன் பொழித்தால்ல
சித்தமவத்தையி னுன்றனைச்சிந்திக்கச் செய்யெழிலார்
மத்தமவத்தி மதிநிலவன்னியும் வாய்சடையாய்
சுத்தமவத்திய மாவுதைத்தோய்வில்லை தோய்பவனே.

(இ-ள்.) உத்தம அத்தியுரியாய் இங்கு என் துன்பு ஒழித்து நல்லசித்தம் அவத்தையில் உன்றனைச் சிந்திக்க செய்-உத்தமனே யானைத்தோலையுடையவனே யிவ்விடத்தி லடியேனது துன்பத்தைநீக்கி நல்லசிந்தைவந்து சரமதிசையி லுன்னைத் தியானிக்கச்செய்வாய், எழிலார் மத்தம் அ அத்தி மதி நதி வன்னியும் வாய் சடையாய்-அழகுபொருந்திய வூமத்தம்பூவு மந்தவெலும்புஞ் சந்திரனுங் கங்கையும் வன்னிப்பத்திரமும் பொருந்திய சடாபாரத்தையுடையவனே, சுத்த மவத்தியமா உதைத்தோய் வில்லை தோய்பவனே-சுத்தனே இயமனைமரணமாகும்படி யுதைத்தவனே வில்லைப்பதியிலெழுந்தருளி யிருக்கின்றவனே. (கூஎ)

தோயந்தருமுத்த மாநதிசூழ்முது தொல்குன்றன்று
ணேயந்தரும குணத்தர்க்குசசெய்பவ னீணிலத்தா
ஆயந்தருமல ராலருச்சிக்க வடருவிர்நுங்
காயந்தருமன் கொடுபோகுமுன்வில்லைக் காத்தனையே.

(இ-ள்.) தோயந்தரும் முத்தமாநதி சூழ் முதுதொல்குன்றன் - வெள்ளத்தையுடைய பெருமைபொருந்திய திருமணிமுத்தாநதி சூழுகின்ற பழமலையையுடையவன், தாள் நேயம் தருமகுணத்தர்க்கு செய்பவன் நீள் நிலத்தீர்-தனதுதிருவடி நேயத்தைத் தருமகுணமுடையவர்களுக்குச செய்பவன் நீண்ட பூமியிலுள்ளவர்களே, ஆய் அம தரு மலரால் அருச்சிக்க - ஆய்ந்தெடுத்தவழகிய மரத்தினது புஷ்பங்களாற் பூசைசெய்ய, நுங்காயம தருமன் கொடுபோகுமுன் வில்லைக்கர்த்தனை அடருவீர் - உங்கள் தேகத்தை யியமனுனவன் கொண்டுபோகுமுன்னமே வில்லைப்பதியிலெழுந்தருளிய சிவபெருமானைச் சாருங்கள், எ-அசை. (கூஅ)

வில்லிடுமாமணிச் சூட்டுறுஞ்சேடனர்ச் சித்தவில்லை
சொல்லிடும்பைத்தொலைத் தன்பனையாண்டிடத் தோன்று
வல்லிடும்பற்கருள் கந்தனைப்பெற்றிடு மங்கைபங்கா [ம்பர
தொல்லிடுக்கார் கட நீங்குஞ்சமயமுன் றேன்றுவையே.

(இ-ள்.) வில்லிடும் மா மணி சூட்டுறும் சேடன் அர்ச்சித்த வில்லை - பிரகாசிக்கின்ற பெருமைபொருந்திய ரத்னத்தைச் சிரசிலேயுடைய ஆதிசேடன்பூசைசெய்த வில்வைப் பதியில், சொல் இடும்பை தொலைத்து அன்பனை ஆண்டிட்

தோன்றும் பர - சொல்லப்பட்ட துன்பத்தைநீக்கியடியார்
களை யிரக்ஷிக்கவெழுந்தருளிய கடவுளே, வல் இடும்பற்கு
அருள் கந்தனை பெற்றிடு மங்கை பங்கா - வல்லமைபொரு
ந்திய விடும்பனுக்குக் கிருபைசெய்த முருகக்கடவுளை யீன்ற
வுமாதேவியாரைப் பாகத்திலுடையவனே, தொல்விடுக்கு
ஆர் கடம் நீங்கும் சமையம் முன் தோன்றுவை-பூர்வவினை
பொருந்திய தேகமானது நீங்கிப்போகுந்தருணத்தில்அடியே
னுக்கெதிரில்வந்து காட்சிதருவாய், ஏ-அசை. (௯௯)

வையகந்தந்த மலைமாதிடத்த வசுந்தரையாம்
வையகந்தரு காவில்வைவாணநின் வார்புகழ
வையகந்தந்தமைத் தேயரங்கேற்றினன் வாழ்விலெனை
வையகந்தந்தம தென்சிரழிவினை மாற்றியின்னே.

(இ-ள்.) வையகம் தந்த மலைமாது இடத்த - உலகத்தை யீன்றருளிய உமாதேவியை யிடப்பாகத்தில் வைத்தவனே, வசுந்தரை ஆம் வைய - பூமியாகிய ரதத்தையுடையவனே, கந்தம் தரு கா வில்லை வாண-பரிமளம்வீசாநின்ற பூஞ்சோலைசூழ்ந்த வில்லைப்பதியில் வாழ்பவனே, நின் வார புகழ் தந்து அமைத்து ஏ அவையகம் அரங்கேற்றினன் - நினது பெரும்புகழை (அந்தாதியென்னும்) நூலாகச்செய்து (அதனை நினது திருமுன்கூடிய) சபையில் அரங்கேற்றினன் (ஆதலால்) அகம் தந்தமது என்சிரழிவினை மாற்றி - யான் எனது என்னும்சீர்க்கேட்டை நீக்கி, எனை இன்னே வாழ்வில் வை-அடியேனை இப்போதே நித்தியவாழ்வில் வைத்தருளவேண்டும், எ-று. (௱)

வாழி.

வாழியருள்செய்கா மீசர்குயிலம்மை வண்குமரன்
வாழிசுரர்மறை வில்லையந்தாதியு மாநதியும்
வாழிதென் வில்வ வனத்தன்பர்யாவரும்வாழியென்றும்
வாழிநற் கல்வி மடத்துமெஞ்ஞான மகாமுனியே.

முற்றிற்று.

சிவமயம்.

வில்வவனக் கோகிலாம்பிகை மாலை.

காப்பு.

நேரிசை வெண்பா.

பொற்பார் பொழில்வில்லை போற்றுகுயி லம்மையின்மேல்
அற்பார பாமாலை யறைவதற்கு—விற்பனமார்
கும்பமுனி யங்கைகொண்ட குண்டிகையை யன்றுகவிழ்
தும்பிவத்திரன்றாள் துணை.

நூல்.

எழுசீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பொற்பமர்ந்திலகு மளகமாமுகிலும
  பொலிவுறு நுதலெனுந் தனுவும
விற்பனவடியா பவமொழிவிழியாம
  வேலுடன் னாசியாங் குமிழும்
பற்களாமுத்தும் பாதமாமலரும
  படிறனேன காணுநா ளுளதோ
அற்புதந் திருககா மீசர்பாகத்தா
  ரணிவில்லைக்கோகிலாம பிகையே. (க)

பாண்டியன்வேள்வி தன்னின் மேவாண்டு
  பகரரும்புதல்வியா வந்து
மாண்டருமதுரை யாண்டிடுமரசே
  வஞ்சனேற்கருளுநா ளுளதோ
வேண்டுபொன்மன நிற் றுண்டவஞ்செய்,
  விமலர்காமீசர்பா கத்தார்
ஆண்டகையரச ரீண்டியேவாழு
  மணிவில்லைக்கோகிலாம் பிகையே. (உ)

கோகிலாம்பிகை மாலை.

சலத்தினிலுதிக்குங் குமிழியையிகசரிச்
சடத்தினைநிலையென வெணியெத்
தலத்தினுந்திரிந்து பொருளினுற்பவத்தைச
சந்ததந்தேடிச்சா கரஞ்சேர்
கலத்தின்பாய்மரத்தி லகப்படுங்கொடிபோற்
கலங்குமெற்கருளுநா ளுளதோ
அலர்த்தடமமர்ந்த கற்பககொம்பே
யணிவில்லைக்கோகிலாம் பிகையே. (௩)

இருதலைக்கொள்ளி யெறும்புபோல்வருந்து
மேழையேன் றன்பொழித் துனது
விரிதருங்கமல பதங்களைத்திருக்க
விடலியேயருளுநா ளுளதோ
கரியமால்செய்பூ சனைக்குகந்தாழி
களித்துடனளித்தகா மீசர்
அரியநற்பாக மமர்ந்தமாவமுதே
யணிவில்லைக்கோகிலாம் பிகையே. (௪)

சனனமாம்வாரி யிடையிற்சன்மமதாந்
தாவலைமோதிட நெஞ்சம
அனுதினமெலிவுற் றிருக்குமென்றனையுன்
னருளெனும்புணைதனைத் தந்து
வனசநற்பதமாந் தீரத்திற்சேர
வைத்திடுங்காலமு முளதோ
அனககாமீசர் பாகமதாரு
மணிவில்லைக்கோகிலாம் பிகையே. (௫)

சிவபிரான்முன்னந் தனக்கிறைவனுக்குன்
திருமுலைப்பாலூறச் செய்து
நவமுறப்பாடச் செய்தனரதுபோ
லுயினேற்கருள்சிறி தளித்துப்
புவனமெச்சிடப்பா டிடும்வகைசெய்வாய்
போதன்மால்போற்றுகா மீசர்
அவமிலாவிடப்பா சத்தமர்மயிலே
யணிவில்லைக்கோகிலாம் பிகையே. (௬)

இருபடிநெற்கொண் டருபதோடீரா
றியலறமவளர்த்ததா யேயென்
பொருமிடியகற்றிப் பெருமிய சுகத்திற்
பொருந்திடவருளுநா ளுளதோ
வருமுயலகன்மேற் றிருவடியூன்றி
மாநடம்புரிந்தகா மீசர்
அருமைசேரிடத்தின் மருவிவாழ்பவளே
யணிவில்வைக்கோகிலாம் பிகையே. (எ)

குயின்மொழிமடவார் மயலினிற்சிக்கிக்
குலையுமென்மனநினை தரிய
வெயின்மிகுவனசம் பயிலடியுன்னி
வினையொழிந் திருந்திட வருளாய்
மயிலிவாகுசனைச் செயிரறவளித்த
வள்ளல்காமீசர்பா கத்தார்
அயினிகர்விழியாய் கைலையையொக்கு
மணிவில்வைக்கோகிலாம பிகையே. (அ)

மூடரைக்கும்ப முனியெனவுரைத்து
முதுக்குறைவின்றியே திரிவேன்
தேடருஞ்சடையின் முடியநாதன்
றேவியேயென்றுதா னுன்னைப்
பாடிநல்லருளைப் பெறுகிலேனித்தப்
பாவியேனுய்வதெவ் வகையோ
ஆடரவணிகா மீசர்பாகமதா
ரணியில்வைககோகிலாம பிகையே. (கூ)

சரவணபவசண் முககுகவயிலைத்
தரித்திடுகார்த்திகை குமர
பரவடியர்களுக் கருள்செயுமுருக
வெனவுனற்சுதன் றனைப் பரிவாய்க்
கரமலர்குவித்துப் பாடிடவருளாய்
கதிர்மதிநதியிள மறுகோ
டரவையும்புனைகா மீசர்பாகத்தா
ரணியில்வைக்கோகிலாம் பிகையே. (௧0)

நதிபுரிநாவுங் கூப்பிகரமுந்
துய்யநன்மலர்நிகா முகத்திற்
மதியும்வெண்ணீறு மடைந்துநின்கோயிற்
பரிவுடன்வலமபுரி யடியர்
புதியநற்கமல வடிப்பொடிமெய்யிற்
படவருள்புரிகுவை தாயே
அதிகராகியகா மீசர்பாகத்தா
ரணிவில்லைக்கோகிலாம பிகையே. (கக)

அடியவர்பணிசெய் திக்கடம்வருந்தி
யயரவும்வஞ்சர்நட் பிகந்து
நடுநிலைமையினி னிற்கவும்பொய்யை
நவின்றிடாதிருக்கவு மருளாய்
கொடியசூர்களைந்த வடியயில்கரங்கொள்
குகன்றனைத்தந்தகா மீசர்
அடைவுறுமிடப்பா கத்தமர்மயிலே
யணிவில்லைக்கோகிலாம் பிகையே. (கஉ)

கரும்பகட்டேறிப் பெருங்கதைபாசங்
கரங்களிற்கொண்டெம னென்னேர்
வருமுனம்வடிவேற் கந்தனுமானில்
வள்ளலாம்பரமனு நீயும்
மருவிவந்தஞ்ச லென்னுநாளுளதோ
மான்மழு தரித்தகா மீசர்
அருகினிலமருங் கருணைவாரிதியே
யணிவில்லைக்கோகிலாம் பிகையே (கங)

நாள்களுங்கோளு நலியும்வெங்கூற்று
நண்ணுறுவினையுமென் செயுநின்
றாளிணைதுதிக்கு மன்பரைக்காக்குந்
தண்விழியருளெனக் கிருக்கில்
காளியோடொருகா லன்றுமாநடத்தைக்
களிப்புறப் புரிந்தகா மீசர்
ஆளிடப்பாக மமருமாவமுதே
யணிவில்லைக்கோகிலாம் பிகையே. (கச)

கற்பனைகடந்த வொருபொருணிலையைக்
  கண்டுபேரின்பசா கரத்தில்
பொறபுறத்திளைக்கும் புண்ணியர்க்குதவப்
  பொருந்திடுந்திருவருள் புரிவாய்
விறபனமுனிவா எடுங்கிடவந்த
  வெங்களிறுரித்தகா மீசா
அறபுறும் பாகத தமர்ந்தகாருணியே
  யணிவில்வைககோகிலாம் பிகையே. (கரு)

பத்திசெய்தறியேன் பண்புறுமன்பர்
  பணியையும்புரிந்திட வறியேன்
உத்தமநூலா ராய்சசிசெய்தறியே
  னுன்மத்தனுயினே னருளாய்
சததவாரிதிபொன் மாலைநீராடத்
  தககணம்வரச்செய்கா மீசா
அததபாகததி லமரொளிவிளககே
  யணிவில்வைககோகிலாம் பிகையே. (கசு)

ஓதியுமுணர்ந்தும் பிறர்தமக்குரைத்து
  மடங்கியேயொழுகிடாச் சுத்த
பேதையிற்பேதை யாரிலவொன்ற
  பெருந்திருவள்ளுவர் மொழிக்குச்
சாதமாரிலக்கா விருந்தரான் றிருநதத்
  தண்ணருள்புரிவையோ தாயே
ஆதியாகியகா மீசர்பாகத்தா
  ரணிவில்வைககோகிலாம் பிகையே. (கஎ)

பண்டுசெய்வினையான் மானிடப்பிறப்பிற்
  படிறனேனுதித்தகல் லன்பார்
தொண்டர்தங்குழுவிற் கூடிநின்னடியைத்
  துதித்திட வறிகிலே னருளாய்
மண்டெழின்மதுரைச் சங்கசகீரற்
  கிலக்கணம்வழுவற வுரைத்த
அண்டர்கடுதிகா மீசர்பாகத்தா
  ரணிவில்வைக்கோகிலாம் பிகையே. (கஅ)

தீமையேபுரியுந் துட்டர்தங்குழுவிற்
  சேர்ந்திடாதுன்னையெஞ் ஞான்றும்
வாய்மையோடொழுக்க முடன்றுதிபுரிந்து
  வல்வினையொழித்துநற் சமாதி
தூய்மைசோகிலைகா னடைகுவதென்றோ
  சுகுணிசுந்தரிதிரி கோணி
ஆமதிபுனைகா மீசர்பாகத்தா
  ரணிவில்வைக்கோகிலாம் பிகையே. (௧௯)

செப்பரும்பஞ்சு பட்டிடும்பாடுந்
  தீயனேன்பட்டிடும் பாட்டுக்
கொப்பலதாயே யினியெனுன்முடியா
  துன்னடிக்கடைக்கல மருளாய்
முப்புவனங்கள் போற்றிடவிமய
  முளைத்ததீஞ்சுவைமிகு கரும்பே
அப்பணிசடைக்கா மீசர்பாகத்தா
  ரணிவில்வைக்கோகிலாம் பிகையே. (௨௦)

முன்னம்யான்செய்த வெவ்வியவினையான்
  முனிந்தெமனுனடுங் கிடவே
பன்னரும்பாசத் துடனெதிர்வருமுன்
  பாவியேற்கபயமீந் தருளாய்
இன்னிசைமிகுந்த விறலிவென் றிடவோ
  ரிரும்பெரியோனென வந்த
அன்னங்காணுக்கா மீசர்பாகத்தா
  ரணிவில்வைக்கோகிலாம் பிகையே. (௨௧)

செபதபமுதலி யவைகளைநடத்தச்
  சிந்தையிலுன்னுமுன் னெதிர்த்தே
இபமெனக்கோபஞ் சோபமோசமுமவ்
  விடுக்கணைப்புரிகின்ற வந்தோ
சுபமிகுவிளங்கு நித்யகல்யாண
  சுந்தரிதொலைத்தரு ளன்பர்க்
கபயமீந்திடுகா மீசர்பாகத்தா
  ரணிவில்வைக்கோகிலாம் பிகையே. (௨௨)

இன்னியவரக்கர் குலமறவென்ற
  செந்திருமார்பனோ டயனும
நன்னூலின்னருளாற் றங்களின்றொழிலை
  நடத்தவொன்னிலுன் புகழை
எண்ணூறவெடுத்துச் சொல்வதறெளிதோ
  வேழையேற்கன்னையே நலல
அண்ணல்காமீச ரிடத்தினிலமரு
  மணிவில்லைக்கோகிலாம் பிகையே. (உ௩)

ஏர்திகழ்நினது வடிவினைக்கண்டென்
  னிருவிழிகளுமன முமமே
சீர்திகழ்ந்திடுமா னந்தவெள்ளத்திற்
  றிளைத்திலசெப்புதற கரிதாம
நார்திகழ்ஞானமு விளங்கிலதாயே
  நாயினேனுய்வதெவ் வகையோ
ஆர்திகழ்சடைக்கா மீசர்பாகத்தா
  ரணிவில்லைககோகிலாம் பிகையே. (உ௪)

சந்ததம்வாளாப் பலிதனைக்கொள்ளுஞ்
  சங்கடமிகுதெய்வங் களையென்
சிந்தையிலென்றுஞ் சிந்தியாதுன்னைச
  சேந்தனைச்சிவபெரு மானை
அந்திநற்பகல்கா லையிலும்வேலையதா
  வன்புடன் றுதிசெய வருளாய்
அந்தரர்துதிகா மீசர்பாகத்தா
  ரணிவில்லைக்கோகிலாம பிகையே. (உ௫)

கனல்புனனிலம்விண் கான்மதியிரவி
  காரிருள்பகல்பல வுயிர்கண்
மனுமிவைகளிற்பூ மணநறும்பாலின
  வழுத்தருஞ்சுவையெனக் கலந்த
வனமிகுமயிலே யடியனேன்புன்மை
  மாற்றிநல்லருள்செய வென்றே
அனகர்கடுதிகா மீசர்பாகத்தா
  ரணிவில்லைக்கோகிலாம் பிகையே. (உ௬)

செழியர்கோன்மகளா யுதித்துலகாண்ட
 செல்வியேநின்கடை விழிகள்
பழியிலாவடிய ரென்பவர்க்கரிய
 பாக்கியங்கல்வியுங் கதியும்
ஒழிவறக்கொடுக்கு மென்னிலுன்பெருமை
 யுரைக்கவிவ் வெளியனாற் றகுமோ
அழிவிலாத்திருக்கா மீசபாகத்தா
 ரணிவில்லைக்கோகிலாம்பிகையே. (௨௭)

கலைதெரிமகளு மலைவருமகளுங்
 கலந்துநின் பொன்னடி குறித்து
மலைமகளென்று வழுத்திரா தழும்ப
 வந்தனைபுரிகுவ ரென்றால்
புலையனேனுன்னை புகழ்ச்சியாச்சொலும்ப
 புன்கவிக்குகந்தரு ளுவையோ
அலைநதியணிகா மீசபாகத்தா
 ரணிவில்லைக்கோகிலாம்பிகையே. (௨௮)

செய்திடுங்குறைக ளொழிந்திடநினது
 திருவடிதுதிசெயதே னினியான்
வையகந்தன்னி லுதித்திடினினது
 குறையன்றியார்குறை வழுத்தாய்
தையல்பொன்னனையாட் கருடரச்சித்த
 சாமியாய்வந்தகா மீசர்
ஐயமரிடப்பா கத்தொளிரணங்கே
 யணிவில்லைக்கோகிலாம்பிகையே. (௨௯)

பருப்பதமுளைத்த தீஞ்சுவைக்கரும்பே
 பவளமால்வரைபடர் கொடியே
விருப்பொடுதுதிக்கு மிடியனேற்கிரங்கி
 விழியருள்சுரந்தருள் புரிவாய்
செருப்புரிவிசய னலம்பெறவெதிர்த்துச்
 செப்பரும்போர்செய்கா மீசர்
அருத்தமாரிடத்தி லமரொளிவிளக்கே
 யணிவில்லைக்கோகிலாம்பிகையே. (௩௦)

முற்றிற்று.

உ

முருகன்றுணை.

வில்வவனத்தில் திருக்கோலங்கொண்

டெழுந்தருளியிருக்கும்

முத்துக்குமாரக்கடவுள்பேரில்

பஞ்சரத்தினம்.

காப்பு.

நேரிசைவெண்பா.

மஞ்சுதிகழும்பொழில்சூழ் வண்மைவில்வைவேண்மீது
பஞ்சரத்தினத்தைப் பகாவதற்கு—விஞ்சு
நலம்புரியுஞ் சங்கரனார் நல்குஞ்சுதனாம
வலம்புரிவி நாயகனை வாழ்த்து.

நூல் - வண்ணச் சந்தவிருத்தம்.

மலரார்ந்தரு துன்றியிலங்கிய - ககனந்திக ழிந்திரனென்று
மதிமங்குத லண்டிடவெண்டிசை - களின்மேவா, [நன்

மருள்கொணடிடு வஞ்சகநெஞ்சர்கண்
கவிசெந்தமிழ் சந்ததமுஞ்சொலி
வளமின்றுதி ரிந்துதிரிந்தன
னவமாயே,

மெலிகின்றனன் மஞ்சுதினந்திகழ் - மலைநின்றுபி றந்திடு
[மம்பிகை
விழைவொன்றும ருஞ்சுதனென்றுந-லுளமோடே,

வெருவிந்தையி தென்றெவருஞ்சொல-நகுசந்தமி குந்துபுக
ழிணைநின்றுமொ ழிந்திடவந்தருள்-புரிவாயே, [ன்றிட

அலையொன்றுக ருங்கடன்மண்டிய
வலைகின்றவி லங்கைபொருந்திய
வசுரன்சிர மண்டனில்சிந்திட
சினமோடே,

அறையுங்கலை யுந்துமுகுந்தனின்-மருமந்திக மூந்திருவென்
மலர்மங்கையு வந்தருளுந்திரு-மருகோனே, [றிடு

மலைதங்கிய வன்குறமங்கையை
நலமிஞ்சபு னந்தனில்வந்ததி
மயல்கொண்டும ணந்துமகிழ்ந்தருள்
முருகோனே,

வனசங்களு மஞ்சளுமிஞ்சியும்-விளைகின்றநி லங்கணிறைந்
[துள
வளமொன்றிய தில்லையிலங்கிய-குகவேளே. (௧)

அறிவுமங்க லுற்று - முனம்வருந்தி மெத்த
வருமையென்றி ழைத்த - வினையாலே,

அறையுமந்த ரத்தின் - பிறையைவென்ற நெற்றி
யழகமைந்து முற்று - மதின்மேலே,

நறியமஞ்ச ளிட்ட - வடிவுகண்டு சொற்ப
நலமின்மங்கை கத்து - செயலாலே,

நவிலுகின்ற பித்த - விருமல்கொண்டு சத்தி
நலியுமென்ற னுக்கு - னருளாளு,

மறவிகந்த சுத்த - வலிடதங்கொ டுத்து
மணியமாந்தி சைக்கு - மணி மேவா,

மலர்களென்று ரைக்கும் - பதயுகஞ்சி ரத்து
மனமுவந்து வைத்தெ - னெனையாளாய்,

இறையிருந்த பத்தன் - றுதியுணர்ந்து பச்சைச்
சிகியில்வந்து விட்ட - முருகோனே,

திருமணஞ்சி றக்கப் - புரியும்தில்லை யுற்றுத்
திகழுகின்ற வத்த - குகவேளே. (௨)

சந்தந்தங் கைகந்தருவார்கிழல் - குந்தந்தம் பந்தியினூடயர்
தந்தந்தந் தந்தனதானென-டமாட,

சங்கும்பம் பம்மென வூதிட-அங்கங்குஞ் சிந்துசள்பா
தங்கும்பொங் கிந்திரனேமுத-லனைவோரும், [டி

வந்தஞ்செம் பஞ்செனவேதிகழ் - கஞ்சந்தன் றும்மிருசீரடி
மந்த்ரங்கொண் டன்புறவேசொலி-துதிமேலா,
    மண்டுந்திண் கந்திலையேமுறி-வம்புங்கொண்டண் டிய
    வஞ்சம்மிஞ் சும்படையோடட-னமனுனன், [மேதியல்
தொந்தங்கொண் டங்கரமேவிய-நஞ்சும்பொன் றுங்கயிறு
துந்துந்தும் மென்றெனையேயட-வருநாளே, [டெதிர்
    சுங்கந்தொங் குஞ்சிகிமீதினில்
    பங்கங்கன் றுந்திருமாதரின்
    துன்றங்கம் மிஙகிதமேகொள
    வருவாயே,
சந்தஞ்சந்தம் மகில்சூழ்தரு-விந்தந்தண் பண்பொடுசேூற
கண்டஞ்சும் விண்டநன் மாதவன்-பணிவேலா,
    சுந்த்ரந்துஞ் சும்மணிமேடைகள்
    எஙகெங்குந தங்கெழில்சூழ்விலக்
    கண்டங்குந் துங்கதயாபர
    குகவேளே. (௫)

பவவினையைப் புரியபவப்-பிறவியெடுத் தருமையெனப்
பகருமனுக் களினில்வரத்-தவமேவா,
    பரனடியைக் கருதறவிர்த்-தழுகொழுகப் புழுகனைநற்
    பழமொழியர்க் குருகிமனத்-தளர்வோடே,
அவமதியுற் றனனெனமித்-திரரிகழத் திரியுமெனக்
கதிகபலப் பலமணியிட்-டவையூடே,
    அவிரொளிபொற் பரிபுரமிட்-டடைவொடுமிக் கொலி
    கடிமலரைத் துதிபுரியத்-தருவாயே, [செய்மணக்
கவனமுறத் திகுதிகெனச்-சிறகொடுநிர்த் தனமிடுசொற்
கலபமயிற் பரியதனிற்-களியாயே,
    கருதுமடக் குமரிகளுக்-குவகைமிகக் கழலர்மனக்
    கவலையொழித் திடவருசத்-தியவேலா,
தவர்வெருவச் சுரரயரத்-துயர்புரிமுப் புரநகரிற்
றழலெரியச் செயுமரனுக்-கருள்வோனே,
    தமணியபொற் சிகரிகளிற்-புயல்கள்களித் துலவுவிலைத்
    தணிநகரிற் றிகழுயில்கைக்-குகவேளே. (௬)

முத்துக்குமாரக்கடவுள்பேரில் பஞ்சரத்தினம்.

ஞானமிருத்திடு முத்தர்கள்சித்தர்கள்-மோனமொனுச்சொரு
[பத்தர்கள்விற்பன
நாவலரற்புத மிக்கதவத்தர்கண்-முதலோரும்,

ஞாலமளித்தருள் வித்தகியுத்தமி
யாலிலையிற்றுயி லச்சுதனுக்கிளை
நாரணிதற்பரி சாக்குணிநிர்க்குணி
யபிராமி,

வானுலகத்தமு தொத்தமொழிச்சிமுன்-மேனையளித்திடு
[புத்திரிமுக்கணன்
வாமமதிற்றிகழ் சத்திதனக்கொரு-சுதனுகி,

வாரியின்மத்திமு ளைத்தெழுகொக்கினை
வேலினைவிட்டுமு றித்திடுநித்திய
வானவர்சொற்றுதி பெற்றிடுசிற்பர
வெனவோதும்,

கானவர்பெற்றகு றத்தியுவப்புறு-நாயகனத்தியு னைதொழு
[மெறகுநின
கான்மலரொத்தப தத்துணையைத்தர-வரவேணும்,

காதமணக்கும லர்க்கணைவைத்திடு
மேதமில்சித்தச னிற்றிகழுற்றிடு
காவலர்மெச்சுதி ருத்தணிகைப்பதி
யமர்வேலா,

சீனர்கள்பப்பர ரொட்டியர்குச்சரர்-மாளுவமக்கடு
[ருக்கர்கணமற்றுள
தேயமுமொக்கம கிட்சிகொளத்தரும்-வளமேவிச,

சீருறமுக்கிய நற்பொழில்பற்பல
வேருறவைத்தெழி லைச்செயமிக்கதி
சீதளமுற்றவில் வைப்பதிகச்சிய
குகவேளே.

முற்றிற்று.